

KALKI
4.2006 ரூ.8.00
30 பக்கங்கள்
கல்கி
குடும்பத்துடன் களிக்க...
தேர்தல்
ஸ்பெஷல் -I
சிரிப்பாய்ச் சிரிக்கும்
அரசியல்!
சிக்கலில்
செல்வி!

திருப்பதி

'கமர்ஷியல் ஹிட் வேணுமா? கூப்பிடுங்க பேரரசுவ'ன்னுதான் இனிமே எல்லாரும் பேசப்போறாங்க. தன்னோட முந்தைய படங்கள் மாதிரி திருப்பதியையும் மசாலாவாகப் படைச்சு, 'தல' ரசிகர்களுக்கு ஃபுல் மீல்ஸ் படைச்சிருக்கார் அரசு. கூடவே நடிச்சிருக்கார்; அடிச்சிருக்கார். திருப்பாச்சி, சிவகாசி மாதிரி இதுலயும் எதிர்பாராத சின்னச் சின்ன டெக்னிக் மூலமா படத்துக்குப் பலம் சேர்த்திருக்காரு.

'திருப்பதி சவுண்ட் சர்வீஸ்' நடத்துற மெலிஞ்ச அஜித் சீன்ல வந்தாலே தீப்பொறி பறக்குது. 'திருப்பதி இறங்கிப் போறவன் இல்லடா... ஏறிப்போறவன்'னு அவர் பன்ச் டயலாக் பேசும்போது தியேட்டர்ல புயலடிக்குது. சதாகூட ரொமான்ஸ் பண்றது, தங்கச்சி பாசத்துல உருகுறது, நண்பனோட துரோகத்த நினைச்சு பொங்கி எழுறதுன்னு அஜித் கலக்கல் கிங்தான். சதா, சதா தன்னையே மொறைச்சு மொறைச்சுப் பார்க்க வைக்குறாங்க, போதாதா? வயசுக்கு வர்றத வச்சு அஜித் - சதா காதல் டெவலப் ஆகுறது தான் முகம் சுளிக்க வைக்குது.

கொஞ்சமே வந்தாலும் மல்லிகாவும், தீபுவும் கண்கலங்க வச்சிடறாங்க. ரியாஸ்கான் யதார்த்த வில்லன். அண்ணனுக்காக உழைக்கறதும் பின்னாடி அவரையே கொல்றதுமா நடிப்புல பின்னியிருக்கார்.

போலீஸா வர்ற அருண்பாண்டியனும் பிரமிட் நடராஜனும்கூட குறை வைக்கல. பரத்வாஜ் மியூசிக்ல குத்துப் பாட்டுங்க ஆடியன்ஸ குத்தாட்டம் போட வைக்குது. 'திருப்பதி வந்தா திருப்பம்' பாடல் மிடுக்கு. ஒரு பாட்டுக்கு மட்டும் லைலா ஆடியிருக்காங்க.

வழக்கமா பேரரசு படத்துல அடிதடி இருக்கும், சென்ட்டிமெண்ட் இருக்கும். திருப்பதில கூடுதலா இன்னொன்னும் இருக்கு... மெசேஜ்! 'பிரசவத்தை ஆஸ்பத்திரிகள்ல இலவசமாக்



கணும்'ங்கற கருத்தை வலியுறுத்துது படம். தேர்தல் நேரத்துல கலைஞர், அம்மா, விஜயகாந்த்துக்கு பேரரசு ஐடியா கொடுத்திருக்கார்! அங்கங்க 'சிவகாசி' பாதிப்பு தெரியறத தவிர்த்திருக்கலாம். எது எப்படியோ, ஒண்ணு மட்டும் உண்மை... திருப்பதி மூலமா அஜீத்துக்கு இனி திருப்பம் தான்!

- லஜ்ஜாவதி

சென்னை அண்ணா நகர் பொதுப்பணித்துறை வளாகத்தில் மூர்த்தி - சீதா தம்பதிகளின் மகன் சுரேந்தர். சென்ற மாதம் எட்டாம் தேதி ராடன் தொலைக்காட்சியின் 'பங்காரம் மீக்கே' என்ற நிகழ்ச்சியின் படப்பிடிப்பில் கலந்து கொண்டான். நிகழ்ச்சி ஒளிபரப்பாக ஒரு மாதம் ஆகும் என்றார்களாம். சரத்தைத் தொடர்ந்து ராதிகாவும் அ.தி.மு.கவில் இணைய, 'சன்' குழுமத்தில் தொடர்ந்து ராடன் தொடர்கள் வருமா, என்று பெரியவர்கள் விவாதிக்க, சிறுவன் சுரேந்தர் 'அப்போ என் ப்ரோக்ராம் அவ்வளவுதானா?' என்று பெற்றோரை நச்சரித்துக் கொண்டிருக்கிறான். தமிழில் தங்கவேட்டை, தெலுங்கில் பங்காரம் மீக்கே. இதுதவிர மலையாளம், கன்னடத்திலும் இந்நிகழ்ச்சிகள் உண்டு. இதுபோக 'செல்வி' தொடர் என்று சன் குழுமத்தில் ராதிகாவின் ஆதிக்கம்தான் இதுவரை. இப்போது பொது வாழ்க்கையின் செயல்பாடுகள், பிஸினஸ் வாழ்க்கையைப் பாதிக்கும் சூழல். இந்த நிகழ்ச்சிகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ரசிகர்களும் படபடப்புடன் இருக்கிறார்கள்.



சிக்கலில் செல்வி!

"நான் அரசியலில் இல்லை!"

'தி.மு.கவுடன் உரசல்' என்ற நிலை வந்தவுடன் 'கொஞ்சம் எச்சரிக்கையுடன் செல்லுங்கள்' என்று சரத்தைத் தொடர்ந்து எச்சரித்து வந்தாராம் ராதிகா. காரணம், கலைஞர் குடும்பத்துடனான அவரது உறவு மிகவும் நெருக்கமானது.

பத்திரிகை அதிபர் தூண்டுதல், உளவுத்துறை ஊக்குவிப்பு, நாடார் குலம் நச்சரிப்பு இவற்றைத் தாங்காமல் ஜூட் விடுவதற்கு சரத் தயாரான போது, கூடவே ராதிகாவும் செல்வார் என்று கலைஞர் வட்டாரம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சரத்தைவிட, ராதிகாவும் கூடவந்தால் தான் கலைஞர் குடும்பத்தை அதிகமாகக் காயப்படுத்த முடியும் என்ற நோக்கில் செயல்பட்ட ஜெ. நினைத்ததைச் சாதித்து விட்டார். வாழ்க்கையில் பல கசப்பான அனுபவங்களைப்

பெற்று ஒரு ஸ்டெடியான நிலையை அடைந்திருக்கும் ராதிகாவுக்கு இது ஒரு குழப்பமான சூழல்தான். சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் போக்குகொண்ட ராதிகாவின் கவலை, சன் குழுமத்தில் போய்க் கொண்டிருக்கும் தொடர்கள்தான்.

"இது பற்றிக் கவலைப்பட வேண்டாம். பத்திரிகை அதிபரே புது சேனல் துவங்குவதாக இருக்கிறார். அவருடன் நாம் இணைந்து செயல்படுவோம். அதுவரை ஜெயாவில் காலம் தள்ளுவோம்" என்று சரத் ஆறுதல் சொன்னாராம். தங்கள் சமுதாயத்துக்கு நம்பிக்கை நட்சத்திரமாக உருவாக வேண்டிய ஒரு நடிகர், வேறொரு கட்சியில் இணைந்தது கண்டு அதிர்ச்சியில் இருக்கிறது நாடார் சமுதாயம். நிர்வாகி என்ற முறையில் கலாநிதி மாறன், தொடர்கள் 'சன்'னில் தொடருவதைத்தான் விரும்புகிறார். ஆனால் சிலர் அவருக்கும் நிறுத்தச் சொல்லி பிரஷர் கொடுக்கிறார்கள்.

இதற்கிடையில் ராதிகா என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள அவரைத் தொடர்பு கொண்டோம். தமிழ்நாட்டுக்கு ஒரேயொரு நாள் வந்துவிட்டு சிங்கப்பூர் 'செல்வி' படப்பிடிப்புக்குப் போய் விட்டார்.



"நான் அரசியலில் இல்லை; ஒரு நல்ல மனைவியாக என் கணவரைத் தொடர்ந்து சென்றேன்" என்றவரிடம், "உங்கள் தொடர்கள் என்ன ஆகும்?" என்றோம். "அது ஒரு நிறுவனம் தொடர்பான விவகாரம்" என்றார். "நீங்கள் மனமுவந்துதான் அ.தி.மு.கவில் இணைந்ீர்களா?" என்றபோது, "ஷூட்டிங் நடுவில் இருக்கிறேன்" என்று முடித்துக் கொண்டார் ராதிகா.

- கௌசி

அட்டை, படம்: ஸ்ரீஹரி

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

சுவரில் அடித்த பந்துபோல மீண்டும் கலைஞர் பக்கம் தாவியிருக்கிறார் லட்சிய தி.மு.க.வின் தலைவர் விஜய டி.ராஜேந்தர். இப்போது கலைஞருக்கு ஆதரவாகப் பிரசாரம் - மயிலாடுதுறையில் வேட்புமனு தாக்கல் - பழைய நண்பர்களுடன் சென்று வாக்கு சேகரிப்பு என்று பரபரப்பாக இருந்தவரிடம் பேசினோம்.

கலைஞரின் இந்த அழைப்பை எதிர்பார்த்தீர்களா?

"எதிர் பார்க்கவே இல்ல... கலைஞருக்கு எப்போதெல்லாம் பிரச்னை வருதோ அப்போல்லாம் அதை ஈடுகட்டற மாதிரி நான் கலைஞர் பக்கத்துல இருப்பேன். முதல் முறை வைகோ வெளில போனப்போ கலைஞர் அழைத்தார். உடனே அவருக்குத் தம்பியா அவர்கிட்டயே போனேன். இப்போ திரும்ப வைகோவால சிக்கல் வந்திருக்கு. இப்போதும் கலைஞர் அழைத்திருக்கார். தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்னு சொல்வாங்களே. அந்த அளவுக்கு எனக்கும் கலைஞருக்கும் பாச உணர்வு உண்டு. அதனால கலைஞர் கேட்டுக்கிட்டதால, நான் ஏற்கெனவே அறிவித்த 11 தொகுதிகள் தவிர மற்ற தொகுதிகளில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவளிப்பேன்னு சொல்லியிருக்கேன். பிரசாரம் செய்யவும் வாய்ப்பிருக்கு."

"தமிழ் முரசு செய்தது

அந்த அளவுக்குப் பாசம் இருக்கும் போது ஏன் அவருக்கு நேர் எதிரான அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தீர்கள். தனித்தே இருந்திருக்கலாமே?

"ஒரு மூன்று ரூபாய் உறுப்பினர் அட்டையை நான் புதுப்பிக்கலங்கற ஒரே காரணத்துக்காக, நான் தி.மு.க. உறுப்பினர் இல்லன்னு சொன்னப்போ என் மனகல மிகப்பெரிய தாக்கம் உருவாயிடுச்சு. நான் கலைஞர் மீது வைத்திருந்த பாசத்தைப் பங்கப்படுத்திவிட்டாரேங்கற கோபத்துல வெளியேறினேன். அதனால கலைஞருக்கு எதிரான வாக்குகளைச் சிதறடிக்க விரும்பாம, முதல்வர் நேரடியா கேட்டுக்கிட்டதால காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல்ல அ.தி.மு.க.வுக்கு பிரசாரம் பண்ணினேன். தொடர்ந்து அதே உணர்வோட ஜெ. இருப்பார்னு நான் தப்புக் கணக்குப் போட்டுட்டேன். சில கட்சிங்க அவங்க பக்கம் வந்தபிறகு, நான் ஒதுக்கப்பட்டப்போ, எண்ணெயும் தண்ணியும் என்றைக்குமே ஒட்டாதுன்னு புரிஞ்சு வெளில வந்துட்டேன்."

அ.தி.மு.க. கூட்டணியை விட்டு விலகியதற்குத் தொகுதி எண்ணிக்கை தான் காரணமா?

"அ.தி.மு.க. கூட்டணிக்குப் பிள்ளையார் சுழி போட்டவனே நான்தான். ஆனா வைகோவும், திருமாவளவனும் வந்தவுடனே நான் தேவையில்லன்னு அவங்களுக்குத் தோணியிருக்கு. பிள்ளையார்சுழியே வேணாம்னு நினைச்சுட்டாங்க. என்னோட தகுதியை அவங்க சந்தேகப்பட்டதுதான் விலகலுக்குக் காரணமே தவிர, தொகுதி எண்ணிக்கை இல்ல."

வெள்ள நிவாரணம் வாங்கும்போது நடந்த விபத்து குறித்து செய்தி வெளியிட்ட தமிழ் முரசை கடுமையாக விமர்சித்தீர்கள். இப்போது உங்களுக்கு தர்மசங்கடமாக இல்லையா?

"அந்த விபத்துல பலியானவங்களோட எண்ணிக்கை 42ன்னு மாலைமுரசு போடுது. அதேநாள் தமிழ்முரசு 50 பேர்னு போடுது. இது தப்பில்லையா? அதனால கண்டிச்சேன். இதே தமிழ்முரசு

என் மகன் சிம்புவைப் பத்தி நடக்காத ஒரு விஷயத்தைப் போட்டுச்சு. அதையும் கண்டிச்சேன். இப்போ நான் தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவிச்சுருக்கேன். நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமேன்னு நினைக்கறவன் நான். இந்த நிலைமையில அவங்க தப்பா நியூஸ் போட்டாலும் கண்டிக்கத்தான் செய்வேன். அது என்னோட சுபாவம். அதை எதுக்காகவும் மாத்திக்க மாட்டேன்.”

போட்டியிடறது நாகரிகமான விஷயம் இல்லன்னு நினைக்கிறேன். எனக்கு சீட்டு கொடுக்கலைன்னு சொன்னவுடனே அவங்களை எதிர்த்து அநாகரிகமா பேசறது, எதிர்த்துப் போட்டியிடறதுலெல்லாம் எனக்கு இஷ்டமில்ல. சொந்த ஊர்ல போட்டியிடறது பாதுகாப்புக்காக இல்ல. நான் பிறந்த மண்ணுக்கு ஏதாவது நல்லது செய்ய இப்போ வாய்ப்புக் கிடைச்சுருக்கு. அதனால நிக்கறேன்... அவ்ளோ

தப்புதான்!”



– ராஜேந்தர் சுரீர்

ஏன் ஆண்டிப்பட்டியில் போட்டியிடாமல் பாதுகாப்பாக சொந்த ஊரில் போட்டியிடுகிறீர்கள்?

“நான் பர்கூர்ல அந்தம்மாவை எதிர்த்துப் போட்டியிட்டப்போ இருந்த நிலைமையே வேற. இப்போ நான் ஒரு அரசியல்வாதியா நிறைய பக்குவப்பட்டிருக்கேன். பெரிய தலைவர்களை எதிர்த்துப் தான்.”

தி.மு.க.வுடன் மீண்டும் இணைய வாய்ப்பிருக்கிறதா?

“இப்போதைக்கு தி.மு.க.வுக்கு ஆதரவளிக்கிறேன். தொடர்ந்து எங்கள் பயணம் எப்படி இருக்கப்போகிறது என்பது இனிமேல்தான் தெரியும்.”

- ஆர்.முத்துக்குமார்

நகைச்சுவை நாயகன்!

தேர்தலுக்காக அனல் பறக்கும் பேச்சு, ஆவேசமான சவால்கள். இதற்கிடையே நகைச்சுவைக்கு இடமுண்டா? சில தலைவர்களிடம் கேட்டோம். பின்னிப் பெடலெடுத்துவிட்டார்கள்...

இல.கணேசன் (பா.ஜ.க.): சமீபத்தில் மைலாப்பூர் தொகுதியில் எங்கள் வேட்பாளரை ஆதரித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அ.தி.மு.க. வேட்பாளரான நடிகர் எஸ்.வி.சேகர், 'புலியும், சிறுத்தையும் சிங்கத்தோடு இணைந்து விட்டன. இனி எங்கள் எதிரிகள் காணாமல் போவார்கள்' என்று ஏற்கெனவே பேசியிருந்தார். எங்கள் தோழர் ஒருவர் 'புலி, சிறுத்தை, சிங்கம் என்றெல்லாம் எஸ்.வி.சேகர் பயமுறுத்துகிறாரே' என்று மேடையில் இருந்த என்னைப் பார்த்துக் கேட்க, 'ஆக இப்போது நடப்பதும் காட்டாட்சி, அவர்கள் ஜெயித்தால் நடக்கப் போவதும் காட்டாட்சி, இதை சேகரே ஒப்புக் கொண்டு விட்டார்' என்று சொன்னவுடன் சிரிப்புடன் கூடிய கைத்தட்டல்.



• இல. கணேசன்

பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்): ஜீப்பில் பிரசாரம் செய்யும்போது நம் முகம் பளிச்சென்று தெரிய வேண்டுமென்பதற்காக ஃபோகஸ் லைட் வைப்பார்கள். அந்த லைட் முகத்தில் அடிக்கும்போது, எதிரில் ஆட்கள் இருக்கிறார்களா என்றே தெரியாது. எனவே கிராமங்களுக்குப் போகும்போது, ஆட்கள் தெரிகிறார்களோ இல்லையோ, கும்பிட்ட கையுடன்தான் செல்ல வேண்டும். இப்படித்தான் ஒருமுறை தென்காசித் தொகுதியில், உள் தங்கிய கிராமம். நேரம் இரவு 9 மணி இருக்கும். மெயின் சாலையிலிருந்து திரும்பும்போது, சாலை மூலையில் கும்பலாக ஆட்கள் உட்கார்ந்திருப்பது போல் தெரிந்தது. 'வண்டியை நிறுத்தப்பா' என்று நான் சொன்னவுடன் தோழர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஜீப்பிலிருந்து இறங்கிச் சென்றேன். அங்கே பார்த்தால் வரிசையாக சிமெண்ட் மூட்டைகளை அடுக்கி வைத்திருந்தார்கள். ஒரே சிரிப்புதான் போங்கள்.

• பீட்டர் அல்போன்ஸ்



• நல்லகண்ணு



நல்லகண்ணு (வலது கம்யூனிஸ்ட்): காம்ரேடுகள் ஸீரியஸான ஆசாமிகள். ஆனால் எங்களையே சிரிக்க வைக்கும்படியாக இருக்கிறது வைகோவின் செயல்பாடுகள். இந்தத் தேர்தலில் வைகோதான் நகைச்சுவை நாயகன். பொடாவில் வெளியே வந்தபோது, ஜெயலலிதாவைத் தீவிரமாக எதிர்த்து விட்டு, இப்போது அந்தர் பல்டியாக அந்தம்மாவை ஆதரிப்பது மக்களிடையே வைகோவை நையாண்டி நாயகனாக மாற்றிவிட்டது. அவரைப் பற்றி பேசத் துவங்கினாலே கூட்டத்தில் சிரிப்பலைகள் எழுகின்றன. 'பத்து மாதம்; பத்தொன்பது மாதம்' என்று ஆங்காங்கே குரல்கள் எழுகின்றன. 'பம்பரத்தோட விலை 40 கோடியாம்' என்று மக்கள் நெற்றியடி அடிக்கிறார்கள். 'அம்மாட்ட தான் சாட்டை இருக்கு' என்று கிராமத்தில் மக்கள் கிண்டலடிக்கும்போது, குபீர் சிரிப்பு எழுகிறது.

- ஸ்ரீநி

சிரிப்பாய்ச் சிரிக்கும் அரசியல்!

வடிவேலுவின் அந்த மீசையைப் பார்த்தாலே குபுக் என சிரிப்பு வருகிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அரசர்களைப் போல ஐந்து கிலோ முடியைத் தாங்கியிருக்கும் ஹிப்பித் தலை. அதன்மீது கட்டபொம்மன் ஸ்டைல் மகுடம், காதில் வளையம், கழுத்து நிறைய ஆபரணங்கள், வண்ணப் பட்டாடையில் வஸ்திரம், கல், முத்து, பவளம் பதித்த கம்பீரத் தங்கக் காலணி, கையில் தங்கச் செங்கோல்! இப்படியொரு அசத்தலான மன்னர் கெட்-அப்பில் 'இம்சை அரசன் இருபத்து மூன்றாம் புலிகேசி'யாக உருமாறியிருந்த வடிவேலுவின் முகத்தில் இருப்புக் கொள்ளாத எகத்தாளம்.



• சிம்புதேவன்

''இப்படியொரு ஹீரோசான்ஸ் கிடைக்கும்னு கனவுலேகூட நினைக்கலீங்க. டைரக்டர் சிம்புதேவன் தம்பி வந்து கதைச் சுருக்கத்தைச் சொன்னதுமே பட்டுன்னு புடிச்சுப் போச்சு. நான் ஆரம்ப காலத்துல நாடகத்துல நடிச்சு வளர்ந்தவன். ராஜபார்ட் வேஷம் கட்ட முடியாதான்னு ரொம்ப ஆசப்பட்டிருக்கேன். இப்போ சினிமாவுல நமக்குன்னு ஒரு எடம் கெடச்சு நிமிர்ந்து நிக்கும்போது நாம ஆசப்பட்ட மாதிரி ஒரு ரோல் கெடைக்குதுன்னா விட்டுடுவமா... எம்.ஜி.ஆர், சிவாஜி மாதிரி மேதைங்க ராஜா கெட்-அப் போட்டு நடிச்ச படங்களை டூரிங் தியேட்டர்ல திரைக்குப் பக்கத்துல உட்கார்ந்து பார்த்துருக்கேன். கட்டபொம்மன் வசனத்தை மனப்பாடம் பண்ணி நம்ம சேக்காளி பயலுக மத்தியில பேசி கைத்தட்டல் வாங்கியிருக்கேன். இதெல்லாம் இப்போ இந்த கேரக்டரைப் பண்றதுக்கு ரொம்ப ஒத்தாசையா இருக்கு.

என்ன ஒண்ணு, செந்தமிழ்ல பேசறப்போதான் இந்த ழ, ல, ள வெல்லாம் நம்மள ரொம்ப கஷ்டப்படுத்துது. நம்ம நாசர் அண்ணாச்சி, மனோரமா ஆச்சி தவிர, நான் உட்பட யூனிட்ல எல்லா நடிகர்களுக்கும் செந்தமிழ் பேசிப் பேசி, நாக்கு தரை வரைக்கும் தொங்கிப் போச்சய்யா தொங்கிப் போச்சு!'' என்று வடிவேலு பரிதாபமாகச் சொல்லும்போதே நமக்குச் சிரிப்பு வருகிறது.

காதல், ரவுடியிசம், பழிவாங்கல் என்று ஒரே ரூட்டில் ஓடிக்கொண்டிருக்கும் தமிழ் சினிமாவில், முழுக்க முழுக்க முடியாட்சி காலத்தைப் பின்னணியாக வைத்து ஒரு படம் இயக்கும் எண்ணம் எப்படி வந்தது? படத்தின் இயக்குநர் சிம்புதேவன் ஆனந்தவிகடனில் நகைச்சுவை கார்ட்டூன்கள் வரைந்து புகழ் பெற்றவர்.

"என்னோட தயாரிப்பாளர், இயக்குநர் ஷங்கர் சாருக்குத்தான் முதல்ல நன்றி சொல்லணும். இப்படியொரு கதையை ஒப்புக்கொண்டது சாதாரண விஷயமில்ல. முதல்ல அவர்கிட்டே ஒரு கதை சொன்னேன். அப்புறம் அவரோட எதிர்பார்ப்பு ரொம்ப ஹைப்ரெஷ்ஷா இருக்குன்னு தெரிஞ்சதும் இருபத்து மூன்றாம்

புலிகேசி கதையைச் சொன்னேன். அவருக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அவர் எங்கெங்கே திருத்தங்கள் வேணும்னு சொன்னாரோ அதையெல்லாம் சரி பண்ணிட்டு சொன்னப்போ, பட்ஜெட் பத்தி கவலையே படக்கூடாதுன்னு சொல்லிட்டார். உதாரணத்துக்கு ஒரு விஷயம், 'கேமராமேன் ஆர்தர் ஏ.வில்சன் செல்லுலாய்டில் பழைய வண்ணங்களைக் கொண்டு வருவதற்காக ஸ்பெஷல் ஃபில்டர்களோடு ஒரு போராட்டமே நடத்தினார். இந்த ஃபில்டர்களில் பாதிக்குமேல் சென்னையில் கிடைக்கல. இதைக் கேள்விப்பட்ட ஷங்கர் சார்... 'வில்சன் கேட்ட ஃபில்டர்ஸ் பாம்பேலேர்ந்து நாளைக்கு வருது. வாங்கிக்கங்க. எனக்கு குவாலிட்டிதான் முக்கியம். எதுவானாலும் தயங்காமல் எங்கிட்டே கேளுங்க' என்று இன்ப அதிர்ச்சி கொடுத்தார்'' என்றவர், ''இருபத்து மூன்றாம் புலிகேசி என்றால் வரலாற்றில் இல்லாத ஒரு கற்பனை மன்னன். ஆனால் நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் வரலாற்றுப் பின்புலம் உண்மையானது. ஆளுமை இல்லாத, ஆனால் அதீத சேட்டைகள் செய்யும் ஒருவனுக்கு ஆட்சி, அதிகாரம் கிடைத்தால் இயல்பாக நடக்கும் எல்லா விஷயங்களும் எப்படித் தாறுமாறாக நடக்கும் என்பதுதான் திரைக்கதை. சிரிப்பாய்ச் சிரிக்கும் இன்றைய அரசியல், தேர்தல் எல்லாவற்றையுமே கிண்டலடித்திருக்கிறேன். வடிவேலுவுக்கு இரட்டை வேடம். முழுநீள நகைச்சுவைதான் பிரதானம் என்றாலும் வெள்ளையர்கள் தமிழகத்தில் நுழைந்த 18-ம் நூற்றாண்டுதான் கதைக்களம் என்பதால், இதற்காகவே ஒரு பெரிய டூம் ஹோம்ஒர்க் செய்து, ஆர்ட் டைரக்டர் பி. கிருஷ்ணமூர்த்திக்கு உதவியிருக்கிறது. மொத்தம் பதிமூன்று செட்டுக்கள். வடிவேலுவைப் போல கலை இயக்குநர், ஒளிப்பதிவாளர் இவர்களும் படத்தின் ஹீரோக்கள்தான்'' என்று வியப்பு கூட்டுகிறார் சேரனிடம் பல படங்கள் பயிற்சி பெற்ற மதுரை இளைஞரான சிம்பு தேவன்.

- ஜெய்

படங்கள் உதவி : **நிகில்**



இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அணியின் ஸ்டார் பேச்சாளராக மினிர்கிறார் சினிமா காமெடியன் செந்தில். தேர்தல் ஸ்பெஷலுக்காக அவரைக் கலாய்த்தபோது...



என்ன செந்தில் ஸார்... பிரசாரமெல்லாம் எப்படி இருக்கு...?

"சூப்பரா இருக்கு. நம்மளைப் பார்த்தாலே ஜனங்க சிரிக்கறாங்க..."

இத்தனை வருஷம் சைலன்டா இருந்துட்டு இப்போ திடீர்னு அம்மா பின்னாடி போயிட்டீங்க?

"நான் ஒரிஜினல் அக்மார்க் எம்.ஜி.ஆர். ரசிகன். இப்போ அம்மா ஆதரவாளன். 1989-ல் அம்மா சேவல் சின்னத்தில் போட்டியிட்டபோதே அவருக்கு ஆதரவா பிரசாரம் செய்திருக்கேன்."

பிரசாரத்தில் ஜோக்கெல்லாம் சொல்லி ரொம்பவே ரவுஸ் பண்ணுறீங்களாமே?

"நம்மளை பின்னாடி இருந்து தட்டிக் கேட்க கவுண்டமணி அண்ணன் இல்லையே (சிரிக்கிறார்). அதான் போடு... போடுன்னு போடறேன். இது ரொம்ப முக்கியமான தேர்தல் ஸார். அம்மா மறுபடி ஆட்சிக்கு வந்தே தீரணும்."

நீங்களும் கலைஞர் குடும்பத்தைத் தான் குறி வைக்கத் தாக்குறீங்களா?

"நமக்கு அது வேண்டாம். பாலிசியைப் பேசுவோம். கலைஞர் ஆட்சி என்றாலே ஊழல். சத்துணவில் ஒரு முட்டை போட்டாங்க... இப்போ இரண்டு போடுவோம் என்கிறார்கள். ஒண்ணு போட்டதிலேயே ஊழல். ரெண்டுன்னா... எவ்வளவு ஊழல் நடக்கும்? நிலம் தருகிறோம் என்கிறார்கள். எங்கே இருக்கு நிலம்? 'ஜனங்களே... உங்களுக்கு காவிரி ஆற்றிலும், கடலிலும்தான் நிலம் கொடுப்பார் கலைஞர்' என்று சொல்லுவதை ஜனங்க ரசிக்கறாங்க."

தி.மு.கவுக்கு எதிரா பிரசாரம் செய்யறதால அவங்க தொலைக் காட்சியில் உங்களை இருட்டடிப்பு செய்ய மாட்டார்களா...?

"நம்மளைப் போடாமல் ஒரு நாள்கூட அவங்களால இருக்க முடியாது. சினிமாவை நம்பித்தானே அவுங்க பொழைப்பு ஓடுது. மற்றபடி செய்தியெல்லாம் பொய்தான். சன் தொலைக் காட்சிக்கு மற்றொரு பெயர் 'பொய்' தொலைக்காட்சி."

தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் உங்கள் கதி?

"நான் வீரம் செறிந்த முக்குலத்தோர் பரம்பரை. அம்மாவைத் தவிர யாருக்கும் பயப்படமாட்டேன்."


அதுசரி, உங்கள் சினிமா செல்வாக்கை அரசியலுக்குப் பயன்படுத்துவது தவறில்லையா?

"புகழ் பெற்று விளங்கும் வக்கீல், டாக்டர்... ஏன் ஐ.ஏ.எஸ் அதிகாரிங்ககூட அரசியலுக்கு வரும்போது நாங்க வரக் கூடாதா? எங்களுக்குச் சிந்தனையே இருக்கக் கூடாதா?"

அம்மா பின்னாடி நடிகர், நடிகையர் பட்டாளம் ஏன் திரளுது?

"என்னைப் பார்த்தாலே

– லகலக செந்தில்



"ரொம்ப சிம்பிள்... தி.மு.கவில் நடிகர்களுக்குக் கொஞ்சமும் மரியாதை கிடையாது. தி.மு.கவுக்கு உழைச்ச எம்.ஜி.ஆரையே தூக்கியெறிந்த கட்சிதானே அது. கலைஞர்கள் என்றால் கலைஞருக்கு கறிவேப்பிலை. எனவேதான் அவருக்கு வேப்பிலையாக, அம்மாவுக்குப் பின் அணிதிரண்டுவிட்டோம். பாருங்க... இப்போ சரத்ஸாரும் வந்துட்டாரு. இனிமேல் எங்கள் கலை உலகத்தை கலைஞர் ஏமாற்ற முடியாது."

விஜயகாந்த், கார்த்திக் ஆகியோர் அம்மாவுக்கு எதிராக நிற்கிறார்களே...?

"பாவம் அவுங்க. எல்லாம் நம்மாளுங்கதான். நான் அவங்களைப் பற்றி எதுவும் பேசுவதில்லை."

தி.மு.க. ரெண்டு ரூபாய்க்கு அரிசி தருகிறோம் என்று சொன்னதை 'முடியாது' என்று கிண்டல் செய்யும் நீங்கள், 'இப்போது அம்மா பத்து கிலோ அரிசி இலவசமாகத் தருகிறோம்' என்று சொல்வதை எப்படி நியாயப்படுத்துவீர்கள்?

"நம்ம பாயிண்ட் ஒரே பாயிண்ட்தான். கலைஞர் எது சொன்னாலும் அது நடக்காது. ஆனா அம்மா சொல்லிட்டாங்கன்னா அது நிச்சயம் நடக்கும். அம்மா சொல்வதைத்தான் ஜனங்க கேட்பாங்க."

உங்கள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யும் அ.தி.மு.க. பிரமுகர்களை ரொம்பப் படுத்தறீங்களாமே!

"இப்படி ஒரு பிரசாரம் செய்யறாங்க... இருக்கிறது ஒரு ஜான் வயிறு. எவ்வளவு சாப்பிட முடியும்."

உங்களுக்குச் சரியாக டயலாக் பேசக் கூட வராது என்று பாக்யராஜ் சொன்னாரே!

"அவரு பெரிய டைரக்டர்... சொல்லிட்டுப் போறாரு. இந்த ஃபீல்டில் இவ்வளவு நாள் நான் நிக்கறேனே... அது எப்படி?"

கோவை சரளாவுடன் ஜோடியாகப் பிரசாரம் செய்வீர்களா?

(குரலில் உற்சாகம் பொங்குகிறது) "கண்டிப்பா செய்வேன். நாங்க ஜோடியாகப் போய் கலக்கப் போறோம். தி.மு.க. கலங்கப் போவுது."

- ப்ரியன்

ஜனங்க சிரிக்கிறாங்க!"



இவை நவரத்தினக் கற்கள் அல்ல!



• கால்சியம் ஆக்ஸலேட் கல்

கோடைகாலம் தொடங்கிவிட்டாலே கிட்னிகற்களின் படையெடுப்பும் தொடங்கிவிடுகிறது. கிட்னி கற்கள் என்றதும் வாழ்க்கையே முடிந்துவிட்டது போல பலரும் துவண்டு விடுகிறார்கள். வாழ்க்கை முறை, உணவு முறையில் சீரான மாற்றங்களைக் கொண்டு வந்தாலே இந்தக் கற்கள் தோன்றுவதைத் தடுத்துவிடலாம். தவறி வந்துவிட்டால் எளிய சிகிச்சைகள் மூலம் அவற்றைத் தவிடு பொடியாக்கிவிடலாம். மாறாக கிட்னி கற்களை விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் போல பாவித்துக் கொண்டு சிகிச்சை மேற்கொள்ளாமல் வளரவிடுவது நல்லதல்ல'' என்கிறார் பள்ளிக்கரணை டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனைத் தலைவரும் பொது மருத்துவ நிபுணருமான டாக்டர் கோவிந்தராஜ்.

''சிறுநீரில் உள்ள பொருட்களின் தொடர்ச்சியான 'படிதல்' காரணமாக சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பை, சிறுநீர்ப் பாதை போன்ற உறுப்புகளில் கற்கள் உருவாகின்றன. இந்த நிகழ்வு கோடை காலத்தில் அதிகமாக நடைபெறுகிறது. இதற்குக் காரணம் கோடையில் அதிக வியர்வை வெளியேறுவதால் உடலில் திரவ இழப்பு ஏற்படுகிறது. இதனால் சிறுநீரின் அளவு குறைந்து அதன் அடர்வுத் தன்மை அதிகரிக்கிறது.

இப்போது சிறுநீரில் உள்ள தாதுப் பொருட்கள் மற்றும் பல்வேறு ரசாயன கழிவுப் பொருட்கள் மெல்ல மெல்ல படியத் தொடங்கி கற்களாக உருவாகின்றன.

பெண்களைக் காட்டிலும் ஆண்களுக்கே அதிக அளவில் இவ்வகைக் கற்கள் உருவாகின்றன. ஒருமுறை கற்கள் வந்து சிகிச்சை பெற்றவர்களில் ஐம்பது சதவிகிதம் பேருக்கு அடுத்த பத்தாண்டுகளுக்குள் திரும்பவும் கற்கள் உருவாகின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இப்படி உருவாகும் கற்களை நான்கு வகைகளாகப் பிரித்துவிடலாம். அவற்றில் முக்கியமானது, பாதிக்கப்படுபவர்களில் எண்பத்தைந்து சதவிகிதம் பேருக்கு வரும் 'கால்சியம் ஆக்ஸலேட் மற்றும் பாஸ்பேட் கற்கள்.' சிறுநீரில் கால்சியத்தின் அளவு அதிகரிப்பதால் (ஹைபர் கால்சியூரியா) இந்தக் கற்கள் ஜம்மென்று படிய ஆரம்பிக்கும். அடுத்து யூரிக் அமில கற்கள். யூரிக் அமிலம் சிறுநீரில் கரையாமல் போய்விடும்போது அல்லது மிக அதிக அளவில் சிறுநீர் வழியே வெளி

யேற்றப்படாமல் போகும் போதும் இந்த வகைக் கற்கள் உருவாகின்றன. இது பெரும்பாலும் மரபுவழி பிரச்னையாகவே தென்படுகிறது. விதிவிலக்காக கீமோதெரபி கொடுக்கப்படும் கேன்சர் நோயாளிகளுக்கு வரலாம். மூன்றாவது வகை, மெக்னீஷியம் அமோனியம் பாஸ்பேட் கற்கள். இவற்றை ஸ்ட்ருவேட் கற்கள் என்றும் சொல்கிறோம். இந்தக் கற்களுக்கு பெண்கள் மீதுதான் அதிக காதல். ஏனென்றால் சிறுநீரகப் பாதையில் ஏற்படும் நோய்த் தொற்று காரணமாக பாக்டீரியாக்கள் சுரக்கும் ரசாயனப் பொருட்கள் படிந்து ஸ்ட்ருவேட் கற்கள் உருவாகின்றன. ஆண்களைவிட பெண்களே சிறுநீரகப்பாதை நோய்த் தொற்றுக்கு அதிகம் ஆளாகிறார்கள். இந்த வகைக் கற்கள் அளவில் பெரிதாகிக்கொண்டே வந்து சிறுநீரகத்தையே அடைக்கும் தீவிரத் தன்மை கொண்டவை. இருபது வகை அமினோ அமிலங்களில் ஒன்றான சிஸ்டைன் சிறுநீரில் எளிதில் கரையாத ஒன்று. சிலருக்குப் பிறவியிலேயே சிறுநீரில் சிஸ்டைன் அளவு அதிகமாக இருக்கும். இதை சிஸ்டினூரியா என்கிறோம்" என்றவர், சிறுநீரகக் கற்கள் உருவாகிவிட்ட பிறகு தோன்றும் அறிகுறிகளைச் சொல்கிறார்.



★ டாக்டர் கோவிந்தராஜ்


"சிலருக்கு அறிகுறி என்பதே சுத்தமாக இருக்காது. ஆனால் பலருக்கு விலாப்புறத்தில் கடுமையான வலி இருக்கும். இதனை சிறுநீரக வலி அதாவது ரீனல் கோலிக் என்கிறோம். இதுதவிர சிறுநீர்ப் பாதை வழியே வெளியேறும் கற்களின் உராய்வு காரணமாக வலியும், சிறுநீரோடு ரத்தமும் வெளியேறும். அடிக்கடி சிறுநீர்ப் பாதையில் எரிச்சல், நோய்த் தொற்று, குமட்டல், வாந்தி, பசியின்மை என்று பல பொதுவான அறிகுறிகளும் இருக்கும். சரி, சிறுநீரகக் கற்களை எப்படிக் கண்டறிவது?

சாதாரண எக்ஸ்ரே, தமனி நரம்பு வழியே சிறப்புச் சாயத்தை ஊசியாகச் செலுத்தி பின்னர் எடுக்கப்படும் எக்ஸ்ரே, சி.டி. ஸ்கேன், அல்ட்ரா சவுண்ட் என கற்களைத் துல்லியமாகக் கண்டறிய பல பரிசோதனை முறைகள் உள்ளன. சிகிச்சை முறைகள் என எடுத்துக் கொண்டால், முதலில் வலியைக் கட்டுப்படுத்தி வைக்க நார்கோட்டிக் மருந்துகளை அளவோடு தருகிறோம். தற்போது நார்கோட்டிக் (போதை) அல்லாத NSAID வலி போக்கும் மருந்துகளையும் தருகிறோம்.

பொதுவாக 0.5 செ.மீ. அளவு கொண்ட சிறிய கற்கள் தானாகவே வெளியே வந்துவிடும். ஒரு செ.மீ. அளவுக்கு அதிகமாக இருந்தால் கட்டாயம் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று சிறுநீரகக் கற்களை அகற்ற பெரிய 'ஓபன்' அறுவை சிகிச்சைகள் அவசியமில்லாமல் போய் விட்டன. கீழ்முதுகில் 0.5 செ.மீ. அளவுள்ள துவாரம் மூலமாக (லேப்ராஸ்ஸ்கோப்) செய்யப்படும் பர்குடேனியஸ் சர்ஜரி மூலம் சில மணித் துளிகளில் அகற்றிவிடலாம். அடுத்து எக்ஸ்ட்ரா கார்போரியல் ஷாக்வேவ்ஸ் எனப்படும் பக்க விளைவுகளற்ற அதிர்ச்சி அலைகளை 'டிரிப்டர்' என்ற எந்திரத்தின் மூலம் கற்களின்மீது செலுத்தி பொடிப்பொடியாக உடைத்து சிறுநீர் வழியே வெளியேறச் செய்கிறோம். இது புறநோயாளியாக வந்து செல்பவர்களுக்கான சிகிச்சை. இன்னும் அல்ட்ராசோனிக் கதிர்கள் மூலம் உடைப்பது உள்பட பல எளிய சிகிச்சைகள் வந்து விட்டன" எனும் டாக்டர் கோவிந்தராஜ், "தினசரி 3 1/2 லிட்டர் (குறிப்பாகக் கோடையில்) தண்ணீரை தவறாமல் அருந்துவதும், கால்சியம் கற்களில் இருந்து தப்பிக்க குறைவான அளவு பால் அருந்துவதும்தான் சிறுநீரகக் கற்கள் தோன்றுவதிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள சிறந்த தீர்வு" என்கிறார்.


- ஸ்ரீசக்கரம்

சிறுநீரகம்





கல்கி



2006 ஏப்ரல் 30
விய சித்திரை 17
மலர் : 64
இதழ் : 39

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

அரசியலாகும் அணைக்கட்டு!


மேதா பட்கருடைய இருபத்தொரு நாள் உண்ணா விரதத்தின் நோக்கம் நிறைவேறிவிட்டது. நர்மதை அணை திட்டம் காரணமாக வாழ்விடத்தைத் தொலைக்கவிருக்கும் ஏழை எளிய மக்களின் மறுவாழ்வுக்கு அவசியமானதைச் செய்ய சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் தவறிவிட்டன. இதுதான் மேதா பட்கரின் குற்றச்சாட்டாக இருந்தது. இதை சம்பந்தப்பட்ட அரசுகள் ஆணித்தரமாக மறுத்தன. குஜராத் முதல்வர் மோடி, மேதா பட்கருக்கு எதிராகப் போட்டி உண்ணாவிரதம் இருந்தார்.

ஆனால், மத்திய அரசு நிறுவிய அமைச்சர்கள் குழு, மத்தியப் பிரதேசத்துக்கு நேரில் சென்று விசாரித்ததில் மேதா பட்கரின் குற்றச்சாட்டுகள் உண்மை என்று தெரிய வந்திருக்கிறது. இந்த அமைச்சர்கள் குழு தரும் அறிக்கை அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது :

- நிறைவேறாத மறுவாழ்வுப் பணிகள் பல, நிறைவேற்றப்பட்டிருப்பதாக பொய் அறிக்கைகள் தரப்பட்டுள்ளன.
- இழப்பீடாக விவசாய நிலம் தருவதற்குப் பதில் ஏழை விவசாயிகளுக்கு ஒன்றும் விளைவிக்க முடியாத தரிசு நிலம் தரப்பட்டிருக்கிறது.
- இழப்பீடு தொகை வினியோகிக்கப்பட்ட இடங்களில் அது மக்களை முழுதும் சென்றடையவில்லை. அதைப் பெற லஞ்சம் தரவேண்டியிருந்திருக்கிறது; இழப்பீடு தொகைக்கு பத்தாயிரம் ரூபாய் 'வருமான வரி' விதிக்கப்பட்டிருக்கிறது.
- நான்காயிரம் குடும்பங்கள் மறுவாழ்வு அளிக்கப்



தமிழக அரசியல்



பட்டிருப்பதாக வெளியான ஓர் அறிக்கையின் அடிப்படையில் ஆராய்ந்தபோது, அப்பகுதியில் எவ்வித அடிப்படை வசதியும் செய்துதரப்படவில்லை என்பதும் இந்த 'மறுவாழ்வு' வெறும் 'காகித மறுவாழ்வு' என்பதும் அம்பலமாகியிருக்கிறது.

இத்தனை குட்டுகளும் வெளிப்பட்ட நிலையில் உச்சநீதிமன்றமும், நர்மதா பசாவோ ஆந்தோளன் அமைப்பினுடைய மனுவை ஏற்று ஆராய்ந்து, நல்லதொரு ஆணையைப் பிறப்பித்திருப்பது ஆறுதலான விஷயம்.

'மறுவாழ்வுப் பணிகள் நிறைவேறாத நிலையில் அணையைத் தொடர்ந்து கட்டும் முயற்சி, உச்சநீதிமன்றத்தால் தடுத்து நிறுத்தப்படும். இதற்கு இடம் தராத வகையில் இது சம்பந்தமான பணிகளைப் பிரதமர் கண்காணித்து முடிவுகள் எடுக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறது உச்சநீதிமன்றம். அரசியல்வாதி என்ற நிலையிலிருந்து உயர்ந்து மனிதாபிமானி என்ற நிலையில் நின்று செயல்பட பிரதமருக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அரசுகள் இந்த விவகாரத்தை அரசியலாக்கி யுள்ளன. கட்சி பாகுபாடின்றி எல்லா அரசியல்வாதிகளும் நர்மதா அணை திட்டத்தை ஆதரிக்கிறார்கள். ஊழல் அதிகாரிகளோ, நிவாரணத் தொகையையும் இழப்பீட்டுத் தொகைகளையும் சுரண்டிக்கொள்ள காத்திருக்கிறார்கள். மறுவாழ்வுப் பணி களுக்கான கெடு தேதி (ஜூன் 30) வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அணை நிர்மாணப் பணிகளை மிகவும் தாமதப்படுத்துவதும் உசிதமல்ல. திட்டச் செலவுகள் அதிகமாவதுடன், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் நீர்ப்பாசனத் திட்டங்களும் பாதிப்புக்குள்ளாகும்.

எனவே, பிரதமர் இந்த விவகாரத்துக்கு முன்னுரிமை கொடுத்து, பாதிக்கப்பட்ட ஏழை மக்களின் ஜீவ-மரண பிரச்னையை முதலில் தீர்த்துவைக்க வேண்டும்.

மேதா பட்கர், இன்னொரு காலவரையறையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ளும் சோகத்தையும் நரேந்திரமோடி மீண்டும் ஒரு போட்டி உண்ணாவிரதம் மேற் கொள்ளும் கேலிக்கூத்தையும் இந்த தேசம் காணக்கூடாது. ●

மாதா அமிர்தானந்தமயி

ஒரு குரு புதியதொரு கிராமத்தில் வசிக்க முடிவு செய்தார். அங்கே குடியேறுவதற்கு முன்பாக அந்தக் கிராமத்து மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அறிந்துகொள்ள விரும்பினார். அதற்காகத் தம்முடைய சீடர்கள் இரண்டு பேரை தனித்தனியாக அந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்.

முதல் சீடன் சில நாட்கள் கழித்துத் திரும்பி வந்தான். சீடன் குருவை வணங்கிவிட்டு, ''குருவே! அந்தக் கிராமத்தில் உள்ள மனிதர்களைப்போல மோசமான மனிதர்களை இந்த உலகில் வேறெங்கும் பார்க்கவே முடியாது. கிராமம் முழுக்கக் கொள்ளைக்காரர்களும், கொலைகாரர்களும், விபசாரிகளும்தான் நிறைந்துள்ளனர். எனக்கு அங்கே சென்ற சில நாட்களுக்குள்ளாக மனம் வெறுத்துவிட்டது. உடனே நான் திரும்பி வந்துவிட்டேன். அந்த ஊர்ப் பக்கமே நாம் தலை வைத்துப் படுக்கக் கூடாது'' என்றான்.



அடுத்த சில நாட்களில், இரண்டாவது சீடனும் திரும்பி வந்தான். குரு அவனது அனுபவம் பற்றிக் கேட்டார். அவன், ''அந்தக் கிராமத்தில் உள்ள மனிதர்கள் மிக நல்லவர்கள். இவ்வளவு நல்ல மனிதர்களை உலகத்தில் காண்பது மிகவும் அரிது'' என்றான்.

''இரண்டு சீடர்கள் சொல்லும் கருத்துகளும் நேரெதிராக இருக்கின்றனவே! இவர்களில் யார் கூறுவது நிஜம்?'' என்றே சற்று குழம்பிப் போனார் குரு.

மறுபடியும் முதல் சீடனைக் கூப்பிட்டார். "எந்த அடிப்படையில் அந்த ஊர்க்காரர்கள் மோசம் என்று சொல்கிறாய்?" என்று கேட்டார்.

அந்த ஊரில் நான் சந்தித்த முதல் நபர் ஒரு கொலைகாரர். இரண்டாவது வீட்டில் நான் ஒரு கொள்ளைக்காரரைச் சந்தித்தேன். அடுத்து நான் சென்ற வீட்டுக்காரப் பெண்மணி ஒரு விபசாரி. அதற்குமேல் அந்த ஊரில் வேறு யாரையும் சந்தித்துப் பேச எனக்கு விருப்பமில்லை. உடனே ஆசிரமத்துக்குத் திரும்பிவிட்டேன்'' என்றான்.

குரு இரண்டாவது சீடனைக் கூப்பிட்டார். "அந்த ஊரில் நீ என்ன பார்த்தாய்?" என்று கேட்டார். "குருவே! நான் அந்தக் கிராமத்துக்குள் நுழைந்தபோது, ஒரு வீட்டுக்கு வெளியில் நோயால் கஷ்டப்படும் நோயாளி ஒருவருக்கு மருந்தும், பழங்களும் கொடுத்துக் கொண்டிருந்தார் ஒருவர். அவர் யார் என்று விசாரித்தபோது அவர் ஒரு கொலைகாரர் என்று தெரிய வந்தது. எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

அடுத்த வீட்டுக்குப் போனேன். அங்கே ஒருவர் ஏழை மக்களுக்கு உணவு அளித்துக் கொண்டிருந்தார். 'அவர் யார்' என்று விசாரித்தேன். 'அவர் ஒரு கொள்ளைக்காரர்' என்றார்கள். என்னுடைய ஆச்சரியம் அதிகரித்தது.

மூன்றாவது வீட்டுக்கு வெளியில் சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் யார் என்று விசாரித்தபோது, அந்த வீட்டில் வசிக்கும் ஒரு விபசாரியால் உணவும், உடைகளும், இடமும் கொடுத்து அன்புடன் பராமரிக்கப்படும் அனாதைக் குழந்தைகள் என்று அறிந்து என் மனம் நெகிழ்ந்தது.

பொதுவாக இந்தச் சமூகத்தில் கெட்டவர்களாகக் கருதப்படும் மனிதர்களே, இவ்வளவு நற்காரியங்களைச் செய்கிறார்கள் என்றால் இந்தக் கிராமத்தின் நல்லவர்கள் எப்படி இருப்பார்கள் என்று யோசித்துப் பார்த்தேன். அந்த மொத்த கிராமத்தின் மீதும் எனக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. நீங்கள் வசிக்க இதைவிட நல்லதொரு ஊர் கிடைக்கும்



'இறைவனால் நம்மைப் பிரிந்திருக்க முடியாது. நம்மை வாரி அணைத்துக் கொள்வார்'

வளர்ச்சிக்கான வழி!

என்று எனக்குத் தோன்றவில்லை" என்றான்.

எங்கும் தீமை மட்டுமே நிறைந்திருப்பதாகச் சொல்வதும், நினைப்பதும் எதிர்மறையான குணம். அது சோம்பேறிகளின் சுபாவம். பிறரது கெட்ட குணங்களைப் பற்றி பழித்துச் சொல்லுவதைவிட, அந்தக் குணங்கள் நம்மை அண்டவிடாமல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அதுதான் தனிமனித மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கான எளிய வழி.

அதுமட்டுமில்லாமல், ஒரு மனிதனது தீய செயல்களை மட்டுமே பார்த்து, அதன் காரணமாக அவரை நாம் ஒதுக்கி விட்டால், அந்த மனிதனின் எதிர்காலம் எப்படி இருக்கும்? மாறாக, அதே மனிதனிடம் உள்ள நல்ல குணம் என்னவென்று பார்த்து, அதனை வளர்க்க நாம் முயற்சி செய்தோமானால், அந்த மனிதன் நாளடைவில் நல்லவனாக மாறக்

கூடுமல்லவா?

ராமாயணத்தில் ஸ்ரீராமருக்கு, தாம் காட்டுக்குப் போவதற்குக் காரணமானவர் கைகேயிதான் என்று நன்றாகவே தெரியும். ஆனாலும், காட்டுக்குப் புறப்படுகிறபோது ஸ்ரீராமர், கைகேயியை நமஸ்கரித்து விட்டுச் செல்லத் தவறவில்லை. யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்று அறிந்திருந்தும், ஏசுகிறிஸ்து அவனது பாதங்களை கடைசி விருந்தின்போது கழுவத் தவறவில்லை. தினமும் தம்மீது சகதியை எறிந்து அவமானப்படுத்திய பெண்மணிக்கு நோய் வந்தபோது, யாரும் சொல்லாமலேயே நபிகள் நாயகம் சென்று சேவை செய்தாரில்லையா?

இதுவே மகான்கள் நமக்குக் காட்டும் பாதையாகும். அத்தகைய மகான்கள் காட்டிய பாதையை பின்பற்றிச் செல்வதுதான் வாழ்வில் அமைதியும், நிம்மதியும் பெறும் வழிகளாகும். தீயவர்களிடமும், இறைத் தன்மை உறங்கிக் கொண்டிருக்கிறது. அதனை விழிப்புறச் செய்வதே உண்மையில் நாம் நம் உள்ளே உள்ள இறைத்தன்மையினை விழிப்புறச் செய்யும் வழியாகும்.

அன்பு ஒன்றால் மட்டுமே இதனை சாதிக்க முடியும். அன்பு என்கிற தீபத்தை நீங்கள் ஏற்றுங்கள். முன்னேறிச் செல்லுங்கள். இனிய வார்த்தைகளும், புன்னகை சிந்தும் முகமும் கொண்டு நீங்கள் ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கும்போது, எல்லா நன்மைகளும் உங்களை வந்தடைவதைக் காணலாம்.

இறைவனால் நம்மைப் பிரிந்து இருக்க முடியாது. அவர் நம்மை வாரி அணைத்துக் கொள்வார். அமைதியும், நிம்மதியும் நம் வாழ்க்கையில் நிரந்தரமாகத் தங்கிவிடும்.

(அன்பு பெருகும்)

அம்மா!

இடைவிடாத வீட்டு வேலைகளுக்கு மத்தியிலும், சுதாமணி தினமும் ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் உணவு அளிக்கத் தவறமாட்டார். வீட்டுக்கு அருகில் உள்ள முதியோர்கள் கவனிக்க ஆளில்லாமல் அவதிப்படும்போது, அவர்களை நீராட்டி, உடை மாற்றி, சாப்பாடு ஊட்டி அன்புடனும் அக்கறையுடனும் கவனித்துக் கொள்வார். ஒரு தடவை, இந்த அக்கறை கொஞ்சம் அதிகமாகிவிட்டது. அடுத்த வீட்டிலிருந்த ஏழைப் பெண்மணி ஒரு நாள் தம் கஷ்டங்களையெல்லாம் சுதாமணியிடம் சொல்லி அழுதாள். சுதாமணியின் மனம் அதைக் கேட்டு மிகவும் வேதனைப்பட்டது. நேரே தன் வீட்டுக்குப் போனார். வீட்டிலிருந்து தம்முடைய அம்மாவின் தங்க நகை ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்துவிட்டார். இந்த விஷயம் தெரிந்தபோது, சுதாமணியின் வீட்டார் கடும் கோபம் அடைந்தனர். அன்றைக்கு சுதாமணிக்குக் கிடைத்தது திட்டு, அடி மட்டுமில்லை; அப்பா சுகுணானந்தர், மகளை ஒரு மரத்தில் கட்டிவைத்து, ரத்தம் வரும்வரை அடித்துத் தீர்த்தார். அவிழ்த்துவிடப்பட்டபோது நேரே தம்முடைய வீட்டுப் பூஜை அறைக்குச் சென்று, "கடவுளே! பெற்றோரால் ஒரு மகளிடம் இவ்வளவு கொடூரமான முறையில்கூட நடந்து கொள்ள முடியுமா? எனக்கு ஏன் இப்படி ஒரு சோதனை? என்னை உன்னிடமே அழைத்துக்கொள்ள மாட்டாயா?" என்று அழுதபடி பிரார்த்தனை செய்தார்.

\- மௌலி



கூகுளின் குறி!

கூகுள் தனது அடுத்த அப்ளிகேஷனுடன் களமிறங்கிவிட்டது. தற்போது அது காலி பண்ணக் குறி வைத்திருக்கும் அப்ளிகேஷன் மைக்ரோசாஃப்ட் அவுட்லுக். என்னவென்று புரிந்துவிட்டதா? கூகுள் புதிதாகக் கொண்டு வந்திருக்கும் விஷயம் 'கூகுள் காலண்டர்'. 'வர்ற பதிமூணாம் தேதி செல்லத்துக்கு பர்த் டே', 'நாளைக்கு மதிய நாஷ்டா நாக ராஜ்கூட'ன்னு செல்போன்ல ரிமைண்டர் செட் பண்ணி வைப்போமே, எல்லாத்தையும் இந்த காலண்டர்லயே வெச்சுக்கலாமாம். குறிப்பிட்ட நேரத்துல PING நெட்வொர்க் வசதி மூலமா அந்த ரிமைண்டர் நம்ம செல்லுக்கு எஸ்.எம்.எஸ்.-ஆ வர்றாப்ல செட் பண்ணிக்கலாமாம். என்னென்னிக்கு எந்தெந்த வேலை செய்யணும்னு ஷோக்கா ஷெட்யூல் போட்டுக்க வசதியானதாம் இது. இன்னும் இந்த காலண்டர்ல புதுசு புதுசா என்ன வசதி கொண்டு வந்திருப்பாங்களோன்னு கதிகலங்கிப் போயிருக்காம் யாஹூவும், மைக்ரோசாஃப்ட்டும். (www.google.com/ calendar/).



டௌன்லோட்

இணையத்துல மேய்ஞ்சுக்கிட்டே இருப்போம். ஏதாவது வெளம்பரம் வந்து 'என்னை டௌன்லோட் பண்ணிக்கோ, என்னை டௌன்லோட் பண்ணிக்கோ'ன்னு ஆசை காட்டும். இந்த விஷயம் நல்லாயிருக்குமோன்னு நாமும் டௌன்லோட் பண்ணி இன்ஸ்டால் பண்ணிருவோம். அப்புறம், அந்த அப்ளிகேஷன் நமக்கு பிடிக்காமப் போனா, ஈஸியா அன்இன்ஸ்டால் பண்ணிடுவோம். ஆனா அதோட சில ரெஜிஸ்டரி ஃபைல்கள் அழியாம நம்ம சிஸ்டத்துக்குள்ளேயே உட்கார்ந்து, வீணா ஸ்பேஸை அடைச்சுக்கிட்டு, சிஸ்டம் ஸ்பீடையும் குறைச்சுக்கிட்டிருக்கும். அப்படிப்பட்ட ரெஜிஸ்டரி ஃபைல்களை டெலிட் பண்ண ஒரு அப்ளிகேஷன் வேணுமா? ரெஜிஸ்டர் க்ளீனரை டௌன்லோட் செஞ்சுக் கோங்க : www.tweaknow.com/Regcleaner.html

அகராதி

Www.lanka.info/dictionary/EnglishtoSinhala.jsp இந்த முகவரியை அட்ரஸ் பார்ல அடிச்சிங்கன்னா, உங்களுக்கு ஆங்கிலம் - சிங்களம் - தமிழ் அகராதி கிடைக்கும். ஆங்கில வார்த்தையை அடிச்சுத் தட்டுனா சூப்பரா சிங்களத்துலயும் தமிழ்லயும் அர்த்தம் வந்து நிக்குது. இன்னமும் இணையத்துல உருப்படியான ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் அகராதி இல்லைங்கறது வருத்தத்துக்குரிய விஷயம்தான். சீக்கிரம் கொண்டுவாங்க.



- முகில்



அணையாத லட்சியம்!

'கோலங்கள்' அபிஷேக்குக்கு அறிமுகம் தேவையில்லை. தேவயானியின் கொடுமைக்கார கணவராக ஆரம்பத்தில் வந்தவர், இப்போது தவறை உணர்ந்து திருந்தி அபியிடமே தஞ்சமடையத் துடிப்பவராக சிறப்பாக நடித்து வருகிறார்.

"இப்பத்தாங்க என் கேரக்டர் மேல ஜனங்களுக்குக் கொஞ்சம் கருணை வந்திருக்கு. அபியோட கணவனா இருந்தபோது ஏகப்பட்ட பேர் என்னை வெறுத்திருக்காங்க. ஒருமுறை என் ஃப்ரெண்டு ஒருத்தன் என்னை சாப்பிட வீட்டுக்குக் கூப்பிட்டான். நான் போனப்ப அவன் அம்மா 'இவன் மோசமானவனாச்சே.. இவனையெல்லாம் எதுக்குக் கூட்டிட்டு வந்தே...'ன்னு கேட்டிருக்காங்க. அப்புறம் என்கூட பழகின பிறகு தான் அவங்களுக்கு நான் எப்படிப்பட்டவன்னு தெரிஞ்சிருக்கு" என்று சிரிக்கும் அபிஷேக்கின் செல்ல மகன் கருண்சாய் பிறந்து பத்து மாதங்களே ஆகின்றன.

'மோகமுள்' படத்தில் கதாநாயகனாக நடித்தவர் அபிஷேக். என்னவானது அவரது சினிமா ஆசை?

"அப்படியேதாங்க இருக்கு. அணையாத நெருப்பு மாதிரி உள்ளுக்குள்ளே லட்சியம் அனலாகவே இருக்கு. நல்லவொரு என்ட்ரிக்காக பொறுமையா போராடிக்கிட்டிருக்கேன், சோர்ந்து போகாம..." என்கிறவருக்கு படம் இயக்கும் எண்ணமும் இருக்கிறதாம்.

"ஆமாங்க. இதுகூட என் கனவுதான். ஆனா நான் டைரக்ட் பண்ற படத்துல கண்டிப்பா நடிக்க மாட்டேன். இன்னைக்குப் பல படங்கள் ஃப்ளாப் ஆகுறதுக்குக் காரணம் ஹீரோயிசம்தான். நான நடிச்சா என்னைச் சுத்தித்தான் கதையோடுமே தவிர, நல்ல படங்கள மக்களுக்குத் தர முடியாது" என்று கூறுபவர், இப்போது ஜெயா டீவியின் 'கோலிவுட் கோர்ட்' நிகழ்ச்சியிலும் தொகுப்பாளராகப் புகுந்து விளையாடுகிறார்.

"ரொம்ப நல்ல ப்ரோக்ராம் அது. பல தரப்பட்ட மனிதர்களைக் கேள்வி கேட்டு பதில் வாங்கி, ஆடியன்ஸ் ரியாக்ஷனை உடனே அறிஞ்சுக்க முடியும். சீரியல் மாதிரி சின்னத்திரை ரசிகர்கள் மத்தியில் இந்த கோலிவுட் கோர்ட்டும் எனக்குச் சிறப்பான இடத்தைத் தந்திருக்கு."

அபிஷேக்கின் மனைவி பிரபல இசைக கலைஞர் பத்மா ஷங்கர். ஷங்கர்? ஆம அபிஷேக்கின் நிஜப்பெயர் அதுதானாம்.

"என் மனைவி இல்லைன்னா நான் இல்லை. இன்னைக்கு நான் அடைஞ்சிருக்குற, அடையப்போற எல்லா வெற்றிகளுக்கும் அவதான் காரணம். என்னை ஊக்குவிக்கிற சக்தியா என்னுள்ள அவ நிறைஞ்சிருக்கா" என்று உருகுகிறார் அபிஷேக்.

- மனோ சௌந்தர்

படம் : ஸ்ரீஹரி



கிணற்றால் வந்த சண்டை!



படம் : ஸ்ரீஹரி

நாம் பிரதான கிரஹங்களான சூரியரையும், சந்திரரையும் ராஜ கிரஹங்கள் என்று அழைக்கிறோம். சூரியன் என்பவர் வெப்பத்தை வெளிப்படுத்தக் கூடியவர்!. சூரியன் உச்சத்துக்குச் செல்லச் செல்ல

காஞ்சி கிருஷ்ணா

அதன் வெப்பம் அதிகரித்த வண்ணம் இருக்கும். அதேபோல சந்திரன் என்பவர் குளிர்ச்சியானவர். சந்திரன் உச்சத்துக்குச் செல்லச் செல்ல அவர் தரும் குளிர்ச்சி அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

மேற்கண்ட இரு ராஜகிரஹங்களையும் அடிப்படையாகக் கொண்டு வாஸ்துவை சூரிய வாஸ்து, சந்திர வாஸ்து என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த இடத்தில் நாம் வெப்பம் என்பதை கஷ்டங்கள், இடையூறுகள், குறைபாடுகள் என்று பொருள்கொள்ள வேண்டும். அதேபோல குளிர்ச்சி என்பதை நன்மைகள், மகிழ்ச்சி, குதூகலம் என்று பொருள்கொள்ள வேண்டும்.

அதன்படி, சூரிய வாஸ்து என்பது அதிக சிரமங்களையும், கவலைகளையும் தரக்கூடியது. அதற்கு நேரெதிராக சந்திர வாஸ்து என்பது அதிக மகிழ்ச்சியையும், நன்மைகளையும் தரக்கூடியது.

சரி.... சூரிய வாஸ்துவையும், சந்திர வாஸ்துவையும் நாம் எப்படி அடையாளம் கண்டுகொள்வது... நிறைய வழிகள் இருந்தாலும் புரியும்படி சுருக்கமாகச்

வளம் தரும் வாஸ்து-2

கேளுங்கள் சொல்கிறேன்!

***என்* வீடு மாடி வீடு. கோயிலுக்கு அருகில் உள்ளது. மாடியிலிருந்தே கோபுரத்தைத் தரிசித்து விடுவோம். ஆனால் சிலர் வாஸ்துபடி இது தவறு என்கிறார்கள். உண்மையா... இதற்கு என்ன தீர்வு?**

- காஞ்சிநாதன்,
சேத்தியாதோப்பு

பொதுவாக உயர்ந்த கோபுரத்துக்கு நூறடி தள்ளி வீடு அமைவது நல்லது. அப்படிப் பார்த்தால் சன்னதி தெருவில் வீடே இருக்க முடியாது. குறைந்தபட்சம் கோபுர கலசத்தின் நிழல் நம் வீட்டின் மீது விழாமல் இருந்தால் நல்லது. உங்கள் வீடு இந்த இரண்டிலிருந்தும் தப்பவில்லை என்றால் வீட்டு மாடியிலிருந்து கோபுரத்தைத் தரிசிக்காமல் இருந்தால் இந்த வாஸ்து குறை படிப்படியாக நீங்கும்.

***என்* வீட்டில் நிறைய அறைகள் இருக்கின்றன. ஆனாலும்கூட எனக்கு எங்கு படுத்தாலும் தூக்கமே வருவதில்லை. வாஸ்துபடி தூக்கம்வர வழி இருக்கிறதா?**

- வரலட்சுமி,
நாகப்பட்டினம்

எல்லாவற்றுக்கும் வாஸ்துவில் தீர்வு உண்டு என்று நான் சொன்னது வாஸ்தவம்தான். ஆனால் உங்கள் கேள்விக்குப் பொதுவாகவே சொல்கிறேன். வடக்கு புறம் தலை வைக்காமல், மேற்கு அல்லது தென்மேற்கு சார்ந்துள்ள அறையில் படுத்தால் நிச்சயம் நல்ல தூக்கம் வரும்.

சொல்லிவிடுகிறேன். பூமியில் கிழக்கும், வடக்கும் சார்ந்த பகுதியை சூரிய வாஸ்து என்றும் தெற்கும், மேற்கும் சார்ந்த பகுதியை சந்திர வாஸ்து என்றும் அழைக்கிறோம்.

***என*து நண்பர் தனது வீட்டில் சில பிரச்னைகள், சச்சரவுகள் அடிக்கடி நிகழ்வதாக என்னிடம் வந்து குறைபட்டுக் கொண்டிருந்தார். அவர் சொல்வதை வைத்து எனக்கு ஓரளவுக்குப் புரிந்துவிட்டது... பிரச்னை, பேசுகின்ற ஜீவன்களால் அல்ல.. பேசாமல் இருக்கும் அஜீவனால்தான் என்பது. சரி... நேரே அவர் வீட்டுக்கு ஒரு நடை போய் விஷயத்தைத் தெரிந்துகொள்ளலாம் என்று அவருடன் கிளம்பினேன்.

அவரது வீட்டை சுற்றும் முற்றும் பார்த்தேன். வீட்டில் இருக்கவேண்டிய பூஜையறை, சமையலறை, படுக்கையறை, குளியலறை எல்லாமே சரியாக அமைந்திருந்தன. எனக்கு ஒன்றும் புரியவில்லை. யோசித்தபடியே கொல்லைப்புறம் சென்றேன். அங்கே ஒரு கிணறு இருந்தது. அது இருந்த இடத்தைப் பார்த்த பிறகுதான் எனக்குப் புரிந்தது. கிணறு இருக்க வேண்டிய இடத்தில் இல்லை; தவறாக அமைந்திருக்கிறது என்று.

பொதுவாக உயர வேண்டிய இடம் சந்திர வாஸ்து. தாழ வேண்டிய இடம் சூரிய வாஸ்து என்பதுதான் அடிப்படை. அதன்படி கிணறு என்பது பூமிக்குக் கீழே தாழ்வாக உருவாக்க வேண்டியது. ஆகவே தாழ வேண்டிய இடமான சூரியவாஸ்து பக்கம்தான் கிணறு அமைய வேண்டும். அப்பொழுதுதான் அதனால் நமக்கு நல்ல பலன்கள் கிட்டும்.



ஆனால் எனது நண்பர் வீட்டில் கிணறு அப்படி இல்லை. அவர்கள் வீட்டுக் கிணறு உயர வேண்டிய இடமான சந்திர வாஸ்து பக்கம் அமைந்திருந்தது. என்ன செய்வது? கிணற்றை நகர்த்தியா வைக்க முடியும்...

ஒரே யோசனையாக நான் சொன்னேன்: 'இந்தக் கிணற்றை இனி புழங்க வேண் டாம். செலவு பார்க்காமல் கிணற்றைத் தூர்த்து விடுங்கள். அதற்குப் பதிலாக சூரிய வாஸ்து இருக்கும் இடத்தில் போர் போட்டு, மோட்டார் ஒன்றை அமைத்துக் கொள்ளுங்கள். அதிலிருந்து வரும் தண்ணீரைப் புழங்குங்கள். பிரச்னை தீர்ந்துவிடும். அதன்படியே செய்தனர். இன்று அதற்கேற்ற பலன் கிடைத்துள்ளதாக என்னிடமே வந்து அவர் சொல்லியிருக்கிறார். இப்படி சில மாற்றங்களைச் செய்யும்போது நமக்கு வரும் பிரச்னைகள் தீர்ந்து விடுகின்றன.

இன்றைக்கு வாஸ்து என்னும் கலைக்கு மக்கள் மத்தியில் அபரிமிதமான வரவேற்பு இருக்கிறது. வாஸ்து புருஷனை துதிக்க பலரும் ஆர்வமாக உள்ளனர். எல்லோருக்கும் பயன்படும் வகையில் ஒரு ஸ்லோகம் இருக்கிறது.

வாஸ்து தேவன் துதி :

ஓம் வாஸ்து புருஷாய நம;
ஓம் ரக்த லோசனாய நம;
ஓம் க்ருஷ்ணாங்காய நம;
ஓம் மஹா காயாய நம;

இந்த ஸ்லோகத்தைத் தினமும் பன்னிரண்டு முறை மௌனமாக உச்சரிக்கும்போது நம் வீட்டில் ஏதாவது வாஸ்து குறைபாடு இருக்குமானால் நாளடைவில் தீர்ந்துவிடும் என்பது ஐதிகம்.

இன்னொரு ஆச்சர்யத்தையும் சொல் கிறேன். ஒரு சிங்கத்தை பிடரியை வைத்து ஆணென்றும் பெண்ணென்றும் வேறுபடுத் திப் பார்க்க முடியும். அதேபோல் தந் தத்தை வைத்து ஆண், பெண் யானை களை வேறுபடுத்தலாம். ஆனால் நாம் வாழும் பூமியையும் ஆண் பூமி, பெண் பூமி என்று பிரிக்க முடியும் என்பது வியப் பாக இல்லை. ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்விகள் எழுகின்றனவா?

(பேசலாம்)

மயிலாப்பூரில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் அ.தி.மு.கவின் எஸ்.வி.சேகரும், தி.மு.கவின் நெப்போலியனும் திடீரென்று சந்தித்துக்கொள்கிறார்கள்.

நெப்: அண்ணே வணக்கம்! எப்டி இருக்குது தொகுதி?

சேகர்: பகுதி பகுதியா இருக்குது. பாத்திருப்பீங்களே...?

நெப்: எந்தப் பகுதி உங்களுக்குச் சாதகமா இருக்கு, அதச் சொல்லுங்க.

சேகர்: இது நானாக கேட்ட தொகுதி இல்லே. அம்மாவாப் பாத்து எனக்குக் கொடுத்த தொகுதி. அதனால எல்லாமே சாதகமாத்தான் இருக்கு.

நெப்: ஆமா, ராஜ்ய சபா சீட்டு வாங்கிட்டு ஜாலியா தில்லியில போய் உக்காந்துரலாம்னு ஆசையோட காத்திருந்தீங்க. ஆனா அவ்வளவு சுலபமா நீங்க போயிடாதபடி அம்மா இங்க களத்துல தள்ளி உட்டுட்டாங்க. ஜல்லிக்கட்டுக் காளையப் பாத்த மாதிரி பயந்துட்டீங்க!

சேகர்: ஜல்லியாவது, கட்டாவது! ஜாலியா பேசியே ஜெயிச்சுட மாட்டேன்...! உங்க நெலவரம் எப்படி? கலவரமா?

நெப்: கலைஞர் நிறுத்தின வேட்பாளர் நான். கலவரப்படற ஆளு இல்லே.

சேகர்: வில்லிவாக்கத்துல நின்னு சுலபமா ஜெயிச்சிருக்கீங்க. அங்கியே நிக்க பயமா? அந்தத் தொகுதிய அஞ்சு வருஷமா எட்டியே பாக்கலியோ? அங்கிருந்து வெரட்டி உட்ட மாதிரி மயிலாப்பூருக்கு வந்து நிக்கறீங்க? கலைஞர்ட்ட சொல்லி, கொஞ்சம் ஸேஃப் ஆன தொகுதியா கேட்டு வாங்கியிருக்கலாமே?

நெப்: எஸ்.வி. சேகர் நிக்கற தொகுதி மயிலாப்பூர்தான்னாங்க. அதைவிட ஸேஃப் ஆன தொகுதி இருக்க முடியுமா, கொடுங்கன்னு வாங்கிக்கிட்டேன்...! ஆமா, முன்னயே ஒரு தடவ சுயேச்சையா இங்க நின்னு அறுநூறோ எழுநூறோ வோட்டு வாங்கினீங்க இல்லே? இப்பவும் அதே கணக்கு வருமா, இல்லே அஞ்சு - பத்து கூட வருமான்னு பாக்க நிக்கறீங்க போல!

சேகர்: பழசைப் பத்தி இப்ப என்ன பேச்சு? அது சுயேச்சையா நின்னப்ப, எதேச்சையா கெடைச்ச வோட்டு! இப்ப ரெட்டை இலை சின்னத்துல நிக்கறப்ப, ரெண்டு சைஃபர் சேர்த்து அறுபதாயிரம்-எழுபதாயிரம் அள்ளிட மாட்டேன்? ஆனா... பாவம்... உங்கள நினைச்சாத்தான் பரிதாபமா இருக்கு.

நெப்: உங்க நாடகம் மாதிரியே கொழப்பமா பேசறீங்க.. பரிதாபமா...



“ அப்படிப்போடு

சேகர்: ஆமா! இதுவோ கொஞ்சம் படிச்சவங்க, விவரம் தெரிஞ்சவங்க இருக்கற தொகுதி. இங்க போய் நீங்க...

நெப்: கிண்டலா? இதே தொகுதியில நீங்களே நாடகம் போட்டுக் காலந்தள்ளிட்டு வர்றபோது, நான் எல்லாம் ஜெயிக்க முடியாதா?

சேகர்: ஆனா, உங்களை எல்லாரும் வில்லனா இல்ல பாக்கறாங்க! அருவாளும் கையுமா

நீங்க ஆள வெட்ட வர்ற சீன்தானே எப்பவும் ஞாபகத்துக்கு வருது? அப்றம் வோட்டு எப்டி போடத் தோணும்?

நெப்: அப்ப நீங்க காமெடி பண்றத மட்டும் சீரியஸா எடுத்துக்கிட்டு வோட்டுப் போட்டுடு வாங்களோ?

சேகர்: அப்டிப் போடு அருவாளை! காமெடி பண்றதால யாருக்கும் ஆபத்து வந்துடாது, தெரியுமில்ல? சிரிச்சா ஒடம்புக்கு நல்லதுன்னு டாக்டருங்களே சொல்லி இருக்காங்க!

நெப்: டாக்டர் கலைஞர் சொன்னாத்தான் நான் நம்புவேன்!

சேகர்: அப்டியா? 'பாசக்கிளிகள்' வந்ததும் தெரியாம, போனதும் தெரியாம போய்ட்டதும், கலைஞரே சிரிச்சாலும் சிரிச்சிருப்பார். உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. ஆனா ஒண்ணு...

நெப்: ஒண்ணு என்ன, ரெண்டே சொல்லுங்க!

சேகர்: தன்னோட கதை-வசனத்துலதான் சிரிப்புக்கு வழி பண்ண முடியலே, தேர்தல் அறிக்கையிலயாவது மக்களை நல்லா சிரிக்க வைப்போமேன்னு, நல்ல காமெடி பண்ணியிருக்கார் கலைஞர்! நெப்போலியன் சார், எனக்கு ஒரு காமெடி ஸ்கிரிப்ட் அந்த மாதிரி வாங்கிக் கொடுங்களேன், கலைஞர்ட்ட சொல்லி! எப்டி, எப்டி....



அருவாளை!”

ரெண்டாயிரம் ரூபாய்க்கு கலர் டீ.வியா? ரெண்டு ரூவாய்க்கு ரேஷன் அரிசியா?

நெப்: நாங்க சொல்றதைத்தான் செய்வோம். செய்றதைத்தான் சொல்வோம்!

சேகர்: அறுபத்தேழுல ரூபாய்க்கு மூணு படி அரிசி போட்ட மாதிரிதானே? 'காதுல பூ'ன்னு ஒரு நாடகம் போட்ருக்கேன். அந்த டைட்டில் தான் நினைவுக்கு வருது!

நெப்: ஏன், 'தத்துப்பிள்ளை' நினைவுக்கு வரலியோ?

சேகர்: வருது... வருது... ஆமா ரெண்டு ஏக்கர் நிலம் தருவோம்னு சொல்றீங்களே, எங்கே சஹாரா பாலைவனத்துலயா?

நெப்: தமிழ்நாட்டுல தரிசு நிலம் இல்லாமயா போயிட்டுது? தருவோம். தந்தே தீருவோம்!

சேகர்: தரலாம்... உங்க கட்சி ஆளுங்களுக்குக் கொடுத்தது போக ஏதானும் மீந்தா, தாராளமா தரலாம்!

நெப்: ஒரு காலத்துல 'சங்கரா சங்கரா'ன்னு சுத்தி வந்தீங்க. டீ.விலே பேட்டி எல்லாம் எடுத்தீங்க. அப்றம் அம்போன்னு உட்டுட்டு அம்மாட்ட சரண்டர் ஆயிட்டீங்க. 'ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி' ஞாபகம் வந்துட்டுதோ?

சேகர்: அவங்களப் பாத்துக்க அவங்களுக்கே தெரியும்னு புரிஞ்சுக்கிட்டு, ஒதுங்கிடறதுதான் அண்ணே லாஜிக்.

நெப்: சரியான 'வால் பையன்'ங்க நீங்க! சமாளிக்கறீங்க நல்லா! வாக்காளர்கள் காத்துக்கிட்டிருக்காங்க. வரேன். கட்டாயமா உதயசூரியன் சின்னத்துல வோட்டுப் போட்ருங்க!

சேகர்: ஆகா, தாராளமா போடறேன்! நீங்களும் மறக்காம ரெட்டை இலை சின்னத்துல வோட்டுப் போட்ருங்க!

(இருவரும் பிரிகிறார்கள்)

கற்பனை: **சாருகேசி**

முக்கூட்டு மருத்துவத்தால் ஆண் - பெண் மலட்டுத் தன்மை நீங்கி குறைந்த செலவில் குழந்தை பெறலாம்

இந்த உலகம் என்றென்றும் அழியாமல் நிலைத்திருக்க வேண்டுமானால் வாரிசுகள் பிறந்து கொண்டே இருக்க வேண்டும். ஆனால் திருமணமான சில தம்பதியரில் தனது ஆஸ்தியை ஆளவும், தனது பரம்பரை வம்சத்தை இனவிருத்தி செய்யவும், பெற்றோரைக் காப்பாற்றவும், கடைசி காலத்தில் ஈமக் கிரியைகள் செய்யவும் தங்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லையே என்று கண்ணீரோடு கோயில் குளங்களை சுற்றிக் கொண்டும், மந்திர தந்திரங்களில் ஈடுபட்டும், தாயத்துக்களை கட்டிக் கொண்டும், அரச மரத்தையும் - வேப்ப மரத்தையும் சுற்றிக் கொண்டும் சிலர் நரபலி கொடுத்துக் கொண்டும், வயோதிக காலம் வரை தங்களது வாழ்நாளை வீணாக்கிக் கொள்ளுகிறார்கள். அதோடும் இல்லாமல் பெண்கள் மலடி என்ற பட்டத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் கணவராலும், உறவினராலும் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்படுகிறார்கள். சிலர் தற்கொலை முயற்சியிலும் ஈடுபடுகிறார்கள்.

இவர்களின் துன்பங்களைப் போக்க திருவண்ணாமலை மாவட்டம் **வந்தவாசியிலும், சென்னை வடபழனி 100அடி சாலையிலும் 'நவீன வைத்தியாலயா'** என்ற ஆஸ்பத்திரி நடத்தி வரும் 'மருத்துவ திலகம்' டாக்டர் **A. அர்ஜுனா, டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா, டாக்டர் M. A. சரவணன்** ஆகிய மூவரும் **ஹோமியோ - சித்த - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவ சிகிச்சையில் குழந்தை பாக்கியம்** உண்டாக்கித் தருகிறார்கள்.




• ஈரோடு அருகில் நசியனூரைச் சேர்ந்த, கருக்குழாய் அடைப்பு நீங்கி, குழந்தை பெற்ற சம்பூர்ணம் சின்னசாமி (ஆண் குழந்தையுடன்) தம்பதியர்

"சமூகத்தில் குழந்தை பெறாமைக்கு பெண்களே காரணம் என்று மக்கள் கருதுகிறார்கள். ஆனால் எங்களிடம் சிகிச்சைக்கு வரும் கணவன் - மனைவி தம்பதியரை பரிசோதித்துப் பார்த்ததில் ஆண்களுக்கு 60 முதல் 70 சதவிகிதம் வரை குறைபாடும், பெண்களுக்கு 30 சதவிகித குறைபாடும் இருப்பது தெரிய வருகிறது. அதனால் குழந்தை பெறுவதில் கணவன் - மனைவி இருவருமே பொறுமையுடன் பொறுப்புடன் சிகிச்சை பெற முன் வர வேண்டும்.

சில ஆண்களுக்கு சிற்றின்பத்தில் நாட்டம் இல்லாமல் இருப்பதாலும் உயிரணு உற்பத்தி அறவே இல்லாமையாலும் சிலருக்கு உயிர் அணுக்கள் உற்பத்தி குறைவாகவே இருப்பதாலும், அம்மை நோயினாலும், புட்டாளம்மையாலும், மஞ்சள் காமாலையாலும், டைபாய்டு ஜுரத்தாலும், முறையற்ற செக்ஸ் பழக்க வழக்கங்களாலும் உயிரணு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இதை முக்கூட்டு மருத்துவத்தால் சிகிச்சையளித்து குழந்தை பிறக்கச் செய்கிறோம்.

பாத்திமா - சம்சுதீன் தம்பதியருக்கு



• உலகப்புகழ் பெற்ற மருத்துவ திலகம் டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனாவுடன் இருப்பவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் உயிரணு உற்பத்தியாகியும் கருக்குழாய் அடைப்பு நீங்கியும் குழந்தை பெற்ற ரங்கநாதன் - கீதா தம்பதிகள்

23 ஆண்டு காலம் குழந்தை இல்லாதிருந்து, எங்களிடம் இரண்டுமாத சிகிச்சையில் பெண் குழந்தை பெற்றார்கள்.

துபாயில் முருகன் - வள்ளி தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி அதிகரித்தும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பெற்றுள்ளனர். கோயம்புத்தூர் பெரிய நாயக்கன் பாளையத்தில் அறவே உயிரணு உற்பத்தி இல்லாத மாணிக்கம் என்பவருக்கு எங்கள் சிகிச்சையில் 110 மில்லியன் கவுண்ட்டும், 20% மொட்டிலிட்டியும் (உயிரணு) உற்பத்தி ஆகியுள்ளது. இது ஒரு பெரிய சாதனை.

தஞ்சாவூரில் ராமையா என்பவருக்கு உயிரணு உற்பத்தி அறவே இல்லாதிருந்து தற்போது (கவுண்ட்) 110 மில்லியனும், 60% மொட்டிலிட்டியும் உற்பத்தி ஆகியுள்ளது.

மதுரையில் அரசாங்க பணியில் ஓய்வு பெற்ற 65 வயதுடைய அதிகாரி ஒருவருக்கு உயிரணு உற்பத்தி செய்தும், அவர் மனைவிக்கு கருக்குழாய் அடைப்பு நீக்கியும் பெண் குழந்தை பிறக்கச் செய்துள்ளோம். விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை சார்ந்த ராமன், மனைவி தேவி தற்போது 8 மாதம் கர்ப்பவதியாக உள்ளார். திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணையில் குமார் மனைவி சரண்யா தற்போது 4 மாதம் கர்ப்பவதியாக உள்ளார்.

சென்னையைச் சேர்ந்த போலீஸ் வேலையில் பணிபுரியும் மாணிக்கம் என்பவருக்கு அறவே உயிரணு உற்பத்தி இல்லாதிருந்தது. தற்போது கவுண்ட் 75 மில்லியனும், மொட்டிலிட்டி 60 சதவிகிதமும் 4 மாத சிகிச்சையில் உற்பத்தியாகியுள்ளது.

உலகின் பல நாடுகளிலிருந்து வந்தும், இந்தியாவில் பல மாநிலங்களிலிருந்து வந்தும் எங்கள் **நவீன வைத்தியாலயாவில் ஹோமியோ - சித்த - ஆயுர்வேத முக்கூட்டு சிகிச்சை** பெற்று வருகிறார்கள். 100க்கு 90 சதவிகிதம் பேர் குழந்தை பெற்றுக் கொள்ளலாம். நீங்களும் குறைந்த செலவில் குழந்தை பெற வேண்டுமானால் எங்களை உடனே சந்திக்கவும்'' என்று அழைக்கிறார்கள் **'மருத்துவ திலகம்' டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா, டாக்டர் M. A. சரவணன்** ஆகிய மூவரும்.



டாக்டர்
M.A.சரவணன்B.H.M.S.



மருத்துவ திலகம்
டாக்டர் A. அர்ஜுனா,
டாக்டர் V. A. ஆண்டாள் அர்ஜுனா

பழைய எண் : 9, புதிய எண் : 65,
100 அடி ரிங் ரோடு, வடபழனி,
சென்னை - 600 026.
போன் : 044- 23623464 Cell: 9443036522

நெ. 30, பிராமணர் தெரு, (ஈஸ்வரன் கோயில் அருகில்), **வந்தவாசி,**
திருவண்ணாமலை மாவட்டம் - 604 408.
போன் : 225208, 228077, 226180 STD 04183.
web: www.naveenainfertilityhospital.com
E-mail: drarjuna@naveenainfertilityhospital.com

டேப்பு கண்ணா டேப்பு!

கு. ஞானசம்பந்தன்



[illegible] கழிச்சு கீழப்பட்டிப் பக்கம் 'அரிச்சந்திர மயான காண்டம்' நாடகம், நம்ம உடையப்பத் தேவர் அரிச்சந்திரனா நடிச்சது வர்றீகளா போவோம்..." என்று என்னிடம் ரகசியமாய்க் கேட்டார் ராக்கு. நான் 'சரி' என்பதற்குள் என் தந்தையார் வந்தார். என் தலையைப் பார்த்தார். "இன்னும் கொஞ்சம் வெட்ட வேண்டாமா?" என்று சந்தேகத்தோடு கேட்டார்.

''போதுங்கய்யா. இவரு முகத்துக்கு இதுதான் அழகு. பாருங்க சினிமா ஆக்டர் மாதிரி இருக்காரு.... (இது வாழ்த்தா? வசவா? வஞ்சப் புகழ்ச்சியா? என்று இன்றுவரை எனக்குப் புரியவில்லை!) அதுமட்டுமில்லை. நம்ம ஊர்ல சினிமாக்காரங்க எல்லாம் வந்து எறங்கியாச்சாம். நான் அவசரமாய்ப் போகணும்" என்று சொல்லிக் கிளம்பினார்.

அவர் சொன்ன கடைசி வார்த்தை என்னை மின்னல் போல் தாக்கியது. என் தலைமுடி செய்யப்பட்ட கோலமோ சொல்லவே வேண்டியதில்லை!



'பட்டிக்காடா பட்டணமா' சினிமா ஷூட்டிங் தொடங்கிவிட்டார்களாம். நாகமலை அடிவாரத்தில் மலைப்பட்டி கிராமத்துக்கு அருகில் நடிகர், நடிகைகள் வந்து இறங்கிவிட்டார்களாம். நாம் உடனே புறப்பட வேண்டும்' இதுதான் சினிமா மணி கொடுத்த அவசரச் செய்தி.

அந்த இடம் எங்கள் ஊரிலிருந்து 4 மைல் தூரம் இருக்கும். சைக்கிளில் போகலாம் என்றால், அதிகாலையிலேயே எல்லா சைக்கிள் கடை சைக்கிள்களும், ஓனரின் சொந்த வண்டி உட்பட ஷூட்டிங் பார்க்கப் போய்விட்டதாகத் தகவல்.

என்ன செய்யலாம்? ஒரு வேளை என் வாழ்க்கையில் ஷூட்டிங் பார்க்க முடியாமலே போய்விடுமோ என்று யோசித்து அவசர உதவிக்கு எங்கள் ஊரில் உள்ள பெரிய விநாயகரான புட்டு விநாயகரை வேண்டிக் கொண்டேன்.

அடுத்த நிமிடம் ஜல், ஜல் என்று சலங்கை ஒலி கேட்க பங்களா வீட்டு. நாராயணனின் வில் வண்டி எங்களைத் தாண்டி நின்றது. 'வாங்கடா வந்து ஏறுங்கடா' என்று சினிமாமணியின் அதட்டலான ஓசை கேட்டது. நானும் சிவனாண்டியும், செவத்தக்காளையும் ஒரே பாய்ச்சலில் வண்டியில் ஏறினோம். வண்டிக்காரப் பாண்டி எழுந்து நின்று நூல்சாட்டையைச் சொடுக்க, கம்பீரமான அந்த காங்கேயன் காளைகள் செம்மண்

ரோட்டில் பறக்கத் தொடங்கின.

இந்தக் காலத்தில் 'டாடா சுமோ' 'குவாலிஸ்' கார்களுக்கு என்ன மரியாதை உண்டோ அத்தனை மரியாதை அந்தக் காலவில் வண்டிகளுக்கு உண்டு.

வெளிப்புறம் கண்ணாடி விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். ஜமீன்தார்கள், பண்ணையார்கள் வைத்திருக்கும் வண்டி அது. வண்டியின் உள்ளே வண்டிச் சொந்தக்கார அய்யரின் மகன் நாராயணனும் இருந்தான். எங்களைப் பார்த்து நட்பாகச் சிரித்தான்.

"நம்ம நாராயணன்தான்டா. ஷூட்டிங் பாக்கணும்னு காலையில கேட்டான். வில்வண்டி வேணுமேன்னு நான் சொன்னேன். உடனே வந்திருச்சு. ஏறியாச்சு. கிளம்பியாச்சு, அதுமட்டுமில்லாம ஷூட்டிங் பாக்க நடந்து போனாலோ, சைக்கிள்ல போனாலோ பக்கத்தில விடமாட்டான் பாரு அதுக்குத்தான்" என்றான் மணி ரகசியமாக. நம்முடைய பால்ய காலத்தின் ஆசைகளும், அவை நிறைவேறியவுடன் கிடைக்கும் மகிழ்ச்சிகளும், எத்தனை இனிமையானவை.


"தம்பிகளா... அந்தச் சின்னக்கூடையில முறுக்கும், சீடையும் இருக்கு. வண்டிப் பெட்டியில (டிக்கி மாதிரி) 10 இளநி இருக்கு, சாப்பிடுங்க இளநிய சிவித்தர்றேன்" என்றார் வண்டிக்காரர்.

இரண்டு புறங்களிலும் பச்சைப் பசேல் என்ற வயல்கள், கொடிக்கால்கள், தோப்புகள் என எல்லாவற்றையும் பின்னே தள்ளிக்கொண்டு வண்டி பறந்தது. எங்களுக்கு முன்பாகக் காலையிலே சைக்கிள் எடுத்துக்கொண்டு கிளம்பியவர்களை எங்கள் வண்டி முந்தியபோது நாங்கள் 'ஓ' என்று சத்தமிட, வண்டிக்காரர் தன் சாட்டைக் கம்பின் பின்புறத்தை வண்டிச் சக்கரங்களுக்கு நடுவே கொடுக்க, 'கட கடகட' என்று சப்தம் வீதியை மிரட்ட, நாங்கள் ஷூட்டிங் நடக்கிற இடத்துக்குப் போனபோது கூட்டம் மிரண்டு வழிவிட்டது.

சினிமாக்காரர்களே மிரண்டுபோனார்கள். அந்த மிரட்சி குறைவதற்குள் மணி கீழே குதித்து அஸிஸ்டெண்ட் டைரக்டரிடம் அந்த வண்டியையும், உள்ளே இருந்த நாராயணனையும் காட்டி ஏதோ சொல்ல, அவர்கள் மகிழ்ச்சியாக வரவேற்று ரெண்டு நாற்காலியும் போட்டார்கள்.

நாராயணனும், மணியும் உட்கார்ந்து கொள்ள, நாங்கள் பவ்யமாகப் பின்னே நின்று கொண்டோம்.

இருபுறமும் வயல்களும், நடுவே செம்மண் ரோட்டில், மாட்டு வண்டியில் கதாநாயகன் சிவாஜிகணேசன் கதாநாயகி ஜெயலலிதாவை ஏற்றி கடத்திக்கொண்டு



போவதாகக் காட்சி. ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் ஒரு வண்டியும், அதில் குடுமி வைத்த கதாநாயகனும், அவருக்குப் பின்னால், கல்யாண உடையில் கதாநாயகியும் நின்றிருந்தார்கள்.

'அவர்தான் சிவாஜி, அவங்கதான் ஜெயலலிதா' என்று யாரோ குரல் கொடுக்க, எல்லோரும் அந்தத் திசை நோக்கி இராமாயண பரதனைப் போல் தொழுதார்கள்.

'ஸ்டார்ட், கேமரா, ஆக்ஷன்' என்று இயக்குநர் பல்பொடி விற்கும் போனில்



''பத்திரிகை ஆபிஸிலேர்ந்து போன் வந்திருக்கு தலைவா!''

''என்னவாம்?''

''உங்க அறிக்கை ரொம்ப நீளமா இருக்காம். ஏழெட்டு வாரம் வர்றமாதிரி தொடர் அறிக்கையா வெளியிடலாமான்னு கேட்கிறாங்க!''

- லீலாஜி

சத்தமிட, அந்த வண்டி அங்கிருந்து கிளம்பிவர, நாலு பக்கமும் விசில்பறக்க, நாங்கள் நாற்காலிகள் மேல் ஏறிப் பார்க்க, அந்த வண்டி மிகவேகமாக ஓடி வந்து நாங்கள் இருந்த இடத்தில் நிற்க,

'கட்' என்றார் டைரக்டர். நாங்கள் சந்தோஷம் தாங்க முடியாமல் அந்த வண்டியைப் பார்த்து அப்படியே ஆச்சரியத்தில் 'ஆ' என்று நின்றோம்.

அந்த வண்டியில் குடுமியோடு இருந்தது சிவாஜியும் இல்லை. பின்னாடி கல்யாண உடையில் இருந்தது கதாநாயகி ஜெயலலிதாவும் இல்லை.

"சரி மீதியை நாளைக்கு எடுத்துரலாம். அதுக்குள்ள இன்னிக்கு ராத்திரி சிவாஜி சார் வந்திருவார். கதாநாயகியும் வந்தாச்சாம். நாளைக்கு பத்து ரேஸ் மாட்டு வண்டிகள், நூறு ஆட்கள், கம்பு, குண்டாந்தடி எல்லாம் வேண்டியிருக்கும்'' என்று சொல்லிக்கொண்டே அவர்கள் காரில் ஏறி உட்கார, துணை இயக்குநர் மணியிடம் 'நாளைக்குப் பாப்போம்' என்று சைகை காட்டிவிட்டு காரில் தொற்றிக்கொள்ள... எனக்கு ஒன்றுமே புரியிவில்லை.

"என்ன மணி இப்படி ஆயிருச்சே... இவங்க யாரு?'' என்று கவலையோடு கேட்டேன்.

"இவங்கெல்லாம் சினிமாவுல 'டூப்' போடுறவங்கடா. அதாவது சிவாஜி மாதிரி இருப்பார் சிவாஜி இல்ல. எம்.ஜி.ஆர். மாதிரி சில பேர் இருப்பாங்க. உண்மையில எம்.ஜி.ஆர். இல்ல. தெரியுமா?''

"இவங்க எதுக்கு, அவங்களையே வச்சு எடுத்துரலாமே'' என்றேன் நான்.

"அதில்லடா, மாடியில இருந்து குதிரையில குதிக்கணும்னு வச்சுக்க. அப்பக் கதாநாயகன் குதிக்க முடியுமா, இல்ல குதிச்சு ஏதாவது ஆச்சுன்னா ஷூட்டிங் நின்னு போயிறாதா? அதுக்குத்தான் இது. சண்டைக்காட்சி, ஆபத்தான சீன் இதுல எல்லாம் இவங்கதான் வருவாங்க.''

"சரி, இப்ப அப்பிடி ஒண்ணும் நடக்கலையே அப்புறம் ஏன் 'டூப்'?'' என்றான் சிவனாண்டி.

"இந்தக் காட்சி சினிமாவுல 'லாங்ஷாட்ல' தாண்டா வரும். நாளைக்கு அவங்க வந்தவுடனே இதையே கிட்ட எடுத்து, அதுல அவுங்க நடிச்சு, இரண்டையும் ஒண்ணாச் சேத்தா நமக்கு இவங்களே அங்க இருந்து வர்ற மாதிரி இருக்கும்'' என்றான்.

எனக்கோ வேதனை தாங்க முடியவில்லை. நாம முதமுதல்ல பாத்த ஷூட்டிங் 'டூப்' ஷூட்டிங்தானா?

சினிமா உலகமே 'டூப்'தானா?

(ரீல் சுற்றும்)

படம் : புதூர் சரவணன்

சின்ன ஜோக்; பெரிய பரிசு!

போட்டி முடிவு – 13

'அட்மிஷன் ஜோக்'குக்கு ஏகப்பட்ட வரவேற்பு. பெஸ்ட் ஜோக் எழுதி தூத்துக்குடி மெட்டல்ஸ், சென்னை வழங்கும் சூர்யா கேஸ் ஸ்டவ் பரிசாகப் பெறும் வாசகர் மு. செந்தில்குமார், திருச்சி.

"உங்க பையனுக்கு அட்மிஷன் வேணும்னா ஒரு மூட்டை சிமெண்ட், செங்கல், மணல் வாங்கித் தரணும்."

"ஏன், ஸ்கூலை விரிவுபடுத்தி கட்டப் போறீங்களா?"

"இல்ல. ஸ்கூலே இனிமேதான் கட்டப் போறோம்!"

• • •

பிரசுரத்துக்குத் தேர்வானவை...

"ஸ்கூல் அட்மிஷன் தரணும்னா ஸ்கூல் பஸ்லதான் வரணும்... ஸ்கூல் கேன்டீன்லதான் சாப்பிடணும்... ஸ்கூல் ஷாப்புலதான் ஸ்டேஷனரிஸ் வாங்கணும்... ஸ்கூல்ல விக்கிற யூனிபார்ம்தான் போட்டுக் கணும்... ஸ்கூல் டீச்சர்ஸ்கிட்டேதான் டியூஷன் படிக் கணும்னு இவ்வளவு கண்டிஷன் போடற நீங்க, பையன் இறுதித் தேர்வுல ஃபெயிலாயிட்டா என்ன செய்வீங்க...?"

"கவலையே படாதீங்க... ஸ்கூல் நிர்வாகம் நடத்தற டுடோரியல்ல சேர முன்னுரிமை தருவோம்."

- கே.ஜி.எஸ்

• • •

"பக்தா... உனது இறை பக்தியை மெச்சுகிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்..."

"டொனேஷன் ஒண்ணும் கொடுக் காம என் பையனுக்கு ஒரு நல்ல ஸ்கூல்ல எல்.கே.ஜி சீட் கிடைக்கணும்...!"

"கடவுளையே சோதிக்க உனக்கு எப்படியப்பா மனம் வந்தது...?"

- அ. நிஷா

• • •

"என் பையனுக்கு உங்க ஸ்கூல்ல அட்மிஷன் வேணும்... என்ன எதிர்பார்க்கறீங்க சார்?"

இதயத்துல இடம் தரேன்!

"வேற ஒரு நல்ல ஸ்கூல்ல என் பைய னுக்கு அட்மிஷன் வாங்கிக் கொடுத் துடுங்களேன்...ஹி...ஹி..."


- கிரிஜா மணாளன்

• • •

"ஸ்கூல் கரஸ்பாண்டென்ட் அரசியல் வாதியா இருந்திருப்பார்னு எப்படிச் சொல்றீங்க?"

"பையனுக்கு எல்.கே.ஜியில சீட்டு இல்லாட்டியும் அவர் இதயத்துல இடமுண்டுங்கறாரே!"

- வி. ஆனந்த்





* சேகர்



* ராஜேந்திரன்

தந்தாரு. 'அட... பா.ம.கவுல இப்பிடி ஒரு ஆளா!'ன்னு நாங்க எல்லாருமே அன்னைக்கு ஆச்சர்யப்பட்டுப் போனோம். அந்த ஆச்சர்யம் இன்னும் எங்களை விட்டு நீங்கலை. சொன்னபடி கடைவீதியில யார்ட்டயும், எந்த நன் கொடையும் பா.ம.க சார்புல யாரும் இதுவரைக்கும் வந்து வாங்குனதே இல்லே"

- பண்ருட்டியில் இறங்கி நாம் விசாரிக்க ஆரம் பித்ததுமே பழம்பெரும் வியாபாரி ஒருவரிடமிருந்து வந்து விழுகிறது சிட்டிங் எம்.எல்.ஏ வேல்முருகனுக்கு சர்ட்டிபிகேட்.

இங்கு மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை நாற்பதாயிரம். 2001 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க கூட் டணியின் பா.ம.க வேட்பாளர் வேல்முருகன், தம்மை எதிர்த்து நின்ற தி.மு.க வேட்பாளரைக் காட்டிலும் ஒன்ப தாயிரம் வாக்குகள் அதிகம்

கொடி பறக்குது!

"கடந்த 2001 தேர்தல்ல வேல்முருகன் தம்பி நின்னப்ப 'கடை வீதியில ஒரு ரூபாய்கூட எந்த ஏவாரிகிட்டயும் நன் கொடை வாங்க மாட் டேன். கட்டப் பஞ்சாயத் துல ஈடுபட மாட் டேன்'னு வாக்குறுதி

பெற்றிருந்தார். அப் போது சுயேச்சையாகக் களமிறங்கிய பண்ருட்டி ராமச்சந்திரன், சுமார் முப்பத்திரெண்டாயிரம் வாக்குகளைப் பெற்றார். தற்போது வேல்முருகனே தி.மு.க கூட்டணியில் பா.ம.க வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அ.தி.மு.க வேட்பாளராகக் களமிறக்கப்பட்டிருப்பவர் சொரத்தூர் ராஜேந்திரன். 2004 பாராளுமன்ற தேர்தல், 89, 96 சட்டமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு தொடர்ந்து தோல்வி கண்டவர். இவர்கள் இருவருக்கு மிடையில் மூன்றாவது முக்கிய வேட்பாளராகத் தம்மை அடையாளம் காட்டிக்கொண்டிருப்பவர் பண்ருட்டி ராமச்சந்திரன். நடிகர் விஜயகாந்தின் தே.மு.தி.க சார்பாகப் போட்டியிடுகிறார்.

"பண்ருட்டியார் இங்கு போட்டியிடாமல் இருந்திருந் தால் எங்கள் வேட்பாளருக்கும், பா.ம.க வேட்பாளருக்கும் கடுமையான போட்டியாக அமைந்திருக்கும். மூன்றாவது வேட்பாளராக அவர் இங்கு நிற்பதால், பா.ம.க வாக்கு களைப் பெருமளவு வாங்கி விடுவார். அ.தி.மு.கவுக்கு



* பண்ருட்டி ராமச்சந்திரன்



* தனவேல்



* அய்யப்பன்

தொகுதி விசிட் பண்ருட்டி

மறைமுக உதவியாகவும், அ.தி.மு.க வேட்பாளர் வெற்றி பெறவும் பண்ருட்டியார் பெறுகின்ற வாக்குகள் வழிகோலும்!" என்கிறார் கடலூர் கிழக்கு மாவட்ட ஜெ. பேரவைச் செயலாளர் பன்னீர்செல்வம்.

"தொகுதியில் போட்டியிடும் மூன்று முக்கிய வேட்பாளர்களுமே எனக்கு நெருங்கிய நண்பர்கள். இருந்தாலும் நடப்பு விவரங்களைச் சொல்லாமல் என்னால் இருக்க முடியாது. பண்ருட்டி நகரவாசிகளின் பல்லாண்டு கோரிக்கையான உள் விளையாட்டு அரங்கு ஒன்றினைத் தமது கடுமையான முயற்சிகளின் பலனாக இங்கு கொண்டு வந்தவர் வேல்முருகன். வயதில் இளைஞர். தொகுதிவாசிகளின் செல்லப் பிள்ளை என்றுகூடச் சொல்லலாம். தொகுதிக்குள் எல்லாத் தரப்பு மக்களிடமும் நற்பெயர் பெற்றிருக்கும் வேல்முருகனின் கொடி இங்கு வெகு உயரத்தில் பறக்கிறது! என்று கூறுகிறார் ரோட்டரி சங்கத் தலைவர் எஸ்.என்.சண்முகம்.

கருக்கை என்றொரு கிராமம். பண்ருட்டியிலிருந்து பதினைந்து கி.மீ. இருக்கிறது. அந்தக் கிராமத்தில் பெரும்பாலோர் பண்ருட்டி ராமச்சந்திரனை மானசீகமாகத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுகின்றனர். "இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னாடி 'கருக்கை'ன்னு ஒரு கிராமம் இருப்பதாக பண்ருட்டிகாரர்களுக்கே தெரியாது. எங்களோட ஊரை எல்லார்க்கும் தெரியப்படுத்தினவரு பண்ருட்டியார். ரோடு வசதியே அப்புறமாத்தான் வந்திச்சு. சாலை வசதி, டவுன் பஸ், பள்ளிக்கூடம், குடிநீர் வசதின்னு இந்த ஊருக்கு ஒவ்வொன்றாகக் கொண்டு வந்தவரு எங்க பண்ருட்டியார் தானுங்க. அதனால இந்தத் தேர்தல்ல அவருக்குத்தாங்க என்னோட வோட்டு!" என்று கூறுகிறார் கருக்கை கிராம விவசாயி சண்முகம்.

"பண்ருட்டியார் செஞ்சதெல்லாம் அப்ப. அதுக்கு அப்புறம் ஒரு இருபது வருஷமா அவரு இந்தப் பக்கம் எட்டிப் பார்த்தாரா? சென்னையிலயே செட்டில் ஆயிட்டாரு. எங்க ஊர்லேர்ந்து ஒரு பத்து வயசுப் பையன் ஓடிப்போயி கருக்கையில இப்படி ஒரு பிரச்னைன்னு தகவல் சொல்லிட்டு வந்தாப் போதும். மறுநாளு டாண்ணு வந்து நிப்பாரு எங்க ஊரு எம்.எல்.ஏ வேல்முருகன். பல தொகுதிகள்ல தங்களோட எம்.எல்.ஏவை ஜனங்க தேடிட்டு இருப்பாங்க. பண்ருட்டியில எப்பிடின்னா ஜனங்களைத்



• வேல்முருகன்



• எஸ்.என்.சண்முகம்



• செல்வி



* சண்முகம்



* லதா



* பன்னீர்செல்வம்

தேடி அவரு வந்திடுவாரு. மாங்கனிக்குத்தான் என்னோட வோட்டு!'' என்கிறார் கருக்கையைச் சேர்ந்த தனவேல். இதே கருத்தை நம்மிடம் வலியுறுத்தினார் செல்வியும்.

''வழக்கமா நாங்க வோட்டுப் போடுறது ரெட்டை எலைக்குத் தாங்க. அது எம்.ஜி.ஆர் காலத்து லேர்ந்து எங்களத் தொத்திக்கிட்ட பழக்கமாப் போச்சு!'' என்கிறார் விவசாயக் கூலியான லதா.

''வேல்முருகன் எம்.எல்.ஏவா ஆனதுக்கப்புறமா பண்ருட்டி சுற்று வட்டாரத்துல, ஸ்கூல்ல படிக்கிற பிள்ளைங்களோட கல்வித்தரம் உயர்ந்திருக்கு. தொகுதியில இருக்குற பள்ளிகள்ல, பத்தாவது பன்னிரண்டாவதுல ஸ்கூல் லெவல்ல முதல் மூணு எடங்கள்ல மார்க் வாங்குற புள்ளைங்களுக்கு ஒவ்வொரு வருஷமும் பரிசுகள் தந்து வர்றாரு. அது மட்டுமில்லீங்க... டாக்டருக்கும், இன்ஜினீயர்க்கும் படிக்க வசதியில்லாத சில ஏழை மாணவர்களுக்கு அவரே எல்லா படிப்புச் செலவையும் தொடர்ந்து செஞ்சு வர்றாரு. அவரு செஞ்சதுல நூத்துல ஒண்ணுதான் உங்கள்ட்ட சொல்லியிருக்கேன்!'' என்றார் அய்யப்பன்.

பண்ருட்டி நகரில் ஹை மாஸ் விளக்குகள், உள்விளையாட்டு அரங்கம், மண் சாலைகளே எட்டிப் பார்க்காத சின்னஞ்சிறு கிராமங்களில் சிமெண்ட் ரோடு, சட்டமன்ற மேம்பாட்டு உறுப்பினர் நிதி வாயிலாக நூற்றுக்கும் மேற்பட்ட குக்கிராமங்களில் குடிநீர் வசதி, தொகுப்பு வீடுகள், கச்சா வீடுகள் என தொகுதியில் இருந்த அனைத்து வீடுகளையும் பழுது நீக்கிப் புதுப்பித்தது, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் என வேல்முருகன் செய்துள்ள பணிகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

"துடிப்புடன் செயல்படும் எம்எல்ஏ ஒருவரைப் பெற்றவர்கள் பண்ருட்டி தொகுதிவாசிகள். தொகுதிக்குள் ஐந்தாண்டுகளில் அவர் நிறைவேற்றித் தந்திருக்கிற மக்கள் நலத் திட்டங்கள் இந்தத் தேர்தலிலும் அவரை வெற்றிப்படிகளில் ஏற்றி வைத்து விடும்!'' எனச் சொல்கிறார் இந்திய கம்யூ. கட்சியின் கடலூர் மாவட்ட துணைச் செயலர் சேகர்.

''சமீபத்திய வெள்ளத்தின்போது தமிழகத்திலேயே கடலூர் மாவட்டம்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. அதிலும் பண்ருட்டி நகரில்தான் அதிகமான மழை அளவும் பதிவானது. பண்ருட்டி தொகுதி பா.ம.க வசம் இருக்கிறது என்கிற ஒரே காரணத்துக்காக, வெள்ள நிவாரணத் தொகை எதுவும் என் தொகுதிக்குத் தரப்படவே இல்லை. இது எந்த வகையில் நியாயம் என்று என் தொகுதி மக்கள் குமுறிக் கிடக்கிறார்கள். தொகுதி மக்கள் நலனில் நான் காட்டி வரும் அக்கறை, தொடர்ந்து போராடி தொகுதிக்குள் கொண்டு வந்திருக்கும் மக்கள் நலப் பணிகள் இவற்றை முன்னிறுத்தியே மீண்டும் தேர்தலில் போட்டியிடுகிறேன். எனக்கு என் தொகுதி மக்கள் மீது நிறையவே நம்பிக்கை இருக்கிறது!'' என்றார் வேல்முருகன் நம்மிடம்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



மௌனம்!

எந்த அவயவத்தையும் விட வாய்க்குத்தான் வேலை ஜாஸ்தி. ருசி பார்ப்பது, அதாவது சாப்பிடுவது, பேசுவது என்று அதற்கு இரண்டு காரியம் இருப்பதாலேயே, இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பது தான் பரமேச்வரன் அபிப்ராயமாக இருக்க வேண்டும். 'வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி' என்கிறபோது சாப்பாடு, பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதுதான் தாத்பர்யம். ஆனால் நேர்மாறாகப் பண்ணுகிறோம். இரண்டு வேலையும் தேவைக்கு அதிகமாகக் கொடுக்கிறோம். வாய்தான் ரொம்ப over-worked! 'கண்டதைத் தின்று கெடுதலை வரவழைத்துக்கொள்ளாதே; ஸாத்விக ஆஹாரம் மட்டும் மிதமாகச் சாப்பிடு; அதுவும்கூட இல்லாமல் அவ்வப்போது உபவாஸமிரு' என்கிறது சாஸ்திரம். இதேபோல, 'வாயில் வந்ததைப் பேசிக் கொண்டே போகாதே; அதனால் பிறத்தியானையும் கெடுக்காதே. பகவத் விஷயமாகப் பேசு, பாடு, பஜனை பண்ணு' என்று சொல்லிவிட்டு, உபவாஸத்தில் ஸாத்விகாஹாரம் கூடப் பண்ணப்படாது என்று வைத்திருக்கிற மாதிரியே, 'பகவத் பரமான பேச்சும் கீர்த்தனமும்கூட இல்லாமல் அவ்வப்போது வாயை மூடிக் கொண்டு மௌனமாக இரு' என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

இப்போது எங்கே பார்த்தாலும் பேச்சுத்தான். 'பேச்சாளர்கள்' என்றே பலர். ஒலிபெருக்கி வைத்து மீட்டிங்குகள், கல்யாணம், கார்த்திகை, வேறே விழாக்கள் என்று எங்கே பார்த்தாலும் 'லௌட் ஸ்பீக்கர்' வைத்து சத்தம். இந்த அவஸ்தையைப் பார்க்கிறபோது, மௌனம் அதை அநுஷ்டிக்கிறவனுக்குச் செய்கிற நல்லது ஒரு பக்கம் இருக்கட்டும். இது ஸமூஹத்துக்கே செய்கிற தொண்டு என்று தோன்றுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு





3
அழகி

தேவியக்கா தான் ஒருவரைக் காதலிப்பதாகச் சொன்னதும், நான் அசந்துபோனேன்.

"நிஜமாவாக்கா சொல்ற?" என்றேன்.

"ஆமாண்டா..." என்றாள் வெட்கத்துடன் தலையைக் குனிந்துகொண்டு.

"யாருக்கா?"

"யாருகிட்டயும் சொல்லக்கூடாது."

"சொல்லமாட்டேன்."

"சத்தியமா..." என்று கையை நீட்டினாள்.

"சத்தியமா சொல்ல மாட்டேன்" என்று கையில் அடித்தேன்.

"கம்ப்யூட்டர் கிளாஸ் எடுக்கறதுக்கு, திருச்சியிலிருந்து ஒருத்தர் வர்றாரு. சின்ன வயசுதான். ஆளு செம ஸ்மார்ட். அப்பப்ப என்னை லுக் விடுவாரு. கிளாஸ் முடிஞ்சப்பறம், நான் மட்டும் சந்தேகம் கேட்குற மாதிரி அவருகிட்ட பேசிக்கிட்டிருப்பேன். ரொம்ப டீசன்ட்டா நடந்துப்பாரு. நான் அவசரத்துக்கு யாருகிட்டயாச்சும் டைம் கேட்டா கூட, உடனே லவ் லெட்டரை நீட்டிடுவானுங்க. இவரு, இதுவரைக்கும் தப்பா ஒரு வார்த்தை பேசினதில்ல. எனக்கு அவர ரொம்ப பிடிச்சுப் போச்சுடா. ராத்திரி படுத்தா தூக்கம் வர மாட்டேங்குதுடா. என்னை அறியாமலே, கொஞ்ச கொஞ்சமா லவ் பண்றேன்னு நினைக்கிறேன். நீதான் பாலகுமாரன், ஜானகிராமன்னு நிறைய படிக்கிறியே... சொல்லு, இதுக்குப் பேர்தான் லவ்வா?"

"நான் கேட்குற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லு. தனியா உக்காந்திருக்கறப்பகூட, வெற்றிடத்த வெறிச்சுப் பாத்து சிரிக்கிறியா?"

"ஆமாம்... ஆமாம்."

"ஏதாச்சும் லவ் சாங் கேட்டா, கிளுகிளுத்துப் போயிடுமே..."

4 வாரத் தொடர்

ஜி.ஆர்.சுரேந்திரநாத்

''டேய்... எப்படிடா கரெக்டா சொல்ற?''

''அந்தக் கருமம்லாம் வந்தாத்தான் காதல். அவருகிட்ட ஏதாச்சும் சிம்டம்ஸ் தெரியுதா?''

''என்ன சிம்ப்டம்ஸ்?''

''என்னக்கா நீ... உன் மேல அவருக்கு ஐடியா இருந்தா, ஏதாச்சும் சிக்னல் தெரியும். உதாரணத்துக்கு, 'நேத்து டி.வியில குஷ்பூவைப் பாத்தப்ப, உங்கள நினைச்சுக்கிட்டேன்'னு சொல்றது... உன்னைப் பார்த்தவுடனே, கண்ணுல ஒரு வெளிச்சம் தெரியறது... இந்த மாதிரி ஏதாச்சும்?''

''ம்... ஒரு தடவை க்ளாஸுக்கு லேட்டா போனேன். என்னைப் பாத்தவுடனே, கண்ணுல அப்படி ஒரு டாலடிச்சது.''

''எப்படி கரெக்டா சொன்னேன் பாத்தியா?''

''காலேஜ் போயி நல்லா தேறிட்டடா.''

'''ஸோ... அவருக்கும் ஐடியா இருக்கு. மேட்டரைச் சொல்லிடு.''

''சீ... பொம்பளப் புள்ள... நான் போய் எப்படிச் சொல்றது? பாக்கலாம்'' என்று எழுந்தாள்.

அதன்பிறகு தேவியக்கா, அவ்வப்போது அவரைப் பற்றி ஏதாவது சொல்லிக்கொண்டேயிருப்பாள்.


ஒரு பெண், காதல் வசப்படும் தருணத்தில் எப்படி, எப்படியெல்லாம் நடந்துகொள்வாள் என்பதை தேவியக்கா மூலம்தான் அறிந்துகொண்டேன்.

எப்போதும் உற்சாகமான பேச்சு... சிரிப்பு... கண்கள் எப்போதும் ஒருவித போதை மயக்கத்திலிருந்தன. பேசிக் கொண்டிருக்கும்போதே கவனம் நழுவிவிடும். அறையினுள் தாவணி இலேசாகக் கலைந்திருக்க, ஒரு ஓவியம் போல் அழகாகப் படுத்துக்கொண்டு, நான் வருவதுகூட தெரியாமல், மேற்கூரையைப் பார்த்தபடி சிரித்துக்கொண்டிருப்பாள்.

சதா நேரமும் அவரைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பாள். எங்கிருந்தோ பறந்து வந்ததொரு கோழி இறகைத் தனது உதடுகளில் வருடியபடி, ''வைரமுத்துவோட காதல் கவிதைகளைப் படிச்சிருக்கீங்களான்னு அவரு கேட்டாருடா'' என்பாள்.

ஒரு காற்றுக்கால மாலையில், மொட்டைமாடியில், பாவாடை, தாவணி காற்றில் படபடக்க, ''இன்னைக்கு அவரு, 'நேத்து ராத்திரி பத்து மணிக்கு உங்களுக்கு புரையேறுச்சா'ன்னு கேட்டாரு. 'ஏன்'னு கேட்டேன். 'அப்ப உங்கள நினைச்சுக்கிட்டிருந்தேன்'னு சொன்னாருடா'' என்பாள்.

இப்படியே நாட்கள் ஓடிக்கொண்டிருக்க... ஒரு நாள் வேக,



வேகமாக எங்கள் வீட்டுக்கு வந்த தேவியக்காவின் முகம், மிகுந்த உற்சாகத்திலிருந்தது.

"எங்க உங்க அம்மா?"

"எல்லோரும் கோயிலுக்குப் போயிருக்காங்க. என்ன விஷயம்? அவரு லவ் பண்றேன்னு சொல்லிட்டாரா?

"எப்படிடா கண்டுபிடிச்ச?"

"மொச புடிக்குற நாய மூஞ்சப் பாத்தா தெரியாதா?" என்ற என் தலையில் வேகமாகக் கொட்டினாள் தேவியக்கா.

"எப்படிக்கா சொன்னாரு? லவ் லெட்டர் கொடுத்தாரா?"

"அதெல்லாம் சாதாரண ஆண்கள் செய்யறது."

"இவரு..."

"க்ளாஸ் முடிஞ்சு அவருகிட்ட பேசப் போனேன். கைல ஒரு கல்யாணப் பத்திரிகைய வச்சுக்கிட்டு, ஏதோ எழுதிட்டிருந்தாரு. என்னைப் பாத்தவுடனே 'என் ஃப்ரண்டு கல்யாணப் பத்திரிகைன்னு காமிச்சாரு. அதுல மாப்பிள பேரைச் சுழிச்சுட்டு அவரு பேரையும், பொண்ணு பேரைச் சுழிச்சுட்டு என் பேரையும் எழுதியிருந்தாரு. நல்லாருக்கான்னு கேட்டாரு. எனக்கு அப்படியே சிலிர்த்துப் போயிடுச்சு. ரொம்ப நல்லாருக்குன்னேன்" என்றாள் தேவியக்கா முகமெல்லாம் சிரிப்பாக.

"அப்புறம் என்ன பேசிக்கிட்டீங்க?"

"ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்தோம். அவரு தங்கச்சிக்கு மாப்பிள பாத்துக்கிட்டிருக்காங்களாம். தங்கச்சி கல்யாணம் முடிஞ்சவுடனே, நம்மளுத முடிச்சுடலாம்னு சொன்னாரு."

"உங்க வீட்டுல ஒத்துக்குவாங்களா?"

"ஆரம்பத்துல கொஞ்சம் பிகு பண்ணிக்குவாங்க. நான் பிடிவாதமா இருந்தா ஒத்துக்குவாங்க."

அதன் பிறகு எப்போது பார்த்தாலும் எனக்கு அலுப்பு தட்டும் அளவுக்கு, தேவியக்கா தனது காதல் குறித்தே பேசிக் கொண்டிருந்தாள்.

ஒருநாள், "பாபு...எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணணும்டா" என்றாள்.

"என்ன ஹெல்ப்?"

"நாளைக்கு நாங்க திருச்சில மீட் பண்ணலாம்னு இருக்கோம். ஒரு ஃப்ரண்டு கல்யாணம்னு வீட்டுல சொல்லிட்டுப் போலாம்னு இருக்கேன். நான் தனியா போனா அனுப்ப மாட்டாங்க. உன்ன துணைக்கு அழைச்சுட்டுப் போனா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. என்ன.... வர்றியா?"

"கட்டாயம் வர்றேன்க்கா" என்றேன் தேவியக்காவின் காதலனைப் பார்க்கப் போகும் உற்சாகத்தில்.

மறுநாள் எங்கள் ஊரிலிருந்து நாற்பது நிமிடம் பயணித்து, திருச்சி சென்று இறங்கினோம். சத்திரம் பஸ் ஸ்டாண்டில் தேவியக்காவின் காதலர் எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். "இவருதான் ஆனந்த்" என்று தனது காதலனை தேவியக்கா எனக்கு அறிமுகம் செய்துவைத்தாள்.

ஆனந்த் அட்டகாசமாக இருந்தார். தேவியக்காவின் செலக்ஷனாயிற்றே! அவள் எதிர்பார்த்த அத்தனை அம்சங்களும் அவரிடம் இருந்தன. ஆணுக்கு



"தலைவர் என்பேர்ல ரொம்பக் கோபத்துல இருக்கார்னு நினைக்கறேன்"

"எப்படிச் சொல்றே?"

"சீட்டே கேட்காத என்னைக் கூப்பிட்டு வலுக்கட்டாயமா ஒரு தொகுதியிலே போட்டியிடச் சொல்லிட்டாரே."

- கலாபாரதி



"தேர்தல் முடியறவரைக்கும் கொஞ்சம் பொறுத்துக்கங்க மாப்ள. எனக்குக் கிடைக்கற கலர் டீ.வியை உங்களுக்கே கொடுத்துடறேன்."

- கலாபாரதி

ஆண் பொறாமைப்பட வைக்கும் அழகு.

அதன் பிறகு அவர்கள், நான் இருந்ததையே மறந்துவிட்டார்கள். பேருக்கு என்னை உடன் வைத்துக்கொண்டு, திருச்சி முழுவதும் சுற்றினார்கள்.

மலைக்கோட்டை படிக்கட்டில் ஒரு வார்த்தைகூட பேசிக்கொள்ளாமல், அரைமணி நேரம், வெறுமனே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். கூட்டமில்லாத மாரிஸ் தியேட்டரில், என்னை முந்தைய ரோவில் உட்காரவைத்துவிட்டு சின்னச் சின்ன சில்மிஷங்களோடு சினிமா பார்த்தார்கள். வெக்காளியம்மன் கோயிலில், ஆனந்த், தேவியக்காவுக்கு குங்குமம் வைத்துவிட்டார். அக்கா தலையிலிருந்து விழுந்த ஒரு மல்லிகைப் பூவை எடுத்து, அவர் தனது சட்டைப் பையில் போட்டுக்கொள்ள... அக்காவின் முகம் பிரகாசமானது.

தேவியக்கா என்ன சொன்னாலும், ஆனந்த் சிரித்துக்கொண்டேயிருந்தார். அக்கா, 'ஒண்ணும், ஒண்ணும் ரெண்டு'ன்னு சொன்னால்கூட சிரிப்பார் போல.

மாலை, இருவரும் பிரிய மனமில்லாமல் பிரிந்தனர்.

இப்படியாக, குதூகலமாகச் சென்றுகொண்டிருந்த தேவியக்காவின் காதல் வாழ்க்கையில் ஒரு திருப்பம்.

திடீரென்று ஆனந்த் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி, உயிர் பிழைத்துக்கொண்டாலும் நல்ல காயம். தேவியக்கா தமது கம்ப்யூட்டர் கிளாஸ் தோழிகளோடு சென்று ஆனந்தைப் பார்த்துவிட்டு வந்தாள். வந்ததிலிருந்து, தேவியக்காவிடம் அந்தப் பழைய உற்சாகம் இல்லை. ஏதோ யோசனையிலேயே இருந்தாள். நான் விசாரித்ததற்குக்கூட, "ஒண்ணுமில்ல" என்று கூறிவிட்டாள்.

ஒரு மாதம் கழித்து, திடீரென்று ஒரு நாள் தேவியக்கா என்னிடம் கூறினாள். "ஆனந்த் இன்னைக்கு ட்யூட்டில ஜாயின் பண்ணிட்டாரு" என்றாள்.

"இப்ப எப்படி இருக்காரு?" என்றேன்.

"பரவாயில்ல... ஆனா..." என்று சில வினாடிகள் யோசித்த தேவியக்கா, 'எங்க வீட்டுல நம்ம கல்யாணத்துக்கு ஒத்துக்கமாட்டாங்க. என்னை மறந்துடுங்க'ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்" என்றாள்.

"ஏன்க்கா... உங்க வீட்டுக்குத் தெரிஞ்சுடுச்சா?" என்றேன் அதிர்ச்சியுடன்.

"இல்ல சும்மாதான் சொன்னேன்"

"ஏன்க்கா?"

"ஆக்ஸிடெண்டுக்குப் பிறகு அவரு கன்னத்திலேயும் நெத்தியிலேயும் மூணு இஞ்ச் நீளத்துக்குப் பெரிய, பெரிய தழும்பு. கால் எலும்பு முறிஞ்சதும் முழுசா சரியாகல போலிருக்கு. லேசா விந்தி விந்தி நடக்குறாரு. நான் ஆனந்த காதலிச்சதே அவரோட அழகுக்குத்தான். இப்படி இருக்கறவர எப்படி பாபு கல்யாணம் பண்ணிக்க முடியும்?" என்ற தேவியக்காவை நான் வெறுப்புடன் நோக்கினேன்.

(அடுத்த இதழில் நிறைவடையும்)

குடைக்குள் மழை பெய்யவிட்டுத் தமிழில் அறிமுகமானவர் மதுமிதா. அஸின், நயன்தாரா போல முதலிரண்டு படங்களிலேயே இவருக்கு அற்புதங்கள் ஏதும் நிகழவில்லை. 'ஆனாலென்ன, பொறுமை எருமையிலும் பெருசும்மா' என்று ஜாலி தத்துவம் உதிர்க்கிறார் மது. கூடவே தன்னைப் பற்றிச் சொன்ன முத்தான விஷயங்கள்.


● எனக்குத் தாய்வீடு ஆந்திரா. அத்தை வீடு சென்னை (என்ன, இங்கே வுட்பி ரெடியாயாச்சா?). நான் தெலுங்குப் பொண்ணா இருந்தாலும் என் முழு ஆதரவும் தமிழுக்குத்தான். முதல் படத்திலிருந்து என்னை சந்தோஷப்படுத்தி அழகு பார்க்குறது தமிழ் மக்கள்தான். சமீபத்துல ஸ்டார் கிரிக்கெட் மேட்ச் நடந்தப்போ கூட 'கோலிவுட் ஜிந்தாபாத்'னு என் ஆதரவுக்குரல் கோலிவுட் டீமுக்குத்தான் இருந்துச்சு.

● குண்டக்க மண்டக்க, இங்கிலீஷ்காரன், அமுதேன்னு என் மூணு படங்களும் சூப்பர் டூப்பர் ஹிட் ஆகலை. அதுக்காக நான் கண்ணீரும் சிந்தலை. நான் குட்டிப்பொண்ணு. நான் நடிப்புல எந்தத் தப்பும் பண்ணலை. என் சிறந்த நாட்கள் ரொம்பத் தொலைவுல இல்லை.

● ஏன் கோலிவுட்ல எப்போதும் மும்பை நடிகைகளோட படையெடுப்பு இருக்கு? மும்பை, நடிகைகளின் குடோன். பெற்றோர் சம்மதத்தோடு அங்கே ஒருநாளைக்கு இருநூறு பெண்கள் நடிக்கத் தயாராகறாங்க. ரசிகர்கள் எதிர்பார்க்குற கிளாமரையும் அள்ளி வழங்கறாங்க. இங்கே இப்படியெல்லாம் நினைச்சுப் பார்க்க முடியுமா?

● நடிகைகளுக்கு இன்னைக்குச் சுதந்திரமே இல்லை. ஹோட்டல்ல தங்கறதுகூட பிரச்னையாயிடுது. படங்கள்லேயும் நாங்க பொம்மைகள்தான். நல்ல கேரக்டர்கள் அத்திபூத்தாபோலத்தான் கிடைக்குது. எங்களுக்கெல்லாம்

தொலைபேசியில



'மூன்றாம் பிறை' ஸ்ரீதேவி மாதிரியான வேடம் கிடைக்காதா?

● 'வீரம் என்பது பயம் தெரியாம நடிக்கிறது'ங்கிற வரி எனக்கு ரொம்பப் பிடிக்கும். 'பயம்னா ஏதாவது புதுப்பட பெயரா'ன்னுகூடக் கேட்பேன். அர்த்த ராத்திரியில கண்ணம்மாபேட்டையில கொண்டுவிட்டாக்கூட 'நான் ரெடி. பேய் ரெடியா'னு சவுண்டு விடுவேன்.

● பாருங்க, சமீபத்துல யாரோ ஒரு ராஸ்கல் என்

போன்நம்பரைத் தெரிஞ்சுக்கிட்டு தொடர்ந்து தொல்லை பண்ணினான். ம்... சொந்தமா கால் பண்ணத் துப்பில்லாதவன், மிஸ்டு காலா கொடுப்பான். அவனால ரொம்ப நாள் வைச்சிருந்த நம்பரை மாத்த வேண்டியதாப் போச்சு. அவன் மட்டும் என் கையில சிக்கினா... மொத்து மொத்துனு மொத்தி எடுத்துடுவேன்.

- சினிமாவுக்கு வர்றதுக்கு முன்னாடி உலகம் என்னை ஒரு குழந்தையாப் பார்த்துச்சு. ஆனா இன்னைக்கு உலகம் என் குழந்தையாயிடுச்சு. தினமும் புதுப்புது மனிதர்கள், புதுப்புது சூழல்... சினிமா மாதிரி ஒரு ஆசான் வேற எதுவும் இல்லீங்க.

- 'முப்பது நாளில் தமிழ் கற்றுக்கொள்வது எப்படி'ங்கிற புத்தகத்தை வாங்கி நாலே நாள்ல தமிழோட அரிச்சுவடி வரைக்கும் தெரிஞ்சுக்கிட்டேன் தெரியுமா! முடிச்ச கையோட இயக்குநர் மகேந்திரன் எழுதின 'நடிப்பு என்பது'ங்கிற புக்கைப் படிச்சுட்டு இருக்கேன். நடிக்க வர்றவங்களுக்கான கையேடு அது.

- சரியான அம்மா, அப்பா பிள்ளை



வந்த தொல்லை!

நான். அவங்க கிழிச்ச கோட்டைத் தாண்டவே மாட்டேன். "மது, நடிச்சது போதும்மா. நாளைக்கு உன்னைப் பொண்ணு பார்க்க வர்றாங்க"ன்னு சொன்னா அடுத்த நிமிஷம் கழுத்தை நீட்டத் தயாராயிருப்பேன்.

- சநகன்

படம்: ஆண்டனி ஸ்ரீதர்



படைப்பாளிகளே! வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தேவிட்டது!

முதல் பரிசு - ரூ. 10,000

இரண்டாம் பரிசு - ரூ. 7,500

மூன்றாம் பரிசு - ரூ. 5,000



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2006

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. **500** சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம் என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

விதிமுறைகள்:

- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால் அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி - ஜெராக்ஸ் போன்றவை) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும்வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும்வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2006' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15
- போட்டி முடிவும் முதல் பரிசுக்கதையும் ஆகஸ்ட் 6 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்


தையல் மெஷின் கொடுத்தும்...

''தையல்மெஷின் குடுத்தும் எனக்கு ஏன் வோட்டுப் போடலை?''

''மெஷினுக்கான வாரண்டி கார்டு தரலியே?''

- அம்பை தேவா





''எதுக்குய்யா தேர்தல் கமிஷனருக்கு கட்அவுட் வச்சிருக்காங்க?''


''எல்லா கட்அவுட்களையும் அகற்ற உத்தரவிட்டதுக்கு நன்றி தெரிவிச்சுத் தான்!''

- நெல்லையப்பபுரம் செல்வன்

''தலைவர் வோட்டுக் கேக்க வந்துருக்காரு வெளியில வாங்கம்மா...''

''டீ.வி.யில சீரியல் ஓடுது... அந்தப் பக்கம் போய் வோட்டுக் கேட்டுட்டு சீரியல் முடிஞ்சதும் வாங்க.''

- பி.கணேசராஜா





''தலைவரோட இம்சை தாங்க முடியலை?''

''எப்படிச் சொல்றே?''

'' 'நாங்க ஆட்சிக்கு வந்தால் இந்திய கிரிக்கெட் அணியை முதல் இடத்துக்குக் கொண்டு வருவோம்'னு சொல்றாரே.''

- எஸ்.ஏ.தாஹீர்

...ஏன் வோட்டுப் போடலே?

சாகஸம் ஆயிரம் 7

நானோபாட் என்ற சொல்லுடன் கொஞ்சம் கொஞ்சலாம். நானோ மீட்டர் சைஸில் கட்டிய ரோபாட்டுகள், 'மாலிக்யுலர் மான்யுஃபாக்சரிங்' கூட்டணு உற்பத்தித்திறன் மூலம் தனித்தனி மாலிக்யுல்களிலிருந்து கம்ப்யூட்டரோ, சோலார் தகடுகளோ அல்லது ஒயினோ எது வேண்டுமானாலும் தயாரிப்பது. இந்த தந்திரத்தை மட்டும் தெரிந்துகொண்டு விட்டால் எதிர் காலத்தை வெல்லலாம். ஒவ்வொரு கூட்டணுவையும் 'நீ யாருப்பா கார்பனா? அந்த இடத்துக்குப்



புதிய எல்லைகளை

போ! நீ ஹைட்ரஜனா? இங்க உக்காரு' என்று அடிப்படை அணுக்களுக்கு ஒரு பெரிய கம்ப்யூட்டர் மூலம் தனித்தனியாக அணிவகுப்பு ஆணையிட, நானோ ஸ்கேலில் ஒரு அசெம்பிளி தொழிற்சாலை உருவாக்க முடியும் என்று சொல்கிறார்கள். உலகில் உள்ள அத்தனை பொருள்களும் அணுக்கட்டடங்கள்தானே! அதை முழுவதும் அலசி அறிந்துகொண்டு ஒரு கம்ப்யூட்டரின் ஞாபகத்தில் சேர்த்து வைத்துவிட்டால் தனித்தனி கூட்டணுவை செங்கற்களாகப் பயன்படுத்தி முழு கட்டடத்தை அமைப்பது போல் ஒரு பொருளைப் படைக்க முடியும். இதற்கு ஆதாரமான எளிய சாதனங்கள் தேவைப்படும். முதலில் மாலிக்யுல்களை தம்மைத் தாமே காப்பியடித்து இரட்டிப்பாக்கிக் கொள்ள சொல்லித் தர வேண்டும். 'பத்து சிலிக்கான் வாங்கப்பா. ஒரு பாஸ்பரஸ் வாப்பா' என்று ஒரு தேகப்பயிற்சிக்காக மாணவ, மாணவிகளை பி.டி. மாஸ்டர் நிற்க வைப்பதுபோல் நுட்ப உலகில் செய்ய முயற்சிப்பதுதான் அவர்கள் குறிக்கோள்.

இந்த எதிர்கால தரிசனத்தை எரிக் டெக்ஸ்லரும் அவருடன் பணிபுரிந்த ரால்ஃப் மெர்க்கிள் என்னும் ரகசியவியலாளரும் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். இதன் சாத்தியங்களை கம்ப்யூட்டரால் 'சிமுலேஷன்' என்னும் வசதியைக் கொண்டு பாசாங்கு உற்பத்தி செய்து பார்த்தார்கள். கம்ப்யூட்டர் மூலம் இப்படி அடிப்படையிலிருந்து விரிவாக்கி உற்பத்தி செய்வது சாத்தியம் என்றே எழுதினார்கள்.

இதை பலர் 'மிகையான எளிமைப்படுத்துதல்', 'அதீத கற்பனை' என்று விமர்சனம் செய்திருக்கிறார்கள். கம்ப்யூட்டரில் மாலிக்யுல்களின் நடத்தையை அமைப்பது எளிது. நடைமுறையில் நானோ அளவில் இயற்பியல் விதிகள் அவ்வளவு சரி நுட்பமாக இயங்குவதில்லை. எப்போதுமே அந்த உலகில் ஓர் (uncertainity) எதிர்பாராத தன்மை இருக்கும். 'மாலிக்யுலர் ரோபாட் முறைகள் சாத்தியமே இல்லை' என்றார்கள்.


டெக்ஸ்லரும் மெர்க்கிளும் மனம் தளரவில்லை. 1999-ல் மெர்க்கிள், ஜெராக்ஸ் கார்ப்பரேஷனின் பாலோ ஆல்ட்டோ ஆராய்ச்சி மையத்தில் தம் நீண்ட நாள் வேலையை ராஜினாமா செய்துவிட்டு புதிதாக ஒரு நானோ டெக்னாலஜி கம்பெனி துவங்கினார். அவர் டெக்ஸாஸைச் சேர்ந்த ஜேம்ஸ்



நோக்கி...

வான் எர் என்கிற கம்ப்யூட்டர் குருவுடன் சேர்ந்து ஆரம்பித்த முதல் மாலிக்யுலர் நானோ டெக்னாலஜி கம்பெனியின் முதல் நோக்கம், நானோ டெக் அசெம்பிளி முறைகளுக்கான கருவிகளைத் தயாரிப்பது.

அன்றாட பெரிய உலகில் ஒரு டீ.வி.யையோ, வாஷிங் மெஷினையோ, காரையோ எப்படித் தயாரிக்கிறார்கள்? சிறிய பாகங்களைத் தயாரித்து அவற்றை போகப்போக கூட்டிக்கொண்டே, பூட்டிக்கொண்டே போகிறோம். இந்த முறையை நானோ உலகிலும் செய்ய முடியும் என்று ஜைவக்ஸ் என்ற அந்த கம்பெனியில் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கான முதலீடு ஜேம்ஸ் வான் எர், தம் சொந்தக் கம்பெனியை விற்றுக் கிடைத்த பணத்திலிருந்து வந்தது. மொத்தம் 37 பேர் வேலை செய்கிறார்கள். லாபம் இவர்கள் நோக்கமில்லை. பத்து வருஷத்துக்குக் கவலையில்லை. அதற்குள் ஏதாவது விந்தை நிகழும் என்கிறார்கள். இது வரை இவர்கள் சாதித்தது அதிகம் இல்லை. இருந்தும் இவர்கள் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். திடீர் என்று ஏதாவது ஒரு புது விஷயம் கூரையைப் பிளந்துகொண்டு வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. உலகின் பெரும்பாலான திருப்பு



"தேர்தலைச் சந்திக்கிறது ஒண்ணும் கஷ்டமில்லை!"

"அப்புறம் என்ன யோசனை தலைவரே?"

"மக்களை எப்படிச் சந்திக்கிறதுன்னுதான்!"

- ஞா.ஞானமுத்து

முளைகளும் இவ்வாறு நிகழ்ந்திருக்கின்றன. எதையோ செய்யப்போய் எதையோ கண்டுபிடித்து விடுவார்கள். இயற்கை அதுவரை கண்ணாமூச்சி விளையாடும்.

இன்றைய மைக்ரோ கம்ப்யூட்டர் சில்லுகளின் செயல்வேகம், மூர் (Moore) என்பவர் சொன்ன ஒரு விதிப்படி அதிகமாகிக் கொண்டு வருகிறது. 'ஒவ்வொரு பதினெட்டு மாதமும் மைக்ரோ கம்ப்யூட்டரின் செயல்வேகம் இரட்டிப்பாகும் விலை பாதியாகும்' என்றார். சீக்கிரமே இதற்கு ஓர் எல்லை வந்து கொண்டிருக்கிறது. 2010 அல்லது 2015க்குப் பின் சம்பிரதாயமான லித்தோகிராபி முறைகளின் எல்லைகளை அடைந்துவிடுவோம். அதன்பின் மாலிக்யுல் அளவில்தான் பேச முடியும். அந்த உலகில் கணிப்பொறிகளின் வேகம் புதிய எல்லைகளைத் தொடும். காரணம் இன்றைய கம்ப்யூட்டர் சில்லுகளே மாலிக்யுலர் கம்ப்யூட்டர்களுடன் ஒப்பிட்டால் அளவில் மிகப் பெரியவை. கம்ப்யூட்டர்களைச் சின்னதாக்குவதால் என்ன சுகம்? இன்றைய தினங்களில் ஒரு கம்ப்யூட்டரோ, செல்போனோ வாங்குவதற்குள் அது பழசாகிவிடுகிறது. அதன் வேகமும் வசதிகளும் பன்மடங்காகி விடுகின்றன. செல்போனைத்தான் பாருங்கள்! ஒருவர் மற்றொருவருடன் எங்கிருந்தாலும் பேச்சுத் தொடர்பு கொள்ளும் எளிய நோக்கத்துடன் ஆரம்பித்தது. இன்று பேச்சு என்பது, இரண்டாம்பட்சமாகி அதில் காலண்டர், கடிகாரம், டார்ச்லைட், கேமரா, இண்டர்நெட், எஸ்.எம்.எஸ்., பாட்டுக்கள், வீடியோ குரல்கள், கிரிக்கெட் ஸ்கோர், பங்குச் சந்தை, ஞாபக டயரி, இமெயில்... இப்படியே போனால் உங்களுக்கு காப்பிகூட போட்டுத் தரும் அளவுக்கு, அதன் செயல்திறன்களை விரிவாக்கியிருக்கிறார்கள். காரணம், மூர் விதியின்படி சில்லுகளின் அடர்த்தியும் செயல்வேகமும் நாளாக நாளாக அதிகரிப்பதனாலும் விலையும் குறைவதாலும் புதிய விஷயங்களை மார்க்கெட்டுக்கு கொண்டு வரும் அவசரத் திறமை ஏற்பட்டிருக்கிறது. உங்கள் மைக்ரோ கம்ப்யூட்டரிலும் செல்போனிலும் டீ.வி.யிலும் வாஷிங் மெஷினிலும்... ஏன் உலகத்தில் உள்ள அத்தனை நவீன சாதனங்களிலும் மையத்தில் இருப்பது சிலிக்கான் சில்லு. இதை நுட்பமாகப் பார்த்தால் ஆதாரமாக ஒரு ட்ரான்சிஸ்டர். அந்த ட்ரான்சிஸ்டரையும் உற்றுப் பார்த்தால் அது ஒரு ஸ்விட்ச் ஆன் ஆஃப், அணைவது ஏற்றுவது. இதைவிட நுட்பமாகப் பார்க்க முடியாது. கோடிக்கணக்கில் ஸ்விட்சுகள் அணைந்து ஏற்றும் சாகசம்தான் ஒரு மைக்ரோ கம்ப்யூட்டர். இந்த ஸ்விட்சுகளை இன்றைவிட நுட்பமாக ஒரு ஒற்றை மாலிக்யுல்களை, நம் விருப்பப்படி அணைத்து ஏற்றும் இரண்டு நிலை ஸ்விட்சாக மாற்ற முடிந்தால் தோன்றும் சாத்தியக்கூறுகளை அடுத்த வாரம் பிரமிப்போம்.

(விந்தை தொடரும்)



நூற்றாண்டு நாயகர்

"கல்கி உடல் நலம் குன்றி, படுத்த படுக்கையாக இருக்கும்போது, தம் மகன் செல்வரத்தினத்தின் திருமண அழைப்பிதழை எடுத்துக்கொண்டு போய், அழைக்கச் சென்றார் என் தகப்பனார். 'கல்யாணம் முடிந்ததும் உங்கள் மகனையும் மருமகளையும் தயவுசெய்து இங்கே அழைத்து வாருங்கள். ஆசி வழங்குகிறேன்!' என்றார் கல்கி. அதேபோல, திருமணம் முடிந்து அப்பா, தம்பதியை அழைத்துக்கொண்டு கல்கி வீட்டுக்குச் சென்றார். அவர்கள் நமஸ்காரம் செய்தவுடன், 'இன்றுபோல் என்றும் வாழ்க' என்று ராஜாஜி சொன்னதையே நானும் சொல்கிறேன்!' என்று கல்கி வாழ்த்தினார். இதை என் தகப்பனார் சொல்லிக் கேட்டிருக்கிறேன்!" என்கிறார் சுந்தரநாதன்.

மக்கள்-சுற்றம் மாயவரம்!

தகப்பனார் : டாக்டர் திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை. நாதசுர மேதை.

சென்னையில் முதல் முதலாக 1938-ல் வானொலி நிலையம் தொடங்கப்பட்டபோது நாதசுரம் வாசித்தவர் திருவெண்காட்டார்தான். முதல் வாய்ப்பாட்டுக் கச்சேரி, செம்மங்குடி. இரண்டையும் ஏற்பாடு செய்தவர் கல்கி!

எட்டயபுரத்தில் பாரதி மணி மண்டபம் கட்டி முடித்தவுடன், திறப்பு விழாவுக்கு நாதசுர இசை வழங்க, கல்கி, டாக்டர் சுப்பிரமணிய பிள்ளையைத்தான் அழைத்துக் கொண்டு போனார்.

நாதசுரக் கச்சேரிக்கு தம்பூரா சுருதியும், பக்க வாத்தியமாக வயலினும் மிருதங்கமும் வைத்துக் கொண்டவர் சுப்பிரமணிய பிள்ளை!

"அவர் நாதசுர வாசிப்பை எனக்கு 16 - 17 வயது இருக்கும்போது கேட்டிருக்கிறேன். அன்று அவர் வாசித்தது இன்னும் என் காதை விட்டுப் போகவில்லை" என்று சுப்பிரமணிய பிள்ளையின் 90ஆவது பிறந்த நாள் விழாவில் பேசியவர் செம்மங்குடி.

திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை தமது குடும்பத்தினரைக்கூடச் சந்திக்க முடியாமல் தொடர்ந்து நாதசுரக் கச்சேரிகள் செய்து வந்ததுண்டாம். மாயவரம் ரயில் நிலையத்தில் தம்மைச் சந்திக்கும்படி கடிதம் எழுதிப் போட்டு விடுவாராம்.

சுப்பிரமணிய பிள்ளையுடைய வாழ்க்கை டாக்குமெண்டரி படமாக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாதசுரக் கலைஞரின் வாழ்க்கை முதன் முதலாகத் திரை ஆவணமாக்கப்பட்டது. மயிலாடுதுறையில் அருணகிரிநாதர் விழாவைத் தொடர்ந்து 40 ஆண்டுகள், பத்து நாள் இசைவிழாவாக நடத்திக் காட்டியவர், திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை. இவருக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

- சாருகேசி

சடாரி சேவித்து துளசி தீர்த்தம் விநியோகிக்கிற போது, 'கிர்'ரென்று தலை சுற்றியது. கால்கள் நழுவுவதுபோல் தோன்றிற்று. பார்வை பறிபோயிற்று. உலக ஞாபகமே அறுபட்டதுபோல் ஒரு மறதி நிலை. 'கிருஷ்ணா' என்று உச்சரிக்கக்கூட மறந்துபோய்விட்டது. சில கண நேரங்கள் மட்டும்தான் இந்த அசௌகர்யமான நிலை. துளசி தீர்த்தம் மட்டும் சற்றே சிதறி பலிபீடத்தில் தெறித்திருந்தது.

"வயசாறதோல்லியோ, ஏதாவது படுத்திண்டுதான் இருக்கும். பி.பி எகிறியிருக்கும்னு நெனைக்கறேன். எதுக்கும் நம்ம டாக்டர் சங்கரேஸ்வரனை ஒரு நடை போய்ப் பார்த்து செக்கப் பண்ணிண்டிடுங்கோ..." என்று ஆலோசனை வழங்கினார் மகாதேவ அய்யர்.

"உம்...உம்... பண்ணிக்கறேன்..."

"சாமீ, இழுத்தாப்ல சொல்றீங்களே, கண்டிப்பாப் போய்ப் பண்ணிட்டு வாங்க" என்றான் வரது.

அவன் அந்த ஆலயத்தின் நைட் வாட்ச்மேன் நிறைய மனிதப் பண்புகளோடு உலவுகிறவன்.

"ரெங்காச்சார், நீங்க சித்த ரெஸ்ட் எடுத்துண்டு, பையனைப் பார்த்துக்கச் சொல்லுங்களேன்" என்றார் மகாதேவ அய்யர்.

கல்லூரிப் பட்டமுடன் இருந்தாலும், அவ்வப்போது இங்கு வந்து பெற்றவரின் கோயில் கைங்

தரிசனம்

ரெங்கநாத பட்டாச்சார்யா இயல்பு நிலைக்கு வந்துவிட்டார். மறுகணமே தீர்த்தம் வழங்கவும் முற்பட்டு விட்டார்.

பட்டாச்சார்யாவின் தடுமாற்ற கணங்களைக் கவனித்துவிட்ட சேவார்த்திகள், துணுக்குற்ற மனத்துடன் அவரையே கூர்ந்து நோக்கலாயினர்.

அவரிடம் கேட்க முற்பட்டனர்.

"என்னாச்சு ரெங்காச்சார்? திடீர்னு என்னவோ போல ஆய்ட்டேளே!"

பதற்றமுடன் வினவினார் மகாதேவ அய்யர்.

"ஒண்ணுமில்லே, இலேசாத் தலையைச் சுத்தறாப்ல தோணித்து, சரியாயிடுத்து. இப்ப ஒண்ணும் இல்லே. நார்மலாயிட்டேன். நன்னாருக்கேன்" என்றார் அவர்.

கர்யங்கட்கு உதவி வருவதால், இனிமேல் அவனையே பூஜைக்கு முழுப் பொறுப்பாய் ஆக்கிவிடலாம் என்று மகாதேவ அய்யர் அபிப்ராயப்பட்டார்.

நியதியும் அதுதான்.

ஆனால் ரெங்கநாத பட்டாச்சார்யா, 'மளுக்'கென்று மனம் முறிந்தாற்போல் ஆகிவிட்டார்.

உரிமை பறிபோவதால் இல்லை.

தமது இறுதி மூச்சுக்கூட, வாயுவின் புதல்வனுக்குச் சேவை செய்கிற வேளையிலேயே போக வேண்டும் என்கிற ஆசையுடன் இருப்பவர். தற்போது உயிருடன் இருக்கிறபோதே சேவா பாக்கியம் பறிபோகிறதே என்றுதான் தவிப்பு.

மனதுள் படபடப்பு!

"என்ன ரெங்காச்சார், நான் சொன்னதுக்குப் பதில் வரக் காணோம்? உமக்கு இதுல துளிக்கூட இஷ்டம் இருக்காதுதான். ஆனா, பகவானோட இஷ்டம் வேற மாதிரின்னா தெரியறது. உம்ம பையன் வேங்கடாச்சார்யா வரணும்னு எண்ணறார் போலிருக்கே!" என்றார் மகாதேவ அய்யர்.

"எல்லாம் பகவான் இஷ்டம்! பகவானோட செயல்! மனுஷா என்ன சொல்லக்கிடக்கு? மனுஷாளாலே என்ன ஆகும்? நேக்கு ஒண்ணும் இல்லேன்னா, துளி பித்தம் ஜாஸ்தியாயிருக்கும்,

அவ்வளவுதான். டாக்டரண்டே போறேன்''

அவருக்கே உரிய மென்சிரிப்புடன், இன்ஜெக்ஷன் ஒன்றைப் போட்டுவிட்ட டாக்டர் சங்கரேஸ்வரன்,

''ஒண்ணும் பயப்பட வேணாம். லைட்டா பி.பி. ஏறியிருக்கு. வயசானால் வர்ற பிராப்ளம் தான். எதுக்கும் நீங்க கொஞ்சம் ஸ்ட்ரெய்ன் பண்ணாம இருந்தாகணும். பையனை பூஜையைக் கவனிச்சுக்கச் சொல்லுங்க. நான் தரப் போற மாத்திரை, டானிக்கையெல்லாம் நேரத்துக்குச் சாப்பிட்டு வாங்க. நார்மலுக்கு வந்துருவீங்க'' என்றார்.

''சாமீ, நம்ம டாக்டர் சொன்னதுபோல சின்னவங்களை பூஜை பண்ண அனுப்புங்க. நீங்க அலைய வேணாம்'' என்றான் வரதுவும்.

ரெஸ்ட் என்கிற பெயரில் அவரின் உடல் மட்டும்தான் வீட்டில் முடங்கிக் கிடந்தது. மனமோ, அனுமதேவனின் ஆலய வளாகத்திலேயே சுழன்று கொண்டிருந்தது.

மகனும் தன்னைப் போலவே அதிக சிரத்தையோடு கோயில் கைங்கர்யங்கள் செய்வதாக, சேவார்த்திகள் வந்து கூறும்போது, மனதுள் பெருமிதமாக உணர்வார். கூடவே ஆதங்கமும்! தம்மால் இயலாது போனமை குறித்த ஆதங்கம்!

நாட்களின் ஓட்டத்தில் தம்மிடம் ஓர் அபிவிருத்தி ஏற்பட்டு வருவதை அவரால் உணர முடிந்தது. நிலைமை முன்னேறிவிட்டதில், வெளிக்கிளம்பும் உந்



தம் கூடிக்கொண்டே போனது. ஒருநடை போய் அனுமனைத் தரிசித்து வரத் துடித்தார். மகனிடம் தயங்கிய வாறே கேட்டுவிட்டார்.

''அம்பீ, அனுமான் கோயில், மகேந்திரகிரி பர்வதம், அதும் மேலே சஞ்சாரம் பண்ணிண்டு போற மேகங்கள், துளசி வனம், அட்சய வடம்னு எல்லாமே கண்ணுக்குள்ள நிற்கறதுடா. ஒருவாட்டி எல்லாத்தியும் போய்ப் பார்த்துட்டு வந்துரணும்னு மனசு அடிச்சிக்கிறதுடா!'' கெஞ்சினார் ரெங்கநாத பட்டாச்சார்யார்.

சற்று யோசனை பண்ணியபின்,

''சரி, நாளைக் கார்த்தால பூஜைக்குப் போறப்ப என்னோட வாங்கோ, அழைச்சிண்டு போறேன். தரிசனம் பண்ணிட்டு, நான் திரும்பறச்சே வந்துரலாம்'' என்றான் வேங்கடாச்சார்யா.

சில சேவார்த்திகள் டூவீலரில் வந்து தரிசனம் பண்ணிப் போனபின், அங்கே அனுமனும், அவரும் மகனுமே எஞ்சினர்.

பட்டாச்சார்யாவோ அனும தரிசனம் பண்ணியவாறே தூணில் சாய்ந்தவாக்கில் அமர்ந்திருந்தார். வேங்கடாச்சார்யாவோ, நிலைகொள்ளாத கால்களுடன் அடிக்கடி கோயிலுக்கு வெளியே போய், சாலையில் நின்றபடி எங்கோ பார்வையை ஓட்டிவிட்டு மீண்டும் உள்ளே வந்தபடி இருந்தான்.

பெரும்பொழுதை வெளியிலேயே கழித்தான்.

ரெங்கநாத பட்டாச்சார்யா இது போன்று வெளியில் போய் நின்றதே இல்லை.

வருகிற சேவார்த்திகளுக்கு திவ்யமாய்த் தரிசனம் பண்ணி வைப்பதும், அனும கைங்கர்யம் பண்ணுவதும், மற்ற வேளைகளில் கையில் கொண்டு வந்திருக்கும் சுந்தரகாண்டத்தைப் பாராயணம் பண்ணுவதுமாய் நேரத்தைச் செலவிடுவார்.

ஆனால் மகன் இப்படி அடிக்கடி வாயிற்புறம் ஓடி ஓடிப் போவதும், நிற்பதும் ஏனென்று புரியவும் இல்லை, பிடிக்கவும் இல்லை.

மனதுள் ஓர் அனாச்சார அச்சம் தலை தூக்கலானது.

அப்படி இருக்குமோ? அதுதான் காரணமோ?

கோபம் புறப்பட்டது.

எழுந்து, வாயிலை நோக்கிப் போகலானார்.

வேங்கடாச்சார்யா, ஒரு பாறைத் துண்டின் மீது இடது காலைத் தூக்கி வைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

'சரிதான், சேவார்த்திகள் யாரேனும் புதுசா வராளான்னு பாத்துண்டு நிக்கறான். வர்றவா ஏதானும் தீபாராதனைத் தட்டத்திலே போடுவாளோன்னோ, அதான் வராளான்னு எதிர்பார்த்துண்டு நிக்கறான். காசாசை பிடிச்சுண்டுடுத்து போலிருக்கே. அதான் அலையறான். போய் ஒரு



''தலைவர் சீரியல் பைத்தியமா இருப்பார் போல...!''
''எப்படிச் சொல்றே?''
''பாரு... 'மெகா' ஜனங்களேன்னு ஆரம்பிக்கிறாரே!''
- தஞ்சை பா.து. பிரகாஷ்

போடு போடறேன். பகவான் அளக்கற படியை அளப்பான். தேடிண்டு போணுமா என்ன? விவஸ்தை கெட்டவன்' என்று தம்முள் முனகியபடியே, மகனின் முன்னே போய் நின்றார்.

"ஏண்டா அம்பீ, இங்கே என்ன பண்ணிண்டிருக்கே? கோயில் உள்ற இருக்க வேணாமோ? பகவானோட சந்நிதியை விட்டுட்டு, ஏண்டா இங்க வந்து நிக்கறே?" என்று படபடப்போடு கேட்டார்.

"தேடறேம்பா" என்றான் நிதானமாக.

"எதைடா தேடறே?"

"அனும தரிசனத்தை."

"அவர் உள்ளாறன்னா இருக்கார். நீ வெளில வந்து தேடினாக்க?"

வேங்கடாச்சார்யா ஒரு புன்னகை புரிந்தான். பிறகு,

"அங்கே மகேந்திரகிரி பர்வத உச்சியைப் பாருங்கோப்பா" என்றான் பரவசமான குரலில்.

"உச்சில மேகம் திரண்டு போறது. அதுக்கென்ன?"

"நன்னாக் கவனிச்சுப் பாருங்கோ. பர்வதத்துக்கு மேலே, அனுமார் சஞ்சீவி மலையைத் தூக்கிண்டு வராப்ல மேகங்கள் ரூபம் காட்றதா?"

"அட ஆமாண்டா அம்பீ! அப்படியே தத்ரூபமா இருக்கேடா. அவர் கையிலேர்ந்து துளியூண்டு மலை நழுவிக்கூட விழறதே!" என்றார் பரபரப்புடன்.

"எந்த இடத்துல விழறதுன்னு நன்னாக் கவனமாப் பாருங்கோ. மருத்துமா மலையண்டே! பாருங்கோ, நழுவி விழற அற்புதத்தை! இப்ப அனுமன் ரூபம் கலைஞ்சு போய்டுத்து. நேக்கு தரிசனம் ஆய்டுத்து. உள்ற போயிடலாம். எப்பவாச்சும் இப்படி ஆகும். அதான் அடிக்கடி வெளில ஓடி ஓடி வந்து தேடறேன்."

வேங்கடாச்சார்யா உள்ளே போனான்.

பட்டாச்சார்யா குன்றிப் போய் நின்றார். ○

"நான் எங்கே சாப்பிட்டேன்? எனக்குப் பசியுமில்லே; களைப்புமில்லே!'' என்று வந்தவர் சொல்லவும், நிதாகர் உள்ளே சமையல் கட்டிலே போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தார். அத்தனையையும் சாப்பிட்டுவிட்டு 'நான் சாப்பிடவில்லை' என்றால்...?

''நானா சாப்பிட்டேன்? எனக்கா பசி என்று கேட்கிறீரே... நீர் சாப்பிட்டதைத்தான் நான் பிரத்யக்ஷமாகப் பார்த்தேனே!'' என்றார் அதிதியிடம்.

''நான் சாப்பிடவில்லை; எனக்குப் பசி இல்லை...'' என்று 'நான்' என்கிற சொல்லை அழுத்திச் சொன்னார் வந்திருந்த விருந்தினர். அவர் 'நான்' என்பதை அப்படி அழுத்திச் சொன்னவுடனேதான் வந்திருப்பவர் தமது ஆசார்யர் என்று தெரிந்தது நிதாகருக்கு.

நான் என்பது ஆத்மாவையே குறிக்கும் என்றால் ஆத்மாவுக்குப் பசி எது? ஆத்மா சாப்பிடுமா? இப்போது சாப்பிட்ட பொருள்களினாலே ஆத்மாவுக்கு பலம், தேஜஸ் ஏற்படுமா? இந்தச் சரீரத்திலே ஏற்படக்கூடிய விகாரம் ஆத்மாவை எவ்வாறு தொடும்? பகவான் உள்ளே - சரீரத்ினுள்ளே - 'தாகராக்னியாக இருந்து தகிக்கிறேன்' என்கிறான். அவன் தகிக்க தகிக்க, தாகம் ஏற்படுகிறது. தகிக்க தகிக்க பசி ஏற்படுகிறது. இது சரீர தர்மம். மனத்திலே ஏற்படக்கூடிய விகாரம். சாப்பிட வேண்டும்போல் தோன்றுகிறது. சரீரத்துக்கு ஏற்பட்ட தர்மத்தைப் போய் ஆத்மாவிலே சேர்க்கலாமா?

ஆத்மா, சரீரத்துக்குள்ளே இருக்கிறது என்பதனாலேயே ஆத்மா சாப்பிடுகிறது என்று சொல்லலாமா? ஆத்மாவுக்கு வாய் ஏது சாப்பிடுவதற்கு? அவயவம் ஏது, எடுத்து வாயிலே போட்டுக்கொள்வதற்கு?

ஆகையினாலே, ஆத்மாவுக்குப் பசி - தாகம் கிடையாது. இந்த விஷயத்தை நாம் நன்கு கவனிக்க வேண்டும்:

தினமும் இரண்டு விதமான அன்னத்தை இட்டு நாம் நம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு அன்னம் சரீரத்துக்கு; ஒரு அன்னம் ஆத்மாவுக்கு.

பரபிரும்மமாகிற அன்னத்தை ஆத்மாவுக்கு இட வேண்டும்.

கீரை நல்லதா என்று ஒருத்தர் கேட்டார். கீரை உடம்புக்கு நல்லது. கீதை ஆத்மாவுக்கு நல்லது!

நாம் சாப்பிடுவது மொத்தம் ஆத்மா அல்லாத - நாம் அல்லாத - விஷயத்துக்குத்தான்! நித்யம் அதற்கே உழைத்துக்கொண்டிருக்கிறோம். அதைப் பேணி வளர்ப்பதிலேயே காலம் நடந்துகொண்டிருக்கிறது.

இதை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்குத்தான் நிதாகரிடம் அப்படி ஒரு வேடிக்கை நடத்தினார் ருரு. ஆத்மா சாப்பிடாது அல்லவா, அதனால் 'நான் சாப்பிடவில்லை; எனக்குப் பசி இல்லை' என்றார் - அழகாகச் சொன்னார்.

வேணுகான லோலனாக அழகாக பரமாத்மா புல்லாங்குழல் இசைக்கிறான்.

"சிறு விரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்ய வாய்
கொப்பளிப்பக்
குறுவெயர்ப் புருவம் குடிலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந்து இறங்கிச் செவி ஆட்ட
கில்லாவே"

என்றார் பெரியாழ்வார்.

பகவான் அப்படி அழகாக வேணுகானம்

குறையொன்றுமில்லை

பண்ணுகிறான். அவன் விரல்களெல்லாம் பரிமாறுகின்றன.

ஒரு வித்வான் புல்லாங்குழல் ஊதுகிறபோது பார்த்தால், வாயால் காற்றை ஊதுகிறார். விரல்களெல்லாம் வாத்தியத்தின் துளைகள் மீது இருக்கின்றன. ஊதியபடியே விரல்களை மாற்றிக்கொள்கிறார். அப்படி மாற்ற மாற்ற, ஒவ்வொரு இடத்திலே ஒவ்வொரு ஸ்வரம் ஒலிக்கிறது. ஓரிடத்திலே ஷட்ஜம், இன்னொரு இடத்திலே ரிஷபம், ஓரிடத்திலே காந்தாராம்... அந்த த்வனி குழலிலே கேட்கிறது. ஆனால், ஊதுகிற காற்றில் ஸரிகமபதநி உண்டோ?! அந்தந்த ரந்தரத்தின் (துளையின்) வழியாக வருகிறபோது அதது அந்தந்த ரூபத்தைப் பெறுகிறது - சப்தத்தைப் பெறுகிறது.

அந்த மாதிரிதான் இந்த ஆத்மாக்கள் எல்லாம் ஒன்றேபோல் இருந்தாலும், அதது பண்ணிய புண்ணிய - பாபத்துக்கு ஏற்ப ரூபத்தை ஏற்று ஒன்று யானை என்று பெயர் பெறுகிறது; ஒன்று பூனை என்று பெயர் பெறுகிறது. இப்படி சரீராக்ருதி (உடலின் அமைப்பும் அளவும்) பேதத்தினால் (வித்தியாசத்தினால்) வெவ்வேறு ரூபத்தை அடைந்திருக்கிறதேயொழிய, ஆத்மாவிலே இத்தனை பேதங்கள் கிடையாது.

ஆத்மாத்வைதம் என்பதை நாம் உணர வேண்டும். அறிவுடையது ஆத்மா. அறிவானது ஆத்மா. அதற்கு அன்னத்தினால் பிரயோஜனம் இல்லை. அது இளைக்காது. பருக்காது. ஆகையினாலே, அப்படிப்பட்ட ஆத்மாவாக நமக்குள் திகழ்பவன்தான் புருஷ சப்தத்தினால் சொல்லப்படுகிறான்.

பகவானுக்கு 'புருஷன்' என்று ஒரு நாமா உண்டு. இந்த ஆத்மாவும் புருஷன். ஆகையினால் சரீரத்துக்குள்ளே ஆத்மாவும் இருப்பதனாலே புருஷன் என்று இந்த ஆத்மாவுக்குப் பெயர்.

ஆத்மா சேதனன் - அறிவுடை



எட்டாம் பாகம் 16

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

யவன். அசேதனமான சரீரத்துக்குள்ளே இந்த ஆத்மா இருக்கிறது. ஆத்மாதான் சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறது. எந்த சேதனனுக்கு அதீனமாய், அவன் இட்ட வழக்காய் இருக்கிறதோ அது அவனுடைய சரீரம். பகவான்இட்ட வழக்காய் இது இருப்பதனாலே, இது மொத்தம் அவனுக்கு அதீனமாய் இருக்கிறது. இந்தச் சரீரமும் சரி, இந்த ஆத்மாவும் சரி, பகவானுக்குச் சரீரம். அந்த எம்பெருமான் எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாக இருக்கிறான். சித் - அசித் - ஈசுவரன் அவன். அசேதனமாக உலகிலே காணக்கூடிய அறிவற்ற வஸ்துக்கள், அசையாப் பொருட்களுக்குள்ளேயும், அசையும்படியான அறிவுடையவற்றுக்குள்ளேயும் அவனே இருக்கிறான்.

அந்தராத்மாவாக, இந்த இரண்டையும் பரிபாலனம் பண்ணக்கூடிய ஈசுவரனாக பரமாத்மா இருப்பதனாலே, அவையெல்லாம் உயர்ந்த கதியை அடைவதற்கான உபாயமாகவும் கதியாகவும்கூட அந்த எம்பெருமானே இருக்கிறான். அனைவரும் அடைவதற்குரிய பொருளாக அவன் விளங்குகிறான்.

இதைத்தான் 'யோகோ' யோகவிதாம் நேதா பிரதான புருஷேசுவர:' என்று சஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது. பிரதான என்றால் சித் - அசித் அனைத்திலும் உறைகிற என்று அர்த்தம்.

இந்த சிதசிதீசுவர தத்துவத்துக்குரியவனானவன் எம்பெருமான் நரசிம்ஹன்.

நரம் கலந்த சிங்கமான ரூபத்துடன் அவன் ஆவிர்பவித்து, அவதார களத்திலே மஹா உக்ர ரூபியாகக் காட்சியளித்தான். ஆனால் பரம சாந்த மூர்த்தி அவன். அவனைக் காட்டிலும் பரம சாந்த மூர்த்தி யாரும் இல்லை. அவனைக் காட்டிலும் தயை உடையவன் யாரும் இல்லை. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி காக்கும் அவன் ஸர்வ வியாபியாய் அவதரித்தானே!

சஹஸ்ரநாமத்தில் ஒவ்வொரு நாமாவின் பொருளுக்கும் உரியவனாக இந்த நரசிம்ஹனே இருக்கிறான்.

விச்வம் என்பதிலே ஆரம்பித்து, விஷ்ணு: நரசிம்ஹ வபு:, வஷட்கார: நரசிம்ஹ வபு: பூத பவ்ய: நரசிம்ஹ வபு: பூதகிருதே நரசிம்ஹ வபு: என்று ஒவ்வொரு நாமாவுடனும் தன்வயமாகக்கூடியது நரசிம்ஹ சப்தம்.

பிரஹலாதன் சின்ன குழந்தை. அந்தக் குழந்தை எந்த இடத்தைச் சொல்லும் என்று பயந்த, பரமாத்மா எல்லா இடத்திலேயும் அவசர திருக்கோலம் பூண்டு நிறைந்தான்.

நரசிம்ஹ அவதாரத்துக்கு அவசர திருக்கோலம் என்று பெயர். அப்படி அது வேகமான அவதாரம்.

ராமாவதாரம் இருக்கிறது என்றால், யார் தமக்கு அப்பாவாக வருவதற்குத் தகுதி இருக்கிறது என்று அதிலே யோசனை பண்ணினான் பகவான். யக்ஞம் பண்ணிக்கொண்டிருந்த தசரதனைத் தந்தையாக வரித்து, அப்புறம் அங்கே வந்து அவதரித்தான் பரமாத்மா.

அந்த மாதிரியெல்லாம் யோசனை



"மக்களும் கட்சிக்காரர்களும் சந்தோஷப்படற மாதிரி ஏதாவது அறிக்கை விடலாம்னு யோசிக்கிறேன்...!"

"அப்படியா... 'தலைவர் பதவியை ராஜினாமா செய்கிறேன்'னு அறிக்கை விடுங்க, ரொம்பவே சந்தோஷப்படுவாங்க...!"

- ஆர். ராம்சுப்ரமணி


வாரியார் அமுதம்...

நமக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. மற்றவருக்கு என்ன தெரியும்? என்று நினைத்துக்கொண்டு தருக்குற்று இருக்கக்கூடாது.

கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு. எல்லாம் தெரிந்தவர்களும் உலகில் இல்லை; எதுவுமே தெரியாதவர்களும் உலகில் இல்லை.

ஆதலால் அடக்கமாகவும், பணிவாகவும் இருக்க வேண்டும்.

பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும்.



பண்ணி ரூபம் எடுக்க அவகாசமில்லை நரசிம்ஹ அவதாரத்தில். அதனால் அவசர திருக்கோலம்.

ஆசார்யர்கள் ரொம்ப சமத்காரமாக இதைச் சொல்லுவார்கள்:

வெளியிலே போய்விட்டு அலைந்துவிட்டு வீடு திரும்புகிற சமயம் எடுக்கிற ஃபோட்டோ இருக்கிறது பாருங்கள்... அது ரொம்ப நன்றாக அமையும். ஃபோட்டோவுக்கென்று அலங்காரம் பண்ணிக்கொண்டு போனால், அந்தப் படம் அவ்வளவு ருசிகரமாக இராது!

அந்த மாதிரி, ஏற்கெனவே தீர்மானம் பண்ணி ரொம்ப அழகனாக அவதரிக்க வேண்டும் என்று பல ரூபங்கள் எடுத்துக்கொண்டு வந்தான். ஆனால், அப்படி எடுத்த ராம-கிருஷ்ண அவதாரங்களைக் காட்டிலும் அழகானது ஒன்று உண்டோ என்றால் அது நரசிம்ஹ அவதாரம்தான்!

அதனால்தான் நரசிம்ஹ என்ற திருநாமத்தை மட்டும் சொல்லாமல், நரசிம்ஹ வபு: என்று திருமேனியை சேர்த்துச் சொல்கிறார் பீஷ்மாச்சார்யார், சஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தில்.

அந்த நரசிம்ஹ சரீரம் ரொம்ப அழகு. ஆசார்யர் பராசர பட்டர் ரொம்ப அழகாகச் சொல்கிறார்:

ஒருத்தர் பிறந்தது முதல் பாலைப் பருகிக் கொண்டிருக்கிறார். அவருக்கு இப்போது 32 வயது ஆகிறது. ஒரு கிருஹத்துக்குப் போனார். அங்கே பால் கொடுத்தார்கள். ரொம்ப ருசியாக இருந்தது. இந்த 32 வயதில் அவர் இந்த மாதிரி பால் சாப்பிட்டதே இல்லை. "இது என்ன, இவ்வளவு ருசியாக இருக்கிறதே. இது பால்தானே?" என்றார்.

"ஆமாம் பால்தான்" என்றார்கள்.

"இதிலே கற்கண்டு போட்டிருக்கிறோம், சர்க்கரை போட்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

இத்தனை நாளாக அவர் சாப்பிட்ட பால், சர்க்கரை சேர்க்காத பால். மறுநாளிலிருந்து சர்க்கரை சேராத பால் அவருக்குப் பிடிக்குமோ? 'சர்க்கரை சேர்த்த பாலையே கொண்டு வா' என்று கேட்க ஆரம்பித்தார்.

அதுபோல, இத்தனை நாளாக பல ரூபங்களில் பகவானைப் பார்த்தவர் ஒருத்தர்... ஆனால் ஒருநாள் நரசிம்ஹனைப் பார்த்தார் அவர்... 'இது சர்க்கரையும் பாலும் கலந்த சேர்த்தி' என்று அதைப் பார்த்தபிறகு மற்றொன்றையும் பார்க்கப் பிடிக்கவில்லை அவருக்கு...!

(வளரும்)

காரசார பேட்டிகள் கொடுத்து சமீபகாலமாக பத்திரிகை, டீ.வி. என்று அதிக அளவில் மின்னிக் கொண்டிருக்கிறார் கலிங்கப்பட்டி கரிபால்டி வைகோ. விஷயம் கேள்விப்பட்ட முன்னாள் நடிகையும், பிரபல தனியார் தொலைக்காட்சியின் இந்நாள் நிகழ்ச்சித் தொகுப்பாளினியுமான கிச்சுமி, தான் நடத்தும் 'கூச்சமில்லை... கூச்சமில்லை' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, புதுப்புது பிட்டுகளை எடுத்துவிட்டு, டி.ஆர்.பி.யை ஏற்றிவிடுமாறு வைகோவுக்கு அழைப்பு விடுக்க, இதற்காகவே காத்திருந்தது போல அடித்துப் பிடித்து ஸ்டுடியோவுக்கு ஓடி வருகிறார் வைகோ. நிகழ்ச்சி ரகளையாக ஆரம்பமாகிறது.



கிச்சுமி : வணக்கங்க மிஸ்டர் வைகோ. இப்போ ரொம்ப தெளிவா இருப்பீங்கன்னு நினைக்கிறேன். ஓ.கே. நீங்க இந்த முடிவை எடுத்ததுக்கு என்ன காரணம்னு, ஓவரா சவுண்டு கொடுத்து காதை பஞ்சராக்காம, உதாரணம்ங்கற பேர்ல உதார் விடாம, சட்டுபுட்டுன்னு சொல்ல முடியுங்களா?

வைகோ : நிச்சயமா முடியும் மேடம். ஆனா அப்பப்போ 35 சீட்டு... 35 சீட்டுன்னு நீங்க சொல்லிக்கிட்டே இருக்கணும். அப்போதான் எனக்கு மூடு கரெக்டா இருக்கும். சரிதானுங்களா. அந்தக் கூட்டணியில இருக்கறப்போ நடந்த அவமானங்களை, என்னோட வெட்கத்தைவிட்டுச் சொல்லிடறேன்.

நான் ஜெயில்ல இருந்தப்போ வாலிபால் விளையாடுவேங்கறது எல்லோருக்கும் தெரிஞ்சதுதான். ஆனா அந்தப் போட்டிகள்ல நான் ஜெயிக்கக் கூடாதுங்கறதுக்காக, கலைஞரும் ஸ்டாலினும் பிளான் பண்ணி, வாலிபால் ஆடத் தெரிஞ்ச ஏழெட்டு தடியன்களை ஜெயிலுக்கு அனுப்பி, போட்டியில கலந்துக்க வச்சு, என்னை ஜெயிக்க விடாம செய்தாங்க. ஆனா கூட்டணில குஷ்பு வந்துடக் கூடாதுன்னு... மன்னிக்கணும், குஸ்தி வந்துடக் கூடாதுங்கறதுக்காக இந்த விஷயத்தை இதுவரைக்கும் ஸ்கூப் நியூஸாவே வச்சிருக்கேன் தெரியுமா? *(என்று சொல்லும்போதே வைகோவின் கண்கள் கலங்குகின்றன).*

கிச்சுமி : ஓ.கே. ரிலாக்ஸ் வைகோ. பதட்டப்படாம உங்களோட மனசுல இருக்கற இன்னொரு சோக சாத்துக்குடியைப் பிழிஞ்சு விடுங்க. ப்ளீஸ்... 35 சீட்டு... 35 சீட்டு.

வைகோ : *(பெருமூச்சு விட்டபடி)* நான் கொஞ்ச நாளுக்கு முன்னால நெல்லை டு சென்னை ரூட்டுல வாக்கிங் பயணம் வந்தேன். ஆனா அதை அவங்க டீ.வி.யில காட்டல. நானும் கலைஞர்

கிட்ட போயி, 'ஏண்ணே அதை உங்க டீ.வி.யில காட்டல'ன்னு சோகமா முகத்தை வச்சுக்கிட்டு கேட்டேன். அதுக்கு அவரு, 'நீ நடந்துதானய்யா வந்தே.... அதுக்குப் பதிலா ஸ்கிப்பிங் பண்ணிக்கிட்டே வந்திருந்தா விளையாட்டுச் செய்தியிலயாவது காட்டச் சொல்லியிருப்பேன்'னு எகத்தாளமா பதில் சொன்னாரு. விஷயத்தைக் கேட்டு, என்னோட தோழர்கள்லாம் அப்படியே கொதிச்சுட்டாங்க. அந்த ஹீட்டுலதான் நான் வெந்நீர் சுட வச்சு காலுக்கு ஒத்தடம் கொடுத்துக்கிட்டேன்னா பார்த்துக்கோங்களேன். அந்த அளவுக்குக் கொதிச்சுட்டாங்க. இதை நான் இன்னமும் மறக்கல.

(தன்னையும் மீறி வைகோ குமுறிக் குமுறி அழ, கிச்சுமிக்கும் அழுகை முட்டுகிறது.)

மெண்டை வச்சுக்கிட்டு ஆட்டம் போடுறாரு. உண்மையில் இப்படி திடுதிப்புன்னு கூட்டணி மாறும் அரசியல்வாதிகளைப் பத்தி எஸ்.எம்.எஸ்.லாம் அமெரிக்காவுல அனுப்ப முடியாது. இட் ஈஸ் ய க்ரைம் இன் அமெரிக்கா. (திடீரென டென்ஷனாகிக் குரலை உயர்த்துகிறார்) இப்படியே சொல்லிக்கிட்டே போனா பிரசார நேரத்துல மேட்டருக்கு டிமாண்ட் வந்துடும். அதனால கடைசியா ஒரேயொரு ஸ்கூப் நியூஸை எடுத்துவிட்டுட்டுக் கிளம்பறேன். (என்று சொல்லிவிட்டு வைகோ நிறுத்த, கிச்சுமி உட்பட எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்)

வைகோ : ஒரு தடவை பத்திரிகை ஒண்ணுல உங்களுக்குப் பிடிச்ச கிரிக்கெட் வீரர் யாருன்னு கேட்டாங்க. நானும் எதார்த்தமா தோனியைப் பிடிக்கும்னு சொன்னேன். மறுநாள் முரசொலில 'கள்ளத் தோணியா... நல்ல தோணியா'ன்னு கேலி பண்ணிக் கடிதம் எழுதினாரு. அப்படியே என் மனசு அக்தர் பாலுல நொறுங்கின சச்சின் விக்கெட் மாதிரி நொறுங்கிப் போச்சு. ஆனாலும் அதை யார்கிட்டயும் சொல்லாம மனசுக்குள்ளேயே புதைச்சுட்டேன். (செருமல் சத்தம் வருகிறது)

"குமீல் விழுங்க வைகோ!"

வைகோ : மத்ததைக்கூட மன்னிச்சு விட்டுடலாம். ஆனா, எங்க குடும்பத்துல இருக்கறவங்களை, எங்களுக்கே தெரியாம கலைஞர் தன்னோட ரேஷன்கார்டுல சேர்த்து, எக்ஸ்ட்ரா மண்ணெண்ணெய் வாங்கியிருக்காரு. இதை நான் எங்க வீட்டுக்கு மண்ணெண்ணெய் வாங்கறதுக்காகக் கடைக்குப் போனப்போதான் கடைக்காரர் சொல்லித் தெரிஞ்சுக்கிட்டேன். இதை மட்டும் ரெண்டு பாட்டில் ஜெலுசில் எம்.பி.எஸ். குடிச்சும் என்னால ஜீரணிக்கவே முடியல.

கிச்சுமி : வெல்... மிஸ்டர் வைகோ. அழாதீங்க... உங்களைப் பத்தி எஸ்.எம்.எஸ். வர்றதைப் பத்தி ஒண்ணுமே டமீல் விடலியே...


வைகோ : (தொண்டையைச் செருமியபடி) அது தி.மு.க.வுக்காக ஒரு புளிச்ச கீரையைக்கூட கிள்ளிப் போடாத தயாநிதி மாறனோட வேலைதான். தன்கிட்ட இருக்குற டெலிபோன் டிபார்ட்

(இதற்கு மேல் வைகோவைப் பேச வைத்து அழவிட மனசில்லாமல் கிச்சுமி நிகழ்ச்சியை நிறைவு செய்கிறார். போகிற போக்கில் வைகோ கிச்சுமியைப் பார்த்து, "என்னோட முகத்தைக் காட்டுவீங்களா... இல்ல, குரலை மட்டும் காட்டிட்டு விட்டுடுவீங்களா" என்று அப்பாவியாகக் கேட்க, முதுகைத் தட்டிக் கொடுத்து, கைத்தாங்கலாக வைகோவை அழைத்துச் செல்கிறார் நாஞ்சில் சம்பத்)

கற்பனை : **முராரி**

சுவாமிக்கு வேண்டுதல் செய்து கொள்வதில் எவ்வளவோ விநோதங்கள் இருக்கின்றன. "திருப்பதி வேங்கடாசலபதி! என் பிள்ளைக்கு நூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் ஆகட்டும், உன் உண்டியலில் ஒரு ரூபாய் போடுகிறேன்" என்று தாயார் வேண்டிக் கொள்கிறாள். இங்கே கடவுள் உத்தியோகத் தரகர் ஆகிறார் 1% அவருக்கு கமிஷன். உத்தியோகஸ்தர் ஒருவர் தமக்கு வரும் 'மேல் வரும்படி'க்கெல்லாம் ரூபாய்க்குக் காலணா வீதம் உண்டியலில் சேர்ப்பிக்கிறார். இதன் மூலம் லஞ்சம் வாங்குகிற பாவத்தை முழுதும் பகவான் மேலேயே போட்டு விடுவதாக அவர் எண்ணம்.

1% உனக்கு...





சௌந்தரத்தாச்சியின் உயில் விஷயம் எனக்கு ஞாபகம் வருகிறது. அங்காடிக் கடை வைத்து நல்ல பணம் சேர்த்திருந்தாள் சௌந்தரத்தாச்சி. உயிலில் தங்கை, தமக்கை, சுவீகாரப்பிள்ளை, மாமன் மகள் முதலிய எல்லோருக்கும் உசிதப்படி சொத்தும், ரொக்கமும் எழுதி வைத்தாள். கடைசியில், 'ஷண்முக சுந்தரம் செட்டியின் புரோ நோட்டு ஆயிரம் ரூபாய் வட்டியும் முதலும் வசூலானால் ஸ்ரீஅர்த்தநாரீசுவர ஸ்வாமிக்குச் சேர்ப்பிக்க வேண்டியது' என்று எழுதச் செய்தாள். ஷண்முகசுந்தரம் செட்டி இன்ஸால்வெண்டாகி ஐந்து வருஷம் ஆயிற்று. ஆச்சி செய்தது சரியென்று உங்களுக்குத் தோன்றவில்லையா? அர்த்தநாரீசுவர சுவாமிக்கு உண்மையில் பணம் வேண்டுமென்றிருந்தால், காலாவதிப் பத்திரமானாலும் அவர் ஏன் வசூலித்துக் கொள்ளக்கூடாது? அவ்வளவு சக்தி அவருக்கில்லாவிட்டால் அவருக்கு எதற்காகப் பணம் எழுதி வைப்பது? "நூறு ரூபாயும் ஒரு தம்பிடியும் அகப்பட்டால், ஒரு தம்பிடிக்கு சூடம் வாங்கி ஏற்றுகிறேன்" என்று வேண்டிக்கொண்டவன் மகா புத்திசாலியென்றே எனக்குத் தோன்றுகிறது. "எனக்கு 100 ரூபாய் கொடுக்கும் பிள்ளையார் தமக்கு ஒரு தம்பிடியும் கொடுத்துக் கொள்ளட்டுமே!" என்று அவன் நினைத்ததில் தவறு என்ன?

இதனாலெல்லாம்



கடவுள் வேண்டாம்' என்று நான் சொல்வதாகத் தயவுசெய்து நினையாதீர்கள். அதற்கு மாறாக, கடவுள் மிகவும் உபயோகமானவர் என்று நினைப்பவர்களில் நான் ஒருவன்.

முதலாவதாக, கடவுள் நம்பிக்கையுள்ளவர் ஆயுள் இன்ஷூரென்ஸ் செய்ய வேண்டியதில்லை. இது எவ்வளவு பெரிய சௌகரியம் பாருங்கள். எத்தனையோ இன்ஷூரென்ஸ்

மரம் வைத்தவன்...

ஏஜண்டுகளுக்கு நான் டிமிக்கி கொடுத்து வந்திருப்பதெல்லாம், கடவுளிடம் எனக்குள்ள நம்பிக்கையினால்தான். ஏஜண்டு தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பிக்கும் போதே நான் அவருடைய வாயை அடைத்து விடுவேன். "நான் நாஸ்திகனல்ல, சுவாமி! பகவானிடம் நம்பிக்கையுள்ளவன்; பகவான் ஒருவர் இருக்கும்போதே நான் ஏன் பெண்டாட்டி பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுகிறான்! இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதிவிட்ட சிவனும் செத்துவிட்டானோ?'' என்று பிரசங்கத்தைத் தொடங்குவேன். "தயவுசெய்து இந்த மாதிரி போதனை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டாம்" என்று ஏஜண்ட் மன்றாடிவிட்டுப் போய்ச் சேருவார்.

கடவுளின் மற்றொரு பெரிய உபயோகம் என்னவென்றால், அவருடைய பெயரால் பொய்யையும் மெய்யாக்கி விடலாமென்பதே. முக்கியமாக, கோர்ட்டுகளில் பொய்ச் சாட்சி சொல்வோருக்கு பகவானுடைய திருநாமம் இன்றியமையாத சாதனமாயிருக்கிறது. உண்மையில் கடவுள் பேராலன்றித் தற்கால கோர்ட்டுகளில் பொய்யே சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் அது சாக்ஷியாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

அவ்வளவு ஏன்? கடவுள் நம்பிக்கை மட்டும் இல்லாவிட்டால் நம்மில் பலர் உயிர்வாழ முடியுமென்றே தோன்றவில்லை. இந்திய சட்டசபையில் மகாத்மாவின் விடுதலையைப் பற்றி ஆங்கில்ஸாரியாவும், யாமீன்கானும் பேசிய பேச்சுகளைப் படிக்கிறோம். அப்போது என்ன தோன்றுகிறது? ''இத்தகைய ஜன்மங்கள் வாழும் உலகில் நாமும் ஏன் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறோம்'' என்றுதான். ஆனால் உடனே "பொறுத்திருப்போம்; காலம் மாறும்; கடவுள் உண்டு" என்று எண்ணித் தேறுகிறோம். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் கடவுள் நம்பிக்கை மட்டும் இல்லாவிடில் நம்முடைய கதி என்ன?

- **'அதிர்ஷ்ட கவசம்' புத்தகத்திலிருந்து... வானதி பதிப்பகம்.**



• படம்: ஸ்ரீஹரி

மேஷம்: தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். வீடு/வாசல் வாங்க உகந்த நேரம். திருமணக் காரியம் கைகூடும். எண்ணங்கள் யாவும் ஈடேறும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணக்கஷ்டம் தீரும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். ஆஞ்சநேயர் சுவாமியை சனிக்கிழமைதோறும் வழிபட்டு வருதல் நலம்.

ரிஷபம்: அதிரடி மாற்றங்கள் நிகழலாம். யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். குழந்தைகளால் மனக்கவலை ஏற்படும். மனத்தில் தைரியம் மிகுந்து காணப்படும். உடல்நிலையில் கவனம் தேவை. தடங்கல் நிவர்த்தி ஆகும். புதிய முயற்சியை சற்றுத் தள்ளிப் போடுவது நல்லது. சுபகாரியம் கைகூடும். வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்படும். யாருக்கும் ஜாமீன் போடுவதோ/கடன் கொடுக்கவோ கூடாது. ராகு/கேது/குரு வழிபாடு செய்து வரவும்.

மிதுனம்: பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. குடும்ப வளம் மேலோங்கும். வேலைப்பளு அதிகரிக்கும். வேலை மாற்றம் ஏற்படும். நீண்டதூரப் பிரயாணம் செல்ல நேரிடும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் கிட்டும். பணவசதி பெருகும். நீண்ட நாள் முடிவு பெறாத வழக்கு வெற்றி அளிக்கும். கணவன்- மனைவி உறவு நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். செலவுகள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். ராகு/கேது வழிபாடு செய்து வரவும்.

கடகம்: பணக்கஷ்டம் இருக்காது. கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். வீடு மாற்றம் ஏற்படும். வேலையில் உயர்வு, இடமாற்றம் கிட்டும். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி கைகூடும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். உடல்நிலை பாதிக்காது. மகான்களின் தரிசனம் கிட்டும். மனச்சலனம் போகும். நண்பர்களால் செலவு ஏற்படும். குரு/சனி வழிபாடு செய்து வரவும்.

சிம்மம்: வெற்றி இலக்கை அடைவீர்கள். கல்வியில் சுணக்கம் இருக்கும். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். வண்டி வாகனத்தில் பார்த்துச் செல்லவும். ஜாமீன் போடக்கூடாது. நெருங்கிய நண்பர்/உறவினரை விட்டுப் பிரிய நேரிடும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும். உடல்நிலையில் கவனம் செலுத்தவும். உத்தியோகத்தில் நெருக்கடிகள் இருக்கும். இடமாற்றம் ஏற்படும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கன்னி: குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. வீடு, வாசல் வாங்கலாம். குழந்தைகள் வழியில் சுபகாரியம் கைகூடும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். பொருளாதாரக் கஷ்டம் வராது. தனம், வாக்கு, கல்வி வளம் மேலோங்கும். புதிய தொழில் துவங்கலாம். எதிர்பாராத அதிர்ஷ்டம் கிட்டும். தொழில்துறையில் அபிவிருத்தி ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு/கேது வழிபாடு சிறந்தது.

நடக்குமென்பார்; நடக்கும்!

துலாம்: நீண்டநாள் வராத பணம் வந்து சேரும். வழக்கு வெற்றி அளிக்கும். எதிர்ப்பு, தொல்லைகள் விலகும். பொருளாதார மேன்மை உண்டாகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வேலை தேடுபவர்களுக்கு உடன் வேலை கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். வேலை மாறி அயலூருக்குச் செல்ல நேரிடும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குரு/சனி வழிபாடு சிறந்தது.

விருச்சிகம்: எதிர்ப்பு தொல்லைகள், பணக் கஷ்டம் இருக்காது. சுபகாரிய நிகழ்ச்சிகள் கைகூடும். குழந்தைகள் பற்றின மனக்கவலை தீரும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். வீடு வாசல் வாங்க நல்ல தருணம். வழக்கு வெற்றி அளிக்கும். புதிய தொழில் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். சிலருக்கு புதிய வேலை கிடைக்கும். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். ராகு/கேது வழிபாடு சிறந்தது.

தனுசு: எண்ணங்கள் யாவும் ஈடேறும். உடல்நிலை பாதிக்காது. பணக்கஷ்டம் வராது. புதிய தொழில் தொடங்கலாம். புதிய வேலை வாய்ப்புக் கிட்டும். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும். தாயின் உடல்நிலையில் சற்று நலிவு ஏற்படும். மனத்தில் தைரியம் ஏற்படும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். நண்பர்/உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். ஆடை ஆபரணப் பொருட்கள் சேரும். ராகு/கேது/சனி வழிபாடு நன்மை தரும்.

மகரம்: சுப காரியம்

தஞ்சை பரத்வாஜ்

23.4.2006 முதல் 29.4.2006 வரை

பரத்வாஜ பதில்கள்

எனது மகளின் திருமணம் எப்போது நடக்கும்?

- எஸ். ராஜகோபால், நங்கநல்லூர்

தங்கள் மகனுக்கு நாகதோஷம் உள்ளது. நாகதோஷம் உள்ள வரனைப் பார்க்கவும். உடன்பிறப்பு இருவர் உள்ள இடத்தில், தனியார் துறையில் வேலை பார்க்கும் வரன் அமையும். 2006-ல் திருமணம் முடியும்.

எனது தங்கை மகளின் திருமணம் எப்போது நடக்கும்?

- எஸ். ஜெயராமன், புதுவை

2006-ல் திருமணம் முடியும். நாகதோஷம் உள்ள வரனாகப் பார்க்கவும். உடன்பிறப்பு ஒருவர் உள்ள இடத்தில், படித்த, பண்புள்ள பெண் அமைவாள். பரிகாரம் தேவையில்லை. உறவில் திருமணம் அமையாது. பொருத்தமான ஜாதகமாகச் சேர்க்கவும்.

எனது மகளுக்கு வரன் அமையவில்லை. பரிகாரம் தேவையா? திருமணம் எப்போது?

- ஏ. கிருஷ்ணன், மும்பை

தங்கள் பெண்ணுக்கு 2006-ல் திருமணம் முடியும் வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். ஒரே பையன்; உறவு கிடையாது. பரிகாரம் தேவையில்லை.

எனக்கு காலில் தோல் வியாதி மற்றும் மூட்டுவலி உள்ளது. நோயிலிருந்து எப்போது நிவாரணம் கிடைக்கும்?

- ஏ. லட்சுமி, சென்னை

தங்கள் ஜாதகப்படி 10.3.2007வரை கேது தசை நடக்கும். சுக்ர தசையில் உங்கள் தோல் வியாதி சரியாகும். விக்னேஷ்வரரை வழிபட்டு வர தீராத நோயும் தீர்ந்துவிடும்.

கைகூடும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். புதிய வீடு/வாசல் வாங்க நல்ல தருணம். தெய்வபலம், ஆத்மபலம் நிறைந்து இருக்கும். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் பெறலாம். அயல்நாட்டு வேலை கிட்டும். உடல்நிலை பாதிக்காது. மந்தமான சூழ்நிலை விலகி எதிலும் புத்துணர்ச்சி பெறுவீர்கள். குரு/சனி வழிபாடு செய்வது நற்பலனைத் தரும்.

கும்பம்: மனநிறைவான வாரம். நற்காரியங்கள் கூடி வரும். நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். புதிய மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். பணக் கஷ்டம் வராது. எதிர்ப்பு தொல்லை விலகும். நீண்டநாள் முடிவு பெறாத வழக்கு, வியாபாரம் வெற்றி பெறும். உத்தியோக நிமித்தம் காரணமாக வெளிநாடு செல்ல நேரிடும். யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். உடல்நிலையில் கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. வண்டி, வாகனங்களில் செல்லும் போது உஷார். உணவுக்கட்டுப்பாடு அவசியம். ராகு/கேது வழிபட்டு வர நற்பலனைத் தரும்.

மீனம்: எதிலும் நிதானத்துடன் நடந்துகொள்வது நற்பலனைத் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். குழந்தைகள் வழியில் சுபகாரியம் கைகூடும். பணப் பற்றாக்குறை இருக்கும். டென்ஷன் நிறைந்த வாரம். வீடு மாற்றம் ஏற்படும்; வேலையில் மாற்றம் கிட்டும். கணவன் ஓரிடம் மனைவி ஓரிடம் இருக்கும் சூழ்நிலை உருவாகும். பத்திரிகைகளில் பெயர் வரும். வெளிநாட்டு அழைப்பு வரும். நண்பர், உறவினர் மூலம் செலவு ஏற்படும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு சிறந்தது. ○

தி.மு.க.வில் சேர்ந்த இந்திரகுமாரி, தமது கையில் பச்சை குத்தப்பட்டிருக்கும் ஜெயலலிதா உருவத்தை மறைப்பதற்காக பிளாஸ்திரி ஒட்டிக் கொண்டார். இதுபோல கடந்த காலத் தவறுகளை மறைக்கவும் மறக்கவும் இதர தலைவர்கள், தொண்டர்கள் என்ன செய்யலாம்? இதோ ஐடியா தருகிறார் சில்மிஷா...



மீசை, தாடியை எடுத்துவிட்டு கலைஞரிடம் ''நான் பழைய டி.ஆர். இல்லை'' என்று கண்ணீர் சிந்தலாம் (என்ன, வீட்டில் வாட்ச்மேன்தான் அடையாளம் தெரியாததால் அவ்வளவு சீக்கிரம் உள்ளே விடமாட்டார்.)

மறைக்கவும் மறக்கவும்!



இதுவரை கலைஞரைப் பாடி எழுதியுள்ள கவிதைகளை ''நான் எழுதியதில்ல. போர்ஜரி' என்று அம்மா பாணியில் நிர்மலா சுரேஷ் அறிக்கை விடலாம். எப்படியும் அடுத்த வருட இலக்கியச் செல்வர் பட்டம் இவருக்குத்தான்.



விடுதலைச் சிறுத்தைகள் என்ற தமது கட்சியின் பெயரை தற்காலிகமாக விடுமுறைச் சிறுத்தைகள் என்று மாற்றி அறிவித்து, கொள்கையிலிருந்து ஹாலிடே எடுத்துக் கொண்டிருப்பதைத் தெளிவுபடுத்தலாம் தி.வளவன்.



கலைஞரைக் கட்டிக்கொண்டு அழுதபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களிலெல்லாம் போட்டோஷாப்பைப் பயன்படுத்தி தமது முகத்தைக் கடுகடுவென்று ஆக்கி வைக்கலாம்.



பாக்யா பத்திரிகையின் பெயரை 'சூர்யா' என்று மாற்றிக் கொள்ளலாம். கலைஞரின் 'தலை' யுலக வாரிசு என்று பட்டம் சூட்டிக் கொள்ளலாம். சன் டி.வி.யில் ராதிகா ஸ்லாட்டைக் கையிலெடுக்கத் தயாராயிருக்கலாம்.



காங்கிரஸில் ராமமூர்த்தி என்று பெயர் வைத்து தனிக்கட்சி கண்டவர்கள் உருப்பட்டதில்லை என்பதால் ஸ்டைலாக 'திண்டிவனம் டோனி' என்று மாற்றிப் பார்க்கலாம்.

சொல்லத் தெரியவில்லை...

வாசலில் பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் லிங்கராஜன் ரிமோட் கண்ட்ரோலை எடுத்துத்தொலைக்காட்சியின் ஒலியைக் குறைத்தார்.

"ஜெயா! சுரேஷ் வந்துட்டான்" என்று குரல் கொடுத்துக்கொண்டே, உள்ளே நுழைந்தவனை, "வாடா சுரேஷ். உட்காரு" என்றார் லிங்கராஜன்.

சுரேஷ் அவரை நெருங்கி பக்கத்து சோபாவில் அமர்ந்தவாறு "எப்படிப்பா இருக்கீங்க? சுகர் டெஸ்ட் எடுத்தீங்களா?" என்று கேட்டான்.

''எடுத்தேண்டா. பரவாயில்லை குறைஞ்சு இருக்கு. ஜெயா! சுரேஷ் வந்துட்டான்''

''அம்மா என்னப்பா பண்ணிட்டு இருக்காங்க?''

"ரூம்ல துணிகளை மடிக்கறான்னு நினைக்கறேன். ஜெயா..."

"வரேன்! வரேன்!" என்று சத்தமாகக் குரல் வந்தது.

சற்றைக்கெல்லாம் ஹாலில் பிரசன்னமானாள் ஜெயலட்சுமி. ''எதுக்கு ஜெயா ஜெயான்னு ஏலம் போட்டுக்கிட்டு இருக்கீங்க?''

''சுரேஷ் வந்திருக்கான்னு சொன்னேன்.''

"வரட்டுமே. அதான் போன் பண்ணிச் சொல்லியிருந்தானே. காபி சாப்பிடறியாடா?"

"கொடும்மா" என்றான் சுரேஷ்.

ஜெயலட்சுமி சமையலறைக்குள் புகுந்து விட்டாள்.

"என்னப்பா அம்மாகூட சண்டையா?"

''நான் எதுக்குடா அவகிட்டே சண்டை போடப் போறேன்?''

"பின்னே கோபமா இருக்காங்க."

''அவளுக்கென்ன? காரணமே இல்லாம கோபப்படுவா. சிடுசிடுன்னு பேசுவா. கொஞ்சம் நேரமானதும் சிரிச்சுப் பேசுவா. தெரிஞ்ச கதைதானே? விடு. ஆபீஸ் ஒர்க் எல்லாம் எப்படிப் போய்க் கிட்டிருக்கு?'' என்று பேச்சை வளர்த்தார் லிங்கராஜன்.

ஆனால் அவருக்கு ஜெயலட்சுமியின் இப் போதைய சிடுசிடுப்புக்குக் காரணம் தெரியும். 'அவ கோபத்துக்குக் காரணமே நீதாண்டா' என்று எப்படிக் கூற முடியும்? அதனால்தான் தெரியாததைப்போல் காட்டிக் கொண்டார்.

சுரேஷ் அவருக்கு மூத்த மகன். அவனுக்கு அடுத்துப் பிறந்தவள் லாவண்யா. கடைசியாக ரஞ்சித். இதில் லாவண்யாவுக்குத்தான் முதலில் திருமணமானது. இரண்டு வயதில் ஆண் குழந்தை இருக்கிறது.

சுரேஷுக்குத் திருமணமாகி ஒரு வருடமாகிறது. மனைவி கார்த்திகா கர்ப்பமாக இருக்கிறாள். நான்காவது மாதம். திருமணமான மூன்றாவது மாதமே தனிக்குடித்தனம் வைத்து விட்டார்கள். இவர்களே செய்த ஏற்பாடுதான். அவனும் எந்த மறுப்பும் சொல்லவில்லை.

தனிக்குடித்தனம் சென்ற பிறகு ஆரம்பத்தில் தினமும் மாலையில் இங்கு வந்து தலையைக் காட்டிவிட்டுத்தான் செல்வான். பிறகு அது இரண்டு நாட்களுக்கு ஒருமுறை. வாரத்துக்கு ஒருமுறை என்று படிப்படியாகக் குறைந்து போனது. இப்போது கடைசியாக வந்தது ஆறாம் தேதி. இன்றைக்குத் தேதி இருபத்தெட்டு.

ஜெயலட்சுமியின் கோபத்துக்குக் அதுதான் காரணம். "அலுத்துப் போச்சு போலிருக்கு. தினமும் வந்துட்டு இருந்தவன் இருபது நாளாகியும் வரலை" என்று நேற்றுதான் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''விஷயம் எதுவுமில்லாம டெய்லி வந்து என்ன செய்யச் சொல்றே?'' என்றார் லிங்கராஜன்.



ஆரணி யுவராஜ்

"விஷயத்தோடு வர்றதுக்கு அவன் என்ன விருந்தாளியா? பார்க்கப் போனா அப்படித்தான் இருக்கு. பெத்த பிள்ளையா இருந்தாலும் தனிக்குடித்தனம் போய்ட்டு வீட்டுக்கு வந்தா விருந்தாளியாத்தான் ஆயிடறான்" என்றாள்.

இன்று பிற்பகலில் தொலைபேசி ஒலித்தது. லிங்கராஜன்தான் எடுத்தார். பேசிவிட்டு வைத்தார்.

"என்னவாம்?" என்றாள்.

"ஈவ்னிங் சுரேஷ் வீட்டுக்கு வர்றானாம். வீட்லதானே இருப்பீங்கன்னு கேட்கறான்."

"வீட்ல இல்லாம எங்கே போய்டப் போறோமாம்? சார் அப்பாயிண்மெண்ட் வாங்கிட்டு வர்ற அளவுக்கு ஆயிட்டாரோ?" என்று ஆரம்பித்தாள்.

இப்போது சுரேஷ் வரும் நேரமாகப் பார்த்து வேண்டுமென்றே அறைக்குள் சென்று துணிகளை மடித்துக் கொண்டிருந்ததுகூட கோபத்தின் வெளிப்பாடுதான் என்பது லிங்கராஜனுக்குப் புரிந்தது.

"இந்தாடா" என்று கூறி காபியை கொண்டு வந்து வைத்த ஜெயலட்சுமி மீண்டும் படுக்கையறையை நோக்கி நகர்ந்தாள்.

"இரு ஜெயா. எங்கே போறே?" என்று தடுத்தார் லிங்கராஜன்.

"துணிகளை மடிக்கணும்."

"அதை அப்புறம் மடிச்சுக்கலாம். ரொம்ப நாள் கழிச்சு சுரேஷ் வந்திருக்கான். அவன்கிட்டே பேசறதைவிட்டுட்டு..."

"ஏம்மா கோபமா இருக்கீங்க? என்ன விஷயம்?" என்று கேட்டான் சுரேஷ்.

"நான் கோபப்பட்டு என்னடா ஆகப் போகுது? நைட் டிபன் சாப்பிட்டுட்டுத்



"என்ன... திடீர்னு தலைவர் ஜெயில்ல இருக்கிற பெண்களை எல்லாம் விடுதலை பண்ணச் சொல்றாரு...?"

"'பெண் விடுதலைக்காகப் பாடுபடுவோம்'னு தேர்தல் வாக்குறுதி குடுத்திருக்காராம்."

- தேனி பொன்கணேஷ்

தானே போகப் போறே? இல்லே இப்பவே போகணுமா?" என்று கேட்டாள்.

அதற்கு அவன் சில நொடிகள் யோசித்தான். பிறகு "சாப்பிட்டுட்டே போறேன்" என்று கூறினான்.

"அப்ப இரு. வேலைகளை முடிச்சுட்டு வந்துடறேன்" என்று கூறி விலகினாள்.

லிங்கராஜன் மகனைப் பார்த்தார். 'புத்திசாலி. நிலைமையைப் புரிந்து கொண்டு சாமர்த்தியமாகப் பதிலைச் சொல்லிவிட்டான். இவன் மட்டும் இப்போதே போகிறேன் என்று சொல்லி இருந்தால் அவ்வளவுதான், பொரிந்து இருப்பாள். பயலுக்குப் புரிய ஆரம்பித்து விட்டது. சுற்றுத்தர வேண்டியதில்லை. இதெல்லாம் தானாக வந்துவிடும்' என்று நினைத்துக் கொண்டார்.

"என்னப்பா அப்படிப் பார்க்கறீங்க?" என்று கேட்டான்.

புன்னகைத்தார். "ஒண்ணுமில்லே சுரேஷ்" என்றார்.

இரவு சுரேஷுக்கு மிகவும் பிடித்த சப்பாத்தியும், கொச்சும் செய்தாள் ஜெயலட்சுமி. ஏற்கெனவே ரசம் இருக்க புதிதாகச் சுடச்சுட வைத்தாள். அவன் இரவில் எது சாப்பிட்டாலும் சிறிது ரசம் சோறு சாப்பிடுவது வழக்கம்.

அப்போதுதான் வேலை முடிந்து ரஞ்சித் வந்தான். சகோதரனைப் பார்த்து ஒரு புன்னகை செய்துவிட்டு அறைக்குச் சென்றுவிட்டான். ஆடையை மாற்றிக் கொண்டு வந்தவன் தொலைக்காட்சி முன்னால் அமர்ந்து ரிமோட்டைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"என்ன ரஞ்சித் சாப்பிடலையா?" என்று கேட்டான் சுரேஷ்.

"ஃப்ரண்ட்ஸ்கூட ஹோட்டல்ல சாப்பிட்டேன்" என்றான் ரஞ்சித்.

சுரேஷ் சாப்பிட்டு முடித்ததும் மூவரிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பியதும் ஜெயலட்சுமி இடுப்பில் கையை வைத்துக்கொண்டு கோபத்துடன் ரஞ்சித் எதிரே வந்து நின்றாள்.

"ஏண்டா, வீட்டுக்கு வந்தவன்கிட்டே எப்படி இருக்கே, என்னன்னு ஒரு வார்த்தை விசாரிக்கறதில்லியா?" என்றாள் சீற்றமாக.

ரஞ்சித் திகைத்தான். "நம்ம சுரேஷ் தானேம்மா? அவன்கிட்டே என்ன குசலம் விசாரிக்கறது?"

"சொந்த அண்ணன்கிட்டயே விசாரிக்காதவன் மத்தவங்ககிட்டே எப்படிடா விசாரிப்பே? என்னதான் காலம் மாறினாலும் எப்படிடா உங்களால இப்படியெல்லாம் இருக்க முடியுது? சே! என்னமோ போங்க" என்றவாறு சென்றுவிட்டாள்.

தனக்குப் பக்கத்தில் புன்னகையுடன் வந்தமர்ந்த தந்தையை ஏறிட்டான்.

"அம்மா என்னப்பா எதிர்பார்க்கறாங்க?"

"புரிஞ்சுக்க முடியலை இல்லே?"

"......"

"இப்பத்தான் சுரேஷ் புரிஞ்சுக்க ஆரம்பிச்சு இருக்கான். கவலைப்படாதே. உனக்கும் கல்யாணமாகி கொஞ்ச நாளானதும் தெரிஞ்சுடும். ஏன்னா இதெல்லாம் சொல்லித் தெரியறதில்லே" என்று கூறி அவன் தோளில் தட்டினார் லிங்கராஜன். ●



தமிழுக்கு எம்.ஜி.ஆர். - சிவாஜி. தெலுங்குக்கு ன்.டி.ஆர். - நாகேஸ்வர ராவ். ஆனால் கன்னடத் ில் போட்டிக்கு யாருமில்லாமல் கோலோச்சியவர் ராஜ்குமார் மட்டும்தான்.

முத்துராஜு என்ற பெயர்கொண்ட, நாடகக் ழுவில் நடித்துக் கொண்டிருந்த சாதாரணமான ையன், கன்னடப் படஉலகின் சூப்பர் ஸ்டார் ஆவதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் ஏவி. மெய்யப்பச் செட்டியார்தான். நாடக நடிகரான த்துராஜு பஸ் ஸ்டாண்டில் கண்டெடுக்கப்பட்டு, ரவி.எம். தயாரித்த 'பேதர கண்ணப்பா' என்ற ன்னடப் படத்தில் ஹீரோ ஆக்கப்பட்டார். படம் பிரமாதமாக வெற்றி பெற்றது. அதன்பின், சுமார் ாற்பத்து ஐந்து வருட காலம், கன்னடப் படஉல ின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். இருநூற்று ொச்சம் படங்கள். நடிப்புக்காக பத்துமுறை பிலிம் ஃபேர் விருது, ஒன்பது முறை கர்நாடக அரசின் விருது, பத்மபூஷன், பால்கே விருது என்று ரகப்பட்ட கௌரவங்களைப் பெற்றார்.

ஒரு காலத்தில் ஏவி.எம்.முக்குச் சொந்தமாக பெங்க ளூர் சதசிவ நகரில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டை வாங்கிய ராஜ்குமார், கடைசிவரை அந்த வீட்டில்தான் வசித்து வந்தார். அவரது சொந்த ஊர் தமிழ்நாடு - கர்நாடகா எல்லைப் பகுதியில் உள்ள கஜனூர். அங்கே அவருக்கு ஒரு பங்களா உண்டு. அந்த வீட்டிலிருந்துதான் ராஜ்குமாரை, வீரப்பன் கடத்திக்கொண்டு போனான்.

ராஜ்குமாரின் அப்பா ஒரு நாடக நடிகர். அவருடன் கூடவே ஊர் ஊராகச் சென்ற காரணத்தால், சிறு வயதி லேயே நடிப்பின்பால் ஈர்க்கப்பட்டார் ராஜ்குமார். புராண கதாபாத்திரங்கள் முதல் ஜேம்ஸ்பாண்ட் ரோல் வரை பலவிதமான கேரக்டர்களில் நடித்தவர்.

ராஜ்குமாருக்கு தமிழ் நன்றாகத் தெரியும் என்றாலும், அவர் கன்னடம் தவிர வேறு மொழிப் படங்கள் எதிலும் நடித்தது இல்லை. மேலும், அவர் எப்போதும் தன்னை ஒரு தீவிர கன்னட மொழிக்காரராகவே காட்டிக் கொண்டார். எண்பதுகளின் தொடக்கத்தில் 'கோகக்' இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, கர்நாடகா வில் கன்னட மொழிக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்று மாநிலம் முழுவதும் போராட்டம் நடத் தினார். அவரை மீறி கர்நாடகாவின் எந்த அரசியல் தலை வரும் எதுவும் செய்துவிட முடியாது என்ற நிலையினை ஏற்படுத்தி கடைசிவரை அதை நிலை நிறுத்திய ராஜ் குமார், கன்னட மக்களுக்கு அன்பான 'அண்ணவாரு!'

அவர் தினமும் யோகாசனப் பயிற்சிகள் செய்வார். யோகா பற்றி பல நிகழ்ச்சிகளிலும் பேசியதுண்டு. 1999-ல் 'சப்தவேதி' என்ற படம் ரிலீஸ் ஆனது. அடுத்து 'பக்த அம்பரீஷா' என்ற படத்தில் நடிப்பதாக அறிவிப்பு வெளி யானது. ஆனால் அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்ததால் நடிப்பதை நிறுத்திக் கொண்டுவிட்டார்.

- எஸ்.சந்திரமௌலி

மேதைகள் ரெடி!

"நள்ளிரவு முதலே கொட்டக் கொட்ட விழித்தபடி காத்திருக்கிறார்கள். விடிந்ததும் வியர்க்க விறுவிறுக்க தேர்வு எழுதிவிட்டு ரிசல்ட்டுக்காக படபடப்போடு காத்திருப்பைத் தொடர்கிறார்கள். யார் இவர்கள்? இரண்டு வயதே நிரம்பிய குழந்தைகளிடம் கேட்டால், 'ப்ரீகேஜி அட்மிஷனுக்காக பகீரத முயற்சியில் ஈடுபடும் எங்களது பெற்றோர்' என மழலை மொழியில் திக்கித் திணறியாவது சொல்லி



• ரேவதி சங்கரன்

விடுவார்கள். "குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளில் சேர்க்க பெற்றோர்கள் துன்பப்படுவது ஒருபுறமிருக்க, அட்மிஷன் கிடைத்து பள்ளிக்கு அனுப்பப்படும் சிறார்களை ஆரம்பக் கல்வி என்ற பெயரால் துன்புறுத்துவதுதான் இங்கே இருக்கும் அறிவியல்பூர்வ (?) அணுகுமுறை'' என்று காட்டமாக விமர்சிக்கிறார் 'லிட்டில் ஜெம்ஸ்' என்னும் பயிற்சி மையத்தை சென்னை மேற்கு மாம்பலத்தில் நடத்தி வரும் மழலைக் கல்வி பயிற்சி நிபுணரான ரேவதி சங்கரன்.

''தாயைப்போல பிள்ளை; நூலைப் போல சேலை என்றொரு பிரபலமான தமிழ்ப் பழமொழி உண்டு. தாய்தான் தனது குழந்தைக்கு முதல் ஆசிரியை. கர்ப்பத்தில் இருக்கும்போதே தாயின் அசைவுகளை உள்வாங்குகிறது குழந்தை. அவள் கேட்கும் இசையை ரசிக்கிறது. அதே போல் பிறந்த ஆறு மணி நேரத்தில், தாயை அடையாளம் கண்டுகொள்கிறது. அடுத்த ஆறு வாரத்தில் தாய் பயன்படுத்தும் வார்த்தைகளைப் புரிந்துகொள்கிறது. ஐந்து வயதுவரை தாயை மட்டுமே முழுமையாகச் சார்ந்து வாழும் குழந்தைக்கு ஆறாவது வயது முதல் பகுத்தறியும், தேர்வு செய்யும் 'மனசு' வந்துவிடுகிறது. அதற்கு முன்பு குழந்தையின் மூளையைப் படம் பிடிக்கப்படாத ஒரு மெகா ஃபிலிம்ரோல் என்று வர்ணிக்கலாம். இந்தக் காலகட்டத்தில் 'க்ளென்டோமான் போட்டோ மெமரி மற்றும் ரீகாலிங்' முறையில் தனது குழந்தையோடு தாய் விளையாடினால், அந்தக் குழந்தை



• லிட்டில் ஜெம்ஸில் மழலைகள்

படங்கள் : ஸ்ரீஹரி

மேதையாகிவிடுகிறது,'' எனும் ரேவதி சங்கரன், புதுவை மதர் சர்வீஸ் சொஸைட்டியின் தயாரிப்பு.

''மனித மூளையின் மொத்த வளர்ச்சி அறுபது சென்டிமீட்டர். இதில் ஐம்பது சென்டிமீட்டர் மூளை ஐந்து வயதுக்குள் வளர்ந்து முடிந்துவிடுகிறது. ஆறாவது வயது முதல் இருபதாவது வயதுக்குள் மீதமுள்ள பத்து சென்டிமீட்டர் மூளை வளர்ந்து முடிந்துவிடும். இருபத்தோரா

வது வயது முதல் மூளை செல்கள் மெல்ல அழிய ஆரம்பிக்கின்றன. இதனால்தான் ஞாபக மறதி ஏற்படுகிறது.

மனித மூளையில் நூற்றுயிருபது டிரில்லியன் விஷயங்களைப் பதிவு செய்ய முடியும். மொத்தமுள்ள அறுபது செ.மீட்டரில் ஐந்து சதவிகித மூளையைப் பயன்படுத்தினாலே அறிஞர்களாகவும், மேதைகளாகவும் உருவாக முடியும். ஆனால் ஐந்து வயதுவரை ஃப்ரெஷ்ஷாக இருக்கும் குழந்தைகளின் மூளைக்குப் பொருத்தமான பயிற்சியை நாம் கொடுப்பதில்லை. குழந்தைகளை சினிமா பாடல் பார்க்க வைத்து... ஆட வைத்து ரசிக்கிறோம். குத்துச் சண்டை வீரர்கள் உடலுக்குப் பயிற்சி கொடுத்து உடலை கட்டுக்கோப்பாக உருவாக்குகிறார்கள். அதுபோல் மூளைக்கும் பொருத்தமான பயிற்சி கொடுத்தால் தான் மூளை நரம்புப் பாதை அகலமாகும். இப்படி அகலமாகும்போது அவை சக்திபெற்று செயலாக்கம் பெறுகிறது. குறிப்பாக ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் தாய் வழியே தரப்படும் இந்தப் பயிற்சி டாக்டர் கிளென் டோமெனால் கண்டுபிடிக்கப்பட்டு, நிருபிக்கப்பட்ட ஒன்று'' என்கிறார்.

''1940-ல் இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்க ராணுவத்தில் டாக்டராக பணிபுரிந்து கொண்டிருந்தவர்தான் கிளென்டொமென். அப்போது போரின் விளைவால் மனவளர்ச்சி குன்றிப் பிறந்த ஏராளமான குழந்தைகளை நிராதரவாக விட்டுவிட்டு பிலடெல்பியா மக்களில் பலரும் வெளியேறி விட்டனர். அவர்களைப் பாதுகாத்து வந்த டாக்டர் கிளென் அவர்கள் கொஞ்ச நேரம் இயல்பாகவும் கொஞ்ச நேரம் இயல்பற்ற நிலையிலும் இருப்பதைக் கண்டார். அவர்களது மூளைக்குள் என்ன நடக்கிறது என்பதை அறியத் துடித்த அவர், 'ஹெமிஸ்பெரக்டமி' எனும் அறுவைச் சிகிச்சையை சில மனம் வளம் குன்றிய குழந்தைகளுக்குச் செய்து பார்த்தார். அப்போது, மூளையில் பாதி செல்கள் பழுதடைந்து இருப்பதைக் கண்டார். பழுதடைந்த செல்களை நீக்கியபிறகு, அவர்களது பாதியளவு மூளைக்கு ஏற்ப ஒரு மாற்று பயிற்சி முறையைக் கொடுக்க வேண்டும் என்று முனைந்து, அவர் கண்டுபிடித்ததுதான் இம்முறை.

மன வளம் குன்றிய குழந்தைகளுக்கு பயிற்சிதர ஆரம்பித்ததும், வெகுவிரைவாக முன்னேற்றம் கண்டு இயல்பான அறிவுத்திறனும் ஆற்றலும் மிக்கவர்களாக அவர்கள் பரிமளித்தார்கள். அதன்பிறகு 1975-ல் ஆரோக்கியமான குழந்தைகளுக்கும் இதே முறையில் பயிற்றுவித்தால் என்ன என்று அவருக்குத் தோன்றவே... அதையும் செயல்படுத்திப் பார்த்த டாக்டர் கிளென், ஐந்து வயதில் குழந்தைகளின் மூளைத் திறன் பதினாறு வயதில் இருப்பதற்குச் சமமான செயல்திறன் (school final knowledge) பெற்றதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். அவரது கல்வி முறையை நம் நாட்டுக்கு உகந்தமுறையில் என்னிடம் வரும் தாய்மார்களுக்கு நான் சொல்லித் தருகிறேன். ஒரு மணி நேரம் என்னோடு செலவிட்டால் போதும்.



''எலக்ஷன் டயத்துல தலைவர்கிட்ட குழந்தைய குடுத்து பேர் வெக்கச் சொல்லாதீங்க!''

''எதுக்கு?''

''நேத்து ஒரு குழந்தைக்கு 'பூத்'னு பேர் வெச்சுட்டார்!''

- அம்பை தேவா

அதன்பிறகு, அவர்களது குழந்தைகளுக்கு அவர்கள்தான் ஆசிரியை. இதில் அப்பா கூட குறுக்கிடக் கூடாது. முக்கியமாக குழந்தை தாயைச் சார்ந்து இருக்கும்போதே (பள்ளியில் சேர்க்கும் முன்பே) இந்தக் கல்வியைத் தர வேண்டும்'' என்றவர், போட்டேமெமரி மற்றும் ரீகாலிங் முறையைச் சுருக்கமாக விளக்குகிறார்.

"ஏ.பி.சி.டி.யோ, தமிழ் எழுத்துகளோ சொல்லித்தரும் முன் குழந்தைகளுக்குப் பயிற்சிதர வேண்டும். இம்முறையில் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் மட்டுமே பயிற்சி.

வெள்ளை நிற அட்டைகளில் பெரிய எழுத்துகள் மற்றும் படங்களை நடுவில் ஒட்டி, அவற்றை ஒரு நொடிக்கு ஒரு படம் வீதம் விரைவாக குழந்தைகளிடம் காட்டுகிறோம். இப்படிக் காட்டும்போது குழந்தையின் கண்ணுக்கும் அட்டைக்கும் பதினெட்டு அங்குல இடைவெளி இருக்க வேண்டும். அட்டைகளை விரைவாகக் காட்டியபடி, உரத்த குரலில், இசை மொழியில், அம்மா சொல்லிக்கொண்டே வரும்போது குழந்தையின் மூளையில் என்ன எழுத்து, யார், என்ன என்று தெரியாமலேயே எழுத்துக்களும், உருவங்களும், பொருட்களும் பதிய ஆரம்பிக்கும். புதிது புதிதாக அட்டைகளும் விஷயங்களும் மாறிக்கொண்டே இருக்கும்போது குழந்தைகளின் ஆர்வம் அதிகரித்தபடியே இருக்கும். குழந்தைகளின் பார்வையில் படுகிறமாதிரி அட்டைகளை ஒரே இடத்தில் வைக்க வேண்டும். ஆனால் கைகளுக்கு எட்டாத வகையில் வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அவர்களே துல்லியமான நேரத்துக்கு அட்டை விளையாட்டுக்கு அம்மாவைக் கூப்பிடுவார்கள். இந்தப் பயிற்சி பெறும் குழந்தைகளின் மூளைத் திறனும், அறிவுப் பதிவும் பள்ளியில் சேர்ந்ததும் அவர்களைத் தனித்துக் காட்டுவதோடு தனித்துவம்மிக்க மேதைகளாகவும் அவர்களை உருவாக்கும்.

இதற்கு, பதினைந்து ஆண்டுகளாக பயன்பெற்று படிப்பிலும், தனித் திறமையிலும் சாதித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளே சாட்சி'' என்கிறார் ரேவதி சங்கரன்.

- ஸ்ரீசக்கரம்

ஜெயலலிதாவை ஜெயிலுக்கு அனுப்புவாராமே கராத்தே..?

நீங்கள் கேட்டவை-தராசு

● சா.விமல்குமார்,
சென்னை-48

? தமிழக முதல்வர் திருந்தியதுபோல் நடிக்கிறார் என்று சொல்லும் எதிர்கட்சிகள் எப்போது திருந்தின...?

! 'மாசற்றவர்கள் முதல் கல்லை வீசட்டும்' என்று ஏசு சொன்னது உண்மைதான். அவர் சொன்னால் நாலு பேராவது கேட்பார்கள். விமல்குமார் சொன்னால் யார் கேட்கப் போகிறார்கள்?

● நெ.பிரஜோற்பத்திகலை,
பெருமாத்தூர்

? தினத்தந்தி, தினமலர், நமது எம்.ஜி.ஆர், தினபூமி ஆகிய பத்திரிகைகளுக்குக் கடந்த ஐந்தாண்டுகளில் கொடுத்த விளம்பரங்களின் மதிப்பு எவ்வளவு என்று எட்டு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு ஹைகோர்ட் உத்தரவிட்டுள்ளதே?

! அரசு விளம்பரங்கள் வெளியிடுவதில் கட்சிக் கண்ணோட்டத்துடன் பாரபட்சம் காட்டப்படுகிறதா என்பதை அறிய இந்த உத்தரவு. அரசியல்வாதிகளைத் திருத்த நீதிமன்றங்கள், எத்தனையோ வழக்குகளில் இது போன்ற எத்தனையோ நடவடிக்கைகளை எடுக்கின்றன. நாய்வால் நிமிர்ந்தால்தானே!



• ஜாலி தண்டனை!

● மல்லிகை மன்னன்,
முடக்கத்தான்

? "கருணாநிதியின் காலடியில் செருப்பாக இருப்பேன்" என்று இந்திரகுமாரி சொல்கிறாரே?

! கையில் பச்சை குத்திய ஜெயலலிதா உருவத்தை மறைக்க பிளாஸ்திரி ஒட்டினதோடு வாயிலும் ஒன்றை ஒட்டிக் கொண்டிருக்கலாம்.



* நிறம் மாறும் சபதம்!

● சி.பரத், சென்னை-82 ●

? நம் நாட்டில் மக்கள் தொகை அதிகமாய் இருந்தும்கூட ஜப்பான் நாட்டைப் போன்று தொழில் துறையிலும் பொருளாதாரத்திலும் இன்னும் நாம் ஏன் முன்னேறவில்லை?

! 'ஒரு நாட்டின் வளங்களுள் மனித வளமே முக்கியமானது; அதனை மேம்படுத்தி நாடு முன்னேற பயன்படுத்த வேண்டும்' என்ற உணர்வு



• வண்ணக் கனவுகள்!

ஜப்பானிய தலைவர்
களுக்கு இருக்கிறது. அத
னால் தேச பக்தி, சுயச்
சார்பு, உழைப்பார்வம்,
சுகாதாரம் முதலியன குழந்
தைப் பருவத்திலேயே மக்
களிடம் வளர்க்கப்படுகின்
றன. இதுதான் ரகசியம்.

● எம்.ராஜேந்திரன்,
லால்குடி

? தி.மு.கவில் பாக்ய
ராஜ், சேடப்பட்டி போன்
றோர் சேர்ந்துள்ளது
பலமா? பலவீனமா?

! பலமுமில்லை,
பலவீனமுமில்லை, மதி
யீனம்!

● ஆர்.ராஜதுரை,
சீர்காழி

? ராஜ்குமார் மரணத்துக்
காக கர்நாடக அரசு இரண்டு நாள்
விடுமுறை அறிவித்தது சரியா?

! அனுதாபத்துக்காக ஒரு நாள்;
வன்முறைக்குத் தலைவணங்கி இன்
னொரு நாள்! குமாரசாமிக்கு அனு
பவம் போதாதுங்க. இப்பவாவது
பாடம் கற்றுக் கொண்டிருந்தால் சரி.

● உமரி பொ.கணேசன்,
மும்பை - 37

? வைகோ தாம் நாச
வலையிலிருந்து மீண்டு பாச
வலையில் சேர்ந்துவிட்ட
தாகச் சொல்கிறாரே...
அவர் கதி என்னவாகும்?

! முதல் நாள் கூட்டத்தில்
கருணாநிதியின் கிலோ
இரண்டு ரூபாய் அரிசித்
திட்டத்தை வைகோ சாடு
சாடு என்று சாட, மறுநாளே
ஜெ. கிலோ 1.75 ரூபாய்
அரிசித் திட்டத்தை அறிவிக்
கிறார்! வைகோ எங்கே
கொண்டுபோய் முகத்தை
வைத்துக் கொள்வதாம்? பாச
வலையா? மோச வலையா
என்று யோசிக்கட்டும்.

● கே.வி. ராமன்,
சென்னை - 73

? சல்மான் கானுக்கு




• மூன்றாவது வலை!



• இரட்டைச் சோகம்!



• சேரும் மதியீனம்!



ஐந்தாண்டு சிறைவா
சம் ப்ளஸ் 25000
ரூபாய் அபராத
மாமே?

! சிறை என்ன...?
அதான் ஜாமீனில்
வந்துட்டாரே. மேல்
முறையீடு செய்வார்.
சிறைவாசம்
உறுதிப்பட்டால்
கூட பரோலில்
வெளியே வருவார்.
25,000 ரூபாய் அபரா
தம் என்பது சும்மா
ஜுஜுபி. வழக்கு
செலவு அதுபோல பத்து
மடங்கு ஆகும். அவரை
நம்பி கோடிக்கணக்கில்
முதலீடு செய்திருக்கும்
படாதிபதிகளே கொடுத்து
விடுவார்கள்!

● லலிதா செல்லப்பா,
சென்னை - 75 ☐

? பல பிரபலங்கள் சுயநலத்
துக்காக கட்சி மாறுவது, கூட்
டணி மாறுவது என்று
இருக்கும் இந்நாளில்,
வாக்காளர் மட்டும்
எப்படி சிந்தித்து சிறந்த
நேர்மையாளரைத்
தேர்ந்தெடுத்து வாக்
களிப்பார்?

! எப்படிச் சிந்திப்
பது என்றா கேட்கிறீர்
கள்? உங்கள் வீட்டுக்குத்
திருடன் வந்தால் கூச்சல்
போட்டு ஊரைக் கூட்டி
அவனை ஓட வைக்க
மாட்டீங்களா? நாட்
டைத் திருட ஒருத்தன்
வரும்போது மட்டும்
அவனுக்கு வோட்டுப்
போடறீங்களே ஏன்?

● ஜி.ஜெயராமன்,
கூத்தலூர்

? தமிழக மக்கள்
மீண்டும் அ.தி.மு.கவை

ஆட்சிக்குக் கொண்டு வந்தால் அதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

! தமிழகத்தின் தலைவிதிதான்!

● க.மோ.சிவா, கந்திகுப்பம்

? 'ஜெயலலிதாவை ஜெயிலுக்கு அனுப்புவேன்' என்கிறாரே கராத்தே?

! அப்ப நம்மை ஜெயிலுக்கு ஜெ அனுப்பிடப் போறாங்களேன்னு ஓடி ஒளிஞ்சுக்கிட்டார். இப்போ தேர்தல் நெருங்க இப்படிப் பேசறார். தேர்தல் முடிந்த பின் எப்படிப் பேசுவார்!?

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? கறுப்பு எம்.ஜி.ஆர், சிவப்பு எம்.ஜி.ஆர், மஞ்சள் எம்.ஜி.ஆர் எல்லாம் அம்மாதான் என்கிறாரே ராமராஜன்?

! எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசாக அம்மா தவிர வேறு யாரும் சொந்தம் கொண்டாடக் கூடாது என்ற கருத்தில் சொல்கிறார். ஆனால் அம்மா தவிர வேறு யார் வேண்டுமானாலும் சொந்தம் கொண்டாடலாம் என்பதாக தேர்தல் முடிவு அமைந்தால் என்ன செய்வார்? இதற்கு முன் அப்படி நடந்திருக்கிறதே!

● இரா. சக்கரபாணி, மதுரை - 7

? ஐந்நூறு பயணிகள் அனுமதிச்சீட்டு வாங்காமல் பீஹாரிலிருந்து இராமேஸ்வரம் வரை இலவசமாக ரயிலில் பயணம் செய்துள்ளது எதைக் காட்டுகிறது?

! தமது மாநிலமான பீஹாரில் உள்ள 'வித்தவுட்' பயணிகளை மட்டு லாலு டிக்கெட் வாங் வைப்பாரேயானா ரயில்வே அமைச்சர் என் முறையில் நிஜமாகவே சாதனை புரிந்தவராவார்



• போட மறந்த பிளாஸ்திரி!

● எம்.பாஸ்கர், திண்டுக்க

? தமிழகத்தில் அடுத் அமையப் போகும் க ணாநிதி ஆட்சிதா காமராஜர் ஆட்சி என்று ஜி.கே வாசன் கூறியுள்ளாரே?

! அண்ணா ஆட்சி, காமராஜ ஆட்சி என்றெல்லாம் இவங்க குறிப்பி வது 'நல்லாட்சி' என்ற அர்த்தத்தி தான். "அது கூட்டணி ஆட்சியாக கூட இருக்கலாம்" என்பதா கலைஞரே இப்போது கீழிறங்கி வந் ருக்கிறாராம்! எனவே காங்கிரஸ்கார கள் உட்பூசல்களை ஒதுக்கி முன்னை போதையும்விட உற்சாகமாக உழை கட்டும். இல்லாவிடில் காமராஜ ஆட்சி பகற்கனவாகவே நீடிக்கும்.

● கே.தெய்வசிகாமணி, சென்னை - 5

? தமிழகத்துக்கான தேர்த அறிக்கையில் 'அயோத்தியில் ராம கோயில்' என்ற உறுதியை சுப்ரமண் சுவாமி அளித்துள்ளாரே?'

! நாடாளுமன்ற தேர்தலில் போட்டி யிடும்போது பாருங்க... சந்திரமண் டலத்தில் ராமர் கோயில் கட்டுறத உறுதி அளிப்பார்!

● என்.ரெங்கநாயகி, கோவை - 2

? மகளிர் சுயஉதவிக் குழுக்கை யும் அரசியலாக்கிட்டாங்களே...?

! எதுதான் இன்னும் அரசிய ஆக்கப்படாம இருக்கு சொல்லுங் பார்ப்போம்! அரிசி யையே அரசிய ஆக்குகிறவர்கள் எதைத்தான் அரசி யல் ஆக்க மாட் டார்கள்!

▢ ரூ.100/- பரிசு பெறுபவர்:
லலிதா செல்லப்பா,
144-B, காந்தி மெயின் ரோடு, சங்கர் நகர்,
பம்மல்,
சென்னை - 600 075

✱ ரூ.50/- பரிசு பெறுபவர்:
சி.பரத்,
C - 306, முதல் தெரு,
பெரியார் நகர்,
சென்னை - 600 082

நீங்கள் கேட்டவை-தராசு

யாரோ போட்ட வோட்டு!

'வோட்டுப் போடப் போனபோது நிகழ்ந்த சுவாரஸ்ய அனுபவத்தைச் சொல்ல முடியுமா?' என்று இரண்டு பேரிடம் கேட்டோம்... ஆர்வத்துடன் முதலில் பேசியவர் விமலா வைத்திய நாதன்.


''காலையில் சீக்கிரமே போனால் க்யூ வரிசை இருக்காது என்பதால் சீக்கிரமே கிளம்பினோம். அவசர அவசரமாகக் கடவுளிடம் வேண்டுதல் - நாங்கள் வோட்டுப் போடும் கட்சிதான் ஜெயிக்க வேண்டும் என்று. கிளம்பும் போது நாளிதழ் போடுபவர் பணம் கேட்டுக் கொண்டு வந்தார் - 'இன்னிக்கி லீவு நாள்தானே, அதனால் வீட்டில் இருப்பீங்கன்னு வந்தேன்' என்றார். கணக்கு பார்த்துப் பணத்தைக் கொடுத்த பிறகு, தாமதமாகப் போய் எதைத் தவிர்க்க நினைத்தோமோ (நீண்ட வரிசை) அதை முழுமையாக அனுபவிக்க நேர்ந்தது.

ஆனால் என் மாமனார் விஷயத்தில் நடந்தது மேலும் நகைச்சுவை. புகைப்பட அடையாள அட்டையை எடுத்துக் கொண்டுதான் அவர் வாக்குச் சாவடிக்குப் போயிருந்தார். ஆனால் 'இது நீங்க இல்ல' என்று அவரை வாக்களிக்க அனுமதிக்கவில்லை. காரணம் இதுதான். புகைப்படத்தில் நிறைய தலைமுடியும், பெரிய மீசையுமாகக் காட்சி அளித்தவர், தேர்தலுக்கு முன்பு வேண்டுதலை நிறைவேற்ற திருப்பதிக்குப் போய் முடியை காணிக்கையாகச் செலுத்திவிட்டிருந்தார். தன் முயற்சியில் சற்றும் தளராத ஓய்வு பெற்ற நீதிபதியான என் மாமனார், ரேஷன் அட்டையோடு மீண்டும் வாக்குச் சாவடிக்குச் சென்று அடையாளத்தை உறுதிசெய்து வாக்களித்துவிட்டுதான் வந்தார்'' என்று சிரித்துக்கொண்டே விமலா கூறி முடிக்க, அடுத்து டாக்டர் செல்வராஜ் ஆரம்பித்தார்...



• தாமத வருகை!

''போன தேர்தலின்போது காலையிலேயே கிளம்பிச் சென்று வாக்களித்து வந்துவிடலாம் என்றால் என் மனைவி, 'ஏன் மெதுவாகப் போனால்தான் என்ன? வாக்குச்சாவடி என்ன ரேஷன் கடையா, தாமதமாகப் போனால் பொருள்கள் தீர்ந்துவிட?' என்று கூறிவிட்டு என் மனைவியோடு யாருக்கு வாக்களிக்கலாம் என்பதை விவாதிக்கத் தொடங்கினேன். பிறகு வெவ்வேறு கூட்டணிகளின் சாதக பாதகங்களை எல்லாம் விவரமாக மனைவியிடம் விளக்கிவிட்டு, மாலை நான்கு மணிக்கு வாக்களிக்கப் போனபோது, எனக்கு முன்பாகவே என் வோட்டை யாரோ போட்டுவிட்டுப் போயிருந்தார்கள். இது மனைவிக்குத் தெரிந்தால் அவமானம். 'முதல்லேயே சொன்னேனே' என்பாள். எனவே 'என் விரலில் மை அடையாளமாவது வைத்து விடுங்கள். நான் வாக்களித்ததாக வீட்டில் சொல்லி விடுவேன்' என்று வேண்டுகோள் வைத்தேன். அவர்களும் சங்கடத்துடன் அதற்கு ஒப்புக் கொள்ள, திரும்பினால் கிண்டல் சிரிப்புடன் அறை வாசலில் என் மனைவி நின்றிருந்தாள்!''



• கிண்டல் சிரிப்பு!



தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்**

உச்சி வெயிலில் கிளம்பியவன், எந்த ஏ.சி. சாதனம் வாங்கினால் அதிகபட்ச தள்ளுபடி தருகிறான் என்று கடை கடையாய் ஏறி இறங்கிக் கொண்டிருந்தேன். கடைசிக் கடையில் நுழைவதற்குமுன் ஒரு பெட்டிக் கடையில் அன்றைய மாலை பத்திரிகையின் தலைப்புச் செய்தி தொங்க விட்டிருப்பதைப் பார்த்தபோது 'அப்பாடா! என் தலை தப்பியது' என்று இன்ப அதிர்ச்சியுற்றேன்.

'எல்லோருக்கும் இலவச ஏ.சி.' என்று ம.ம.கு. கட்சி தன் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு என்னைத் தக்க சமயத்தில் காப்பாற்றி, என் குடும்பத்தினரின் வோட்டுக்களையும் தக்கவைத்துக் கொண்டிருந்தனர். கட்சி முளைத்து மூன்று இலை விடாவிட்டாலும் மக்கள் மனம் குளிர, இப்படி ஒரு அதிரடி அறிக்கையால் அமோக வெற்றி பெற்று, எடுத்த எடுப்பிலேயே பூத்துக் குலுங்கப் போவது உறுதி என்று எனக்குத் தோன்றியது.

மூன்றாவது மாடி உச்சியில் வாழ்க்கைப்பட்டவள் என் மனைவி. ஒவ்வொரு கோடையிலும் அவள் எனக்கு வைக்கும் கோரிக்கை ஏ.சி. சாதனம் வாங்க வேண்டுமென்பது. சாமர்த்தியமாக ஒவ்வொரு ஆண்டும் அதனைத் தள்ளிப்போட்டு பெரும் சாதனை புரிந்துகொண்டிருந்த நான், இவ்வாண்டு அவளுடைய உக்கிரத்தைத் தாளாமல்தான் ஏ.சி. வாங்கத் துணிந்து செயலில் இறங்கினேன். இருந்தாலும் யாரையும் ஏய்த்துச் சம்பாதிக்காத என் பணம் ஏ.சி.யில் வீணாகக்கூடாது என்ற விதி, ம.ம.கு. கட்சி அறிக்கையாகத் தடுத்திருக்கிறது.

ஏ.சி. வாங்க இருபதாயிரம் கொண்டு சென்றவன், ஓசி ஏ.சி. அறிவிப்பு தாங்கிய இரண்டு ரூபாய் செய்தித்தாளோடு திரும்பியதை என் மனைவியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மிகவும் நொந்து போனவளாய் 'நீயும் நீ ஏ.சி. வாங்கின அழகும்' என்பதுபோல, போதுமடா சாமி என்று விரக்தியுடன் ஒரு பெரிய கும்பிடு போட்டதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அதே பெரிய கும்பிடு போட்ட கையோடு மூன்று மாடி ஏறி வந்த வோட்டுக் கேட்ட ம.ம.கு. வேட்பாளரை நான் இலேசாக விடவில்லை.

"உங்களுக்கு வோட்டுப் போட்டா எல்லாருக்கும் இலவச ஏ.சி. கொடுப்பீங் கன்னு என்ன உத்தரவாதம்?" என்றேன்.

"முதலில் நாங்க ஓட்டை போட்டுட றோம் போதுமா?" என்றார் வேட்பாளர்.

"அட நாங்கதானே உங்களுக்கு வோட்டைப் போடணும். நீங்க போட றதா சொல்றீங்க. எங்க பேர்லே கள்ள



இலவச ஏ.சி.

அகிலா கார்த்திகேயன்

வோட்டுப் போடறதைச் சொல்றீங்களா?'' என்று சற்றுக் கடுப்போடு கேட்டேன்.

"அது இல்லீங்க ஸார்! உங்க வீட்டு சுவரிலே ஏ.சி. மெஷின் வைக்க முதலில் ஓ'வன்னா ஓட்டை போட்டுடறோம். அப்புறம் நீங்க 'வோ'வன்னா வோட்டை எங்களுக்குப் போட்டு ஜெயிக்க வைச்சா, அந்த ஓட்டையிலே ஏ.சி.யை நிரப்பித் தந்துடறோம்....'' என்று அவர் பேசும் போதே ஒன்றரை டன் ஏ.சி.யில் குளிர்ந்தது போலிருந்தது.

அடுத்த நாளே அவர்கள் கடப்பாரையும் கையுமாக ஆட்களை அனுப்பிய போது நான் பயந்தே போனேன். ஆனால் வந்தவர்கள் ஏ.சி.க்கு உகந்த அறை எதுவென்று என்னைக் கேட்டறிந்து சுவரிலும் ஜன்னலிலுமாக ஒரு செவ்வக ஓட்டையைப் போட்டு கட்சியின் தேர்தல் அறிக்கையின் அரைவாசியை நிறைவேற்றிவிட்டார்கள்.



இப்படி இவர்கள் எல்லார் வீட்டு சுவரிலும் ஓட்டை போட ஆரம்பிக்க, மாற்றுக் கட்சியினர் தேர்தல் கமிஷனரிடம் புகார் அளித்துவிட்டனர். ஏற்கெனவே சுவரில் விளம்பரம் எழுதக் கூடாது என்று தடை இருக்கும்போது ஓட்டை மட்டும் எப்படிப் போட அனுமதிக்கலாமென்று மற்ற கட்சிகள் கேட்டனர்.

ஆனால் இதற்கெல்லாம் ம.ம.கு. கட்சி வருத்தப்படவோ, சங்கடப் படவோ இல்லை. அவர்கள் பாட்டுக்கு ஓட்டை போடுவதில் கவனமாக இருந்தனர். புகாரை விசாரிக்க வந்த தேர்தல் அதிகாரிகளிடம் என்னைப் போன்ற ஜீவன்களை 'சொந்தச் செலவில்தான் ஓட்டை போட்டோம். ம.ம.கு. கட்சி தர்ற ஏ.சி.ய பொருத்தத் தான் போட்டோம். நாங்க அவங்க தீவிர தொண்டர்கள். ம.ம.கு. கட்சி ஆட்சி பீடத்தில் ஏறும்; ஏ.சி. வீடு தேடி அடுத்த நிமிடம் வந்து சேரும் என்பது எங்களின் அபரிமிதமான நம்பிக்கை' என்று வீரவசனம் பேச வைத்தனர். நொந்துபோன அதிகாரிகள் புகார் தந்தவர்களிடம் சாட்சி கூறச் சொல்ல, அவர்களும் ஜகா வாங்கிவிட்டனர். காரணம் வேறொரு பக்கம் அவர்கள் தங்கள் கட்சியின் சார்பாக ரூபாயை அள்ளிவிட்டதை ம.ம.கு. கட்சி வீடியோ ஆதாரமாக வைத்து அவர்களை மிரட்டியதுதான்.

ஆக உணவுப் பற்றாக் குறை, குடிநீர், குண்டு குழி சாலைகள், வேலையில்லாத் திண்டாட்டம் என எல்லாப் பிரச்னைகளும் தீர்க்கப் பட்டுவிட்ட நிலையில் அரசாங்க கஜானாவை

எப்படிக் கரைப்பது என்பதே பெரும் பிரச்னையாக இருப்பது போல, வீட்டுக்கு வீடு இலவச குளிரூட்டும் திட்டத்தை அறிவித்திருந்த ம.ம.கு. கட்சியே அதிக வோட்டுப் பெற்றதில் அதிசயம் ஒன்றுமில்லைதான்.

வாக்குறுதியை நிறைவேற்றுகிறோமென்று தங்கள் முதல் வருட பட்ஜெட் தாக்கலில் அரசாங்கமே ஏ.சி. பெட்டியைத் தயாரிக்க திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு, அதன்படி அதி சிக்கனமாக பாடாவதி குளிர் பெட்டிகளைத் தயார் செய்தார்கள்.

அடுத்த வருட பட்ஜெட்டில் பத்தாவது, ஒன்பதாவது மாடிகளில் குடியிருப்போருக்கு முதல் கட்டமாக ஏ.சி. இனாமாகப் பொருத்துவது என முடிவாயிற்று. அறிவித்தது போல மாடி மாடியாகத் திட்டம் இறங்கி மூன்றாவது மாடியை அடைவதற்குள் நான்கு வருடமாகிவிடும் போலிருந்தது.


உடைக்கப்பட்ட ஓட்டை வழியே உயர்தர இயற்கை காற்றோடு, கரப்பு, பல்லி, பெருச்சாளி சமயங்களில் பாம்பு என படையெடுத்துவர அந்த இலவச ஓட்டையையும் காசு கொடுத்து அடைத்துவிட்டு உட்கார்ந் திருந்தேன்.

கடைசியில் பத்து, ஒன்பது மாடிக் காரர்களுக்கு ஏ.சி. பொருத்தும் விழா அமர்க்களமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு அடுத்த நாள் இலவச திட்டத்தை அமல்படுத்தப்போவது எப்படி என்பதை ஆட்சியாளர்கள் விவரித்திருந்தார்கள்.

''எங்கள் தேர்தல் வாக்குறுதியின்படி இலவச ஏ.சி. பெற விரும்புபவர்கள் தங்கள் மின்சார கட்டண அட்டையை காண்பித்து அதில் இலவச ஏ.சி.க்கான முத்திரையை வாங்கிக்கொள்ள வேண்டும்'' என்று அறிவித்ததில் முண்டி அடித்துக்கொண்டு முத்திரையைப் பெற மாடி வீட்டு ஏழைகள் ஓடி கூட்ட நெரிசலில் பரமுக்தியடைந்துவிட்ட பரிதாபம் நேர்ந்தது.

இலவச முத்திரை பெற்று இலவச ஏ.சி.யில் ஒரு மாதம் சுகமான நித்திரையை அனுபவித்தவர்களின் நிலையோ இன்னும் பரிதாபமாகிப் போனது. இலவச ஏ.சி. அனுபவித்தவர்களுக்கு மின் கட்டணம் விசேஷமாக ஒரு யூனிட்டுக்கு பன்மடங்காக வசூலிக்கப்படும் என்று தடாலடியாக அரசு அறிவித்ததில், தர்ம ஏ.சி.யில் குளிர்காய்ந்தவர்களுக்கெல்லாம் ஒரு மாதத்துக்கான மின் கட்டணமே ஏ.சி. மிஷின் விலை சமீபத்துக்கு உயர்ந் திருந்தது.



''உண்ணாவிரதம் இருந்த தொண்டர்களை தலைவர் பழி வாங்கிட்டாரு?''

''எப்படிச் சொல்றீங்க?''

''ஜூஸ் கொடுத்து உண்ணாவிரதத்தை முடிப்பதற்குப் பதிலா சிக்கன் பிரியாணி கொடுத்து முடிக்க ஏற்பாடு பண்ணிட்டாராம்!''

- வே.முருகேசன்

''எங்கள் வாக்குறுதியினை எப்படியோ நிறைவேற்றிவிட்டதற்காக எங்களைப் பாராட்டாமல் இதற்கெல்லாம் குறை சொன்னால் நியாயமா சொல்லுங்கள்?'' என்று இந்தத் தேர்தலில் கேட்டுக் கொண்டிருக்கின்றனர் ம.ம.க. கட்சியினர். ●

நானோ டெக்னாலஜி மூலம் பெட்
ாலே தேவையில்லாத நிலை இந்தியா
க்கு வரும் என்ற செய்தியே இனிப்
பத் தந்தது.

- எஸ்.கௌரிலக்ஷ்மி,
ஸ்ரீரங்கம்

அன்பென்னும் மழையிலே... நனைய
யத்தமாகிவிட்டோம். கண்களில்
ரோடு... அது ஆனந்தக் கண்ணீர்!

- ஏ.எஸ்.யோகானந்தம், கோபி

பிட்ச் கியூரேட்டர் பார்த்தசாரதியின்
னுபவங்கள் வித்தியாசமாக இருந்தன.

- த.அசாருதீன், பள்ளப்பட்டி

'சீருடையில் படிந்த அரசியல் சாயம்'
லையங்கம், அரசு அதிகாரிகள் தங்களது
ணியில், பொதுச் சேவையில் எப்படி
டந்துகொள்ளக் கூடாது என்பதை
ணர்த்தியது.

- இ.முகம்மது ஹஸன், திருச்சி



ஆக்ஸிஜன் பெண்ணே...!

சல்மாவின் வாழ்க்கை, முன்னேறத்
டிக்கும் பெண்களுக்கு ஆக்ஸிஜன்
போன்றது!

- அ.குர்ஷித், திருச்சி

பிளாட்ஃபார்ம் காலனி மக்களைப்
பார்க்கும்போது நாம் எவ்வளவோ
பரவாயில்லை என்று தோன்றுகிறது.

- இராஜேந்திரன், லால்குடி

பாயும் புலி, பயமுறுத்தும் கடா -
இப்ப பில்டப் நல்லாத்தான் இருக்கு.
எலக்ஷனுக்கு அப்புறம் அவர்களின்
நிலை என்ன என்பதைப் பொறுத்திருந்து
பார்ப்போம்.

- ஆர்.பிரகாஷ்,
பொன்மலை

தி.மு.க.வின் நேர்தல்
அறிக்கை பற்றிய கார்ட்டூன்,
வயிறு குலுங்க சிரிக்க வைத்து,
சிந்திக்கவும் வைத்தது.

- அ.அப்துல் காதர்,
வினாத்திகுளம்

நீலகிரியில் குளிரைச் சமா
ளிக்க அமரர் கல்கியின்
அட்வைஸ் சூப்பர்!

- கே.வி.ராமன், சென்னை

வட்டமேஜை

திருட்டுப் பயலே...



தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்துக்கு அலேக்கா தூக்கிட்டுப் போற அசத்தல் அட்டெம்ப்ட். 'ஒவ்வொரு குழந்தைக்கும் பெற்றோர்தான் ரோல்மாடல். அவங்ககிட்ட கறையிருந்தா அது குழந்தைங்க மேலயும் படியும். அவங்களோட வாழ்க்கைப் பயணமும் தப்பாவே முடியும்' - இதுதான் இயக்குநர் எடுத்துட்டிருக்கிற கதையோட ஜூஸ். இந்த ஜூஸைப் பிழிய அவர் உருவாக்கியிருக்குற பிரதான பாத்திரம் ஜீவன்.

அஞ்சாம் வகுப்புல எல்லாப் பாடத்திலும் முதல் மார்க் வாங்குற கெட்டிக்காரப் பையன். தாசில்தார் அப்பா, அவரோட லஞ்சப் பணத்தை வாங்கிவர பையனைப் பயன்படுத்தறப்போ தியேட்டர்ல எல்லாருக்கும் ரத்தம் சூடேறுது. அப்பா ஊழல்பேர்வழின்னு தெரிஞ்சு, பையன் ஊதாரியா மாறி, அப்பாவோட ஆபீசுக்கே போய் 'நான் பரீட்சை எழுதல... வாத்தியார்கிட்டச் சொல்லி என்னை பாஸ் போடச் சொல்லு'ன்னு மிரட்டுறப்போ நெஞ்சுக்குள்ள பகீர். பிஞ்சுலயே நஞ்சாயிட்ட ஜீவன், வளர்ந்ததும் தம்பியோட மண்டையை உடைச்சுட்டு சென்னையிலிருக்குற தாய்மாமா வீட்டுல வந்து தங்குறார். இங்க அவரோட ப்ளாக்மெயில்ல சிக்குற பிரபல தொழிலதிபரோட மனைவிகிட்டருந்து பணம் பறிக்கறதும்... சொகுசு வாழ்க்கை வாழறதுமா நகர்ற அவரோட வாழ்க்கையில ஒத்தடமா ஒரு காதல்.

அதுவே அவரை வீழ்த்துற தூண்டிலாகிவிட, தவறான ஒரு வழிப் பாதையில பயணப்பட்டவரால திரும்பி வர முடிஞ்சுதாங்கறதை துறுதுறு த்ரில்லர் திரைக்கதை மூலம் இருக்கையிலேயே ரசிகர்கள பிணைச்சு வச்சு சொல்றார் இயக்குநர். 'காக்க காக்க' படத்துல வில்லனா கலக்கின ஜீவனுக்கு இந்தப் படத்திலும் நெகட்டிவ் ரோல் தான். ஆனா சோனியா அகர்வாலை நிஜமாவே காதலிச்சுட்டு, காதலுக்காக குறுக்கு வழியை மறந்து ஆயிரம் ரூபாய் சம்பளத்துல வேலைக்குப் போற இளைஞனா உருக வெச்சு, சண்டைக் காட்சிகள்ல பதறவெச்சு படம் முழுக்க அசத்தியிருக்கார்.

கொஞ்சம் தவறினாலும் ஆபாசமா முடிஞ்சிடுற ஆபத்து இருக்கறதைப் புரிஞ்சுக்கிட்டு, ஜீவனோட வீடியோ ப்ளாக்மெயில்ல சிக்குற மாளவிகா - அப்பாஸோட தகாத உறவை மிகுந்த எச்சரிக்கையா சித்திரிச்சுருக்குற இயக்குநர் சுசி கணேசனுக்கு ஸ்பெஷல் ஷொட்டு.

ரசனையை உயர்த்திக்கத் துடிக்கும் அனைத்து தரப்பு ரசிகர்களுக்கும் 'திருட்டுப் பயலே' தரமான தீனி.

- லஜ்ஜாவதி


For Exclusive Designs,
Inexpensive Prices !
NARAYANA™
pearls & gems
KASI ARCADE
Next to GRT Hotel,
116,Thyagaraya Road,
T.Nagar, Chennai-17
Ph:004 - 2815 3457 / 5624
FATHIMA PLAZA
98,Pondy Bazaar,
T.Nagar,
Chennai -17.
Ph: 044-2815 5094 / 3660
ADYAR
57, L.B.Road,
(opp.Ganapathi Ram Theater),
Chennai -20.
Ph:044- 24462592
VADAPALANI
1st Floor, RAAHAT PLAZA,
(Near Vadapalani Bus Terminus),
Arcot Road,Chennai-26.
Ph:044-55145092
NUNGAMBAKKAM
G9-ELDORODO BUILDING
N.H.ROAD,
Chennai-34
Ph:044-5218 1463

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

